கல்கி

KALKI 28-4-1974 50 காசு



எஃகு நகரம்
ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்


சாரதா'ஸ்
பட்டுப் புடவைகளுக்கு
நம்பிக்கையான பெயர்
தன் பில்டிங், 175/1, மவுண்ட்ரோடு,
சென்னை-2. போன்: 87177
குதூகலமான
திருமணம் மற்றும்
விசேஷ
வைபவங்களுக்கு
சிறந்த பட்டுப் புடவைகளை
அளிப்பது
சாரதா'ஸ்
32, N.S.B. ரோடு, திருச்சி-2,
போன்: 7077



கோடையில்—
சாதாரணமான சருமம்...
வாடிவிடும் வியர்க்குருவினால்..
Glaxo
nycil
PRICKLY HEAT
POWDER
SOOTHES AND PROTECTS THE SKIN
நைஸில்*
க்ளாக்ஸோ தயாரிப்பு
*டிரேடு மார்க்
காலையிலே குளித்தபின்...
மேனிமீது தூவித் தெளிப்பீர்
நைஸில் பவுடரை
வேர்க்குரு என்றால்
வீசை என்ன விலை
என்று கேட்பீர்கள்!
அபரிமிதமான வியர்வையினால் சருமத் துவாரங்கள் அடைபடும் போது. யாரும் வியர்க்குருவினால் அவதிப் படுவார்கள் என மருத்துவ ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. எரிச்சலும் அரிப்பும் ஏற்படுகின்றன; சருமம் பாதிக்கப் படுகிறது. இதனை எதிர்த்துப் போராடும் குளோர் பென்ஸின் மற்றும் போரிக் பவுடர் அடங்கியது நைஸில் 'ப்ளூ' ஒன்றுதான்-அதோடு உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்புத் தரும் ஸிங்க் ஆக்ஸைடும் அதில் அடங்கியுள்ளது.
SISTA'S-GN-410-TAM B

கல்கி



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பொருளடக்கம்

ஆனந்த, சித்திரை 15 — ஏப்ரல் 28, 1974

மேலட்டை:

சிலையைக் கண்டு சிலிர்ப்பதேன் மேனியே?
தலைவன் வருவான் தவிப்பதேன் மனமே!

வண்ணப்படம்: உத்தரா

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரූ. 27-50
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 33 : இதழ் 39

சுதந்திரம் காக்கச் சுத்தமான சமாஜம்!

கம்யூனிஸ தேசங்களில் மூளையை மழுங்கச் செய்தல் என்பதாக ஒன்றுண்டு. 'பிரெய்ன் வாஷ்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். நல்லபடியாகச் சிந்திக்கத் தெரிந்தவன்கூட இந்த 'பிரெய்ன் வாஷ்'க்கு ஆளான பிறகு, சுய அபிப்பிராயம் இன்றி அதிகாரிகள் சொல்லித் தந்த ஒரே ஒரு கொள்கை அல்லது நோக்கம் உடையவனாக ஆகிவிடுவான்!

நமது நாட்டிலே மூளையை மழுங்கச் செய்யும் காரியம் நடப்பதில்லைதான். ஆனால் அதற்குப் பதில் மூளையைக் குழப்பும் திருப்பணியைத் தயங்காமல் நடத்துகின்றன, அரசியல் கட்சிகள்! ஒவ்வொரு கட்சியினரும் கூட்டம் போட்டு இரவு நீண்ட நேரம் வரை தங்களுக்கே முழுசாக விளங்காத கருத்துக்களை, கொள்கைகளை மக்கள் மண்டையில் திணிக்கப் பார்க்கின்றனர். அதோடு, எங்கள் கொள்கைதான் மக்களை உய்விக்கும் கற்பகத் தரு, காமதேனு என்று ஒவ்வொரு கட்சியும் சொல்லிக் குழப்பத்தைப் பரிபூரணமாக்குகிறது!

இத்தனை குழப்பத்துக்கிடையில் சராசரி இந்தியன் தனது வோட்டின் மதிப்பு தெரியாமல் அதை வீணாக்குகிறான். தனது சுதந்திரங்கள் படிப்படியாகப் பறிபோய்க் கொண்டிருப்பதை அறியாதவனாக இருக்கிறான். வருவாய் போதாமல் தன் குடும்பம் சிரமப்படுவதை அவன் உணர்ந்தாலும் பொருளாதார ரீதியில் நாடே சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதையும் லஞ்ச ஊழல் பாரத புண்ணிய பூமியைப் பாபம் மிக்க தேசமாக்கி வருவதையும் அவன் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்டாலும் பரிகாரங்கள் என்ன என்பதை அவன் அறியவில்லை.

இத்தகைய சூழலில் ஜனநாயகத்தைப் பேணிக் காக்கவும், மக்களிடையே ஜனநாயக உணர்ச்சிகளை ஊக்குவிக்கவும் திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆரம்பித்துள்ள ஜன தந்த்ர ஸமாஜ் என்ற அமைப்பை முழு மனத்துடன் வரவேற்கிறோம்.

இந்த ஜனநாயக சமாஜம் கட்சிச் சார்பற்றது. எந்த அரசியல் கட்சியையும் இது ஆதரிக்காது. அவர்களுக்கு எதிராகவும் பிரசாரம் செய்யாது. தேர்தல்களில் போட்டியிடாது. சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவம் கோராது. ஜனநாயகத்தில் பற்றுள்ள எவரும் இதில் சேரலாம்.

பதவி ஆசையின்றி அரசியல் சார்பற்று இது இயங்குவதால் மக்கள் இதனை முழுமையாக நம்புவார்கள்; தங்கள் சந்தேகங்களுக்கு விளக்கம் பெறுவார்கள். உள் நோக்கமின்றி இந்த அமைப்பும் நல்லது கெட்டதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும்.

பிரஜா உரிமைகளைப் பாதுகாக்கவும், நீதி மன்றங்களின் சுதந்திரத்தை நிலைநாட்டவும், பத்திரிகைச் சுதந்திரத்தைக் காக்கவும், மக்களுடன் தொடர்புள்ள ஸ்தாபனங்களாகிய ரேடியோ, டெலிவிஷன் போன்றவைகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் இந்த ஸமாஜம் இடைவிடாது உழைக்கும். பண பலமும் அதிகாரப் பலமும் தேர்தல்களில் தோற்றுவிக்கும் ஊழல்களைப் போக்குவதற்கான சீர்திருத்தங்களைச் செய்ய இது பாடுபடும்.

ராஜாஜி அவர்கள்கூட, சுதந்திரக் கட்சி பதவிக்கு வரா விட்டாலும் பாதகமில்லை. ஜனநாயக சிந்தனைகளையும் முன்னேற்றகரமான பொருளாதார தத்துவங்களையும் அடிப்படை சுதந்திரங்களின் மேன்மைகளையும் மக்களுக்கு அறிவுறுத்தும் பணியே அதற்கு முக்கியமானது என்று பல முறை கூறியிருக்கிறார். இந்த அத்தியாவசியமான பணியைச் செய்யவே ஜன தந்த்ர சமாஜம் தற்போது முன்வந்துள்ளது. திரு பால்கிவாலா, திரு கிருபளானி போன்றவர்களும் இந்த நன்முயற்சிக்கு நல்லாசி கூறியுள்ளார்கள்.

மற்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், கருத்து ஒற்றுமை இருந்தால், இந்த ஜனநாயக மன்றத்தில் சேரலாம் என்பது இதனுடைய புனிதத் தன்மையை ஒருகால் குலைத்துவிடுமோ என்று சந்தேகிக்கத் தோன்றும். அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்பதைவிட அங்கத்தினர்களின் தரம் உயர்ந்திருப்பதே நல்லது.


மாமனிதர் மறைவு



டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியாரவர்கள் மறைந்து விட்டார் எனும்போது, தமக்கென ஓர் அலாதியான பெருமை படைத்த ஒரு பெருமகனாரை இழந்து விட்டோமே என்ற தாபம் உண்டாகிறது. உலகின் காரியங்கள் எப்போதும் தன் பாட்டில் நடந்து கொண்டுதான் இருக்கிறது; நடத்தி வைக்கிறவர்களான தலைவர்கள் பல துறைகளில் தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் காந்தி மகாத்மாவின் அரசியல் தலைமை நாட்டுக்குக் கிட்டிய அந்தத் தலைமுறையில் பற்பல துறைகளில் சிம்மங்களாகப் பல பெரியோர்கள் தோன்றியது ஓர் அதிசயமே. அவர்களைப் போன்ற திட்டம் படைத்தவர்களை அடுத்த தலைமுறையில் காண முடியத்தான் இல்லை. மெய்யான பாரத சம்பிரதாயத்தில் மனம் தோய்ந்து போனதாலேயே அவர்களுக்கு இந்தத் தனிச் சிறப்புக் கௌரவம் கிட்டியது. அப்படிப்பட்ட அபூர்வ மனிதர்களில் ஆர்க்காட்டுச் சகோதரர்களுக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. இவர்களில் இளையவரான திரு ஏ. எல். முதலியார் அவர்கள் மகப்பேற்று வைத்தியத் துறையிலும், உயர் கல்வித் துறையிலும் ஈடு இணையற்ற ஓர் உன்னத ஸ்தானம் பெற்றிருந்தார்.

சர்வதேசங்களிலும் போற்றி ஏற்றுக் கொள்ளக்கூடிய மகப்பேற்று மருத்துவ நுணுக்கங்களைத் தந்தவர். மருத்துவத்தால் மனிதகுலச் சேவை புரிந்தவர். சென்னை பல்கலைக் கழகத்தில் நீண்டகாலம் துணை வேந்தர் பதவி வகித்து உயர் கல்வித் துறையில் அரசாங்க ஊடுருவலைத் தடுத்த சுதந்திர வீரர். சென்னை பல்கலைக்கழகப் பட்டதாரி என்றாலே பெருமையுணர்ச்சி கொள்ளச் செய்தவர். தமிழக மேல்சபையில் எதிர்க் கட்சித் தலைவராக அருந் தொண்டாற்றியவர். டாக்டர் ஏ. எல். முதலியார் மறைவினால் தமிழகத்தில் 'நிச்சயமாக நிரம்பவொண்ணாத ஒரு வெற்றிடம் தட்டிவிட்டது.





பழைய மருந்துவ





தமிழ் நாட்டிலே...

தீரன்

தியாகம் செய்ய முன் வருக!

திருச்சியில் காலஞ்சென்ற டி. எஸ். அருணாசலத்தின் சிலைத் திறப்பு விழாவில் திரு காமராஜ் அவர்கள் நாட்டு நிலைமை பற்றி மனமாரக் கவலைப்பட்டுப் பேசியிருக்கிறார்.

"லஞ்ச ஊழல், விலைவாசி உயர்வு இவற்றை எதிர்ப்பதில் கட்சி வித்தியாசம் மறந்து அனைவரும் போராட வேண்டும். காந்தியடிகள் போதித்த எளிய முறை வாழ்வை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். இன்று பெரிதாகக் கருதப்பட வேண்டியது தேசிய நலனே. தியாகம் செய்ய முன் வரும் மனப்பான்மை சமீப காலமாகக் குறைந்து போய் விட்டது. தியாக மனப்பான்மை இன்றித் தேச நலனுக்கானவற்றைச் சாதிக்க முடியாது. நம் நாடு இதுவரை எந்த நேரத்திலும் கண்டிராத ஒரு பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஒருவருக்கொருவர் கடந்த காலத் தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கட்சிச் சண்டை போட்டுக் கொள்ளும் நேரம் இது அல்ல. போட்டி பூசல்களிலிருந்தும் வன்முறை அபாயங்களிலிருந்தும் உடனே நாட்டைக் காப்பாற்ற வேண்டும்."

பெரும் தலைவரின் வேண்டுகோளைப் பற்றியும், தேச நலனைப் பற்றியும், எல்லா மக்களும், எல்லாக் கட்சிகளும் உடனே சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்கும் நல்ல புத்தியைக் கடவுள் எல்லோருக்கும் தந்தருள வேண்டும்!

அதற்கும் ஒரு போனஸ்

ஊக்க போனஸ் அளிக்கத் தொடங்கிய பிறகு சென்னை நகர பஸ்கள் ஒவ்வொரு நிறுத்தத்திலும் பிரயாணிகளை நின்று ஏற்றிக் கொள்கின்றன. 'பிரேக்–டவுன்'கள் குறைந்துள்ளன. அதற்காகப் போக்குவரத்து அமைச்சரைப் பலரும் பாராட்டினார்கள். இப்போது இன்னொரு புதிய போனஸைப் பற்றியும் அவர் அறிவித்துள்ளார்

அரசாங்க மயமாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களில் டீஸல் எண்ணெயை அநாவசியமாகச் (இதிலிருந்தே இப்போது அநாவசியம் உள்ளது என்று தெரிகிறது.) செலவழிக்காமல் சிக்கனமாகச் செலவழித்து மிச்சப்படுத்துவதற்காக ஒரு போனஸ் தரப்படுமாம்! ஊழியர்களுக்குப் போனஸ் கிடைப்பதில் நமக்கு மகிழ்ச்சிதான் என்றாலும் ஊழியர்களை இம்முறையில் எதற்கெடுத்தாலும் போனஸ் என்று சொல்லியே உற்சாகப்படுத்துவது என்று வந்துவிட்டால் நாளை, "பிரேக் ஒழுங்காகப் போடுவதற்கு

போனஸ்'' — ''வீதிகளில் எதன் மீதும், எவர் மீதும் மோதாமல் ஓட்டுவதற்கு போனஸ்'' என்று ஊழியர்கள் இயல்பாகவே செய்யக் கடமைப்பட்ட வேலைகளுக்குக்கூடப் போனஸ் தந்துதான் ஊக்கம் அளிக்க முடியும் என்று ஆகிவிடும்.

ஹரிஜனங்கள் உயர....

அர்ச்சகர் பதவியில் அரிஜனங்களை நியமிப்பதற்குத் தடையில்லாதவாறு அரசியல் சாஸனத்தைத் திருத்துமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கோருகிறது.

'அரிஜனங்கள்' என்ற புனிதமான தொடரின் மூலமாகவே மகாத்மா காந்தி அரிஜனங்களைத் தெய்வங்கள் ஆக்கினர். அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரக் கல்வி, சமூக அந்தஸ்து, பெரிய உத்தியோகங்கள் எல்லாம் தர வழி வகுத்தார். ராஜாஜி ஆலயப் பிரவேசம் தந்தார். தாம் நடத்திய லட்சிய ஏட்டுக்கே 'ஹரிஜன்' என்று காந்தியடிகள் பெயர் சூட்டினர். அரிஜனங்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ. பி. எஸ். போன்ற பட்டங்கள் மூலம் பெரிய பதவிகளையும், பொருளாதார வளம் உயரும் வழியையும், வாழ்க்கை அந்தஸ்தையும் தர வேண்டியது அவசியமே. இந்த அவசியத்தை அர்ச்சகர் வேலை பூர்த்தி செய்துவிடுமா? தமிழ் நாடு முழுவதும் பார்த்தால் மாதம் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள அர்ச்சகர்கள் வேலை பார்க்கிற கோயில்கள் நூறு அல்லது நூற்றைம்பது இருக்கலாம். இந்த நூற்றைம்பது கோயில்களில் எத்தனை பேருக்கு வேலை தந்து விட முடியும் ?

ஏற்கனவே பல கோயில்களில் பல்வேறு வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் பூசாரிகளாகவும் அர்ச்சகர்களாகவும் இருக்கவே செய்கிருர்கள் சட்டசபையில் இது பற்றிச் சுயேச்சை உறுப்பினர் திரு கோதண்டராமையா அழகாகப் பேசியிருக்கிருர்;

''பரம்பரை முறை என்பதை வெறுக்க வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக நாகஸ்வரம் வாசிப்பது என்பது சில குடும்பங்களில் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதை எல்லா வகுப்பினரும் வாசிக்கச் சட்டமியற்றிவிடுவதால் என்ன பயன்? ஆகம விதிப்படி தந்தையிடமிருந்து (நாகஸ்வரக் கலை போல) பயிற்சி பெற்ற மகன்தான் சிறந்த அர்ச்சகனாக விளங்குவான். இதில் பரம்பரை முறையில் தான் பலன் உண்டு. அது கேவலம் அல்ல.'' சட்டத்தால் பரிகாரம் தேட வேண்டிய பிரச்னை அல்ல இது. உடனே சகலருக்கும் உரிமை தர வேண்டிய அளவு அர்ச்சகர்களாக இருப்பவர்கள் யாரும் சுபிட்சமாகவும் இல்லை. இந்தத் தலைமுறையில் அர்ச்சகர்களாக உள்ளவர்கள்கூடத் தமது வாரிசுகளை வேறு துறைகளுக்குப் படிக்க வைக்கிருர்கள்.

மகாத்மா காந்தியும், ராஜாஜியும், அரிஜனங்களைத் தெய்வங்கள் ஆக்க முயன்ருர்கள். தி.மு.க. அரசு அவர்களை வெறும் பூசாரிகளாக ஆக்க முடீன்று வருகிறது.

எது பகுத்தறிவு ?

வானெலியில் சமயம் மதம், கடவுள் சம்பந்தமான பிரசாரங்களுக்கும் சொற்பொழிவுகளுக்கும் நேரம் ஒதுக்கப்படுவது போல் 'பகுத்தறிவுப் பிரசாரத்துக்கும் நேரம் ஒதுக்க வேண்டும்' என்று தமிழ்நாடு முதல்வர் திரு கருணநிதி கூறியிருக்கிருர். ஏதோ கடவுள், சமயம், மதம் சம்பந்தமான கருத்துக்கள் அறிவுக்குப் புறம்பானவை போல் தொனிக்கும்படி அவர் பேசியுள்ளார். வானெலியில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதக் கருத்துக்களையும், பிரசங்கங்களையும் ஒலிபரப்புவதன் மூலம் அந்தந்த மத சமயச் சார்புள்ள மக்கள் நற்பயனடைகின்றனர். கடவுள் — அன்பு — அறம் — ஒழுக்கம் ஆகியவை இந்த எல்லா மதத்துக்கும் பொது. இவற்றையெல்லாம் இல்லை என்று பிரசாரம் செய்வதுதான் பகுத்தறிவு என்ருல் அதனுல் யார் எப்படிப் பயனடைவர் என்பது தெரியவில்லை.

''மக்கள் பயனடைய மட்டும்தான் பிரசாரமா ? மக்கள் மனத்தைப் புண்படுத்திப் பிரசாரம் செய்யவும் நேரம் வேண்டுமே'' என்பதுதான் இந்தக் கோரிக்கையின் விளக்க உரை !

ராஜாஜி சிந்தனை

பாலில் வெண்ணெய் மறைந்து இருப்பது போல் மனிதன் உள்ளத்தில் அந்தராத்மா மறைந்து நிற்கிறது. பாலைத் தயிராக்கி அதைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல், உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அதனுள் மறைந்திருக்கும் ஆத்மாவைக் கடைந்து திரட்டி எடுக்க வேண்டும்.

வெள்ளம் ஓடாத ஆற்றில் மணலுக்குள் தண்ணீர் மறைந்து நிற்கிறது. தோண்டினல் ஊற்று உண்டாகும். அவ்வாறே, உள்ளத்தில் மறைந்து நிற்கும் ஈசுவரனையும் அடையலாம்.


அரணியிலிருந்து நெருப்பு உண்டாக்குவது போலும், பாலிலிருந்து வெண்ணெய் கடைந்து திரட்டி எடுப்பது போலும், ஆற்று மணலில் ஊற்றுத் தோண்டித் தண்ணீர் மொண்டுகொள்வது போலும், தவத்தினல், அதாவது மனத்தையும், புலனையும் அடக்கித் தியானம் செய்வதனல் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் பரமாத்மாவைத் தரிசியுங்கள் என்று உபநிஷதத்தில் உபதேசம் செய்யப்படுகிறது.


பருத்தித் துணிகளிலே
பளிச்சிடும் ஃபாஷன் பிரிண்டுகள்
சிங்காரமும், சிக்கனமும் சிறந்திடும்
கே. ஆர். காட்டன்கள். பல வண்ணக்
கோலங்களில், பரவசமூட்டும்
டிசைன்களில். உங்கள் கவர்ச்சிக்கே
உரிய வகையில்.
பருத்தித் துணிகளில்
நவநாகரிகத்தின் உருவகம்
கே.ஆர்.மில்ஸ்
மைசூர்

KRCM-I-74

உங்கள் குடும்பத்தினரின்
உடல்நலம் ஓங்கியிருக்க
அவசியம் அளியுங்கள் மிகச்
சிறந்ததையே

அவர்களுக்கு விவா கொடுங்கள்.



ASP/JIL-V-IA/73 TAM

விவா நூதன உணவு தொழில் நுட்பத்திறமையில் உருவானது. இதில் மற்ற ஆரோக்கிய உணவுப் பானங்களில் உள்ளதைப்போன்று தூய்மையான, முழுமை பெற்ற ஆடைப்பாலும் பார்லி மால்ட்டும் உள்ளன. ஆயினும் விவாவில் மட்டுமே கோதுமை மால்ட் அடங்கியுள்ளது.

கோதுமை மால்ட் எதற்கு?


எதற்கெனில், அதில் வளமைமிக்க கார்போஹைட்ரேட், புரதங்கள், விடமின்கள் மற்றும் கனிஜ சத்துக்கள் எளிதில் சீரணிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோதுமை மால்ட் கலந்திருப்பதால் விவா அதிக அளவு ஊட்டச்சத்து உள்ளதாய், பூரணமான இன்சுவையோடு, வளமிக்க பொன்னிறம் கொண்டு, உடனடியாகக் கரையும் தன்மையோடு விளங்குகிறது.

ஆகவே, உங்கள் அன்றாட உணவிலுள்ள பற்றாக்குறைகளை ஈடுசெய்ய சரியான, போதுமான ஊட்டச் சத்து அளிக்கவேண்டுமென்றால் அதற்கு விவா போல வேறு எதுவும் சிறந்ததல்ல

மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்க இதோ அரியதொரு வாய்ப்பு.

விவாவையே தேர்ந்தெடுங்கள்.



இந்தியாவில் தயாரிப்போர்,
ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விவா

உற்சாகமான ஆரோக்கிய வளர்ச்சிக்கு தினமும் விவா.

அம்பாளை உபாசிப்பதன் பலன்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

அம்பாளிடம் நாம் இன்னின்ன வேண்டும் என்று சொல்லிப் பிரார்த்திக்க வேண்டிய அவசியமே இல்லை. ''உனக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? ஆனாலும், மலயத்துவஜ பாண்டியனின் புத்திரியான மீனாக்ஷி! மனசில் உள்ள குறையை வாய் விட்டுச் சொல்லா விட்டால், அது உள்ளுக்குள்ளே உறுத்திக் கொண்டேயிருக்கிறது. அதனால்தான் இப்படிப் பிரார்த்தனை பண்ணுகிறேன்'' என்று நீலகண்ட தீக்ஷிதர் 'ஆனந்த ஸாகர ஸ்தவம்' என்கிற ஸ்தோத்திரத்தில் சொல்கிறார்.

நாம் கேட்காவிட்டாலும் அம்பாளை உபாசித்து விட்டால் அவளே அநேக அநுக்கிரகங்களைப் பண்ணுகிறாள். முதலாவதாக நல்ல புத்தி உண்டாகிறது. மனசில் நல்ல எண்ணங்களே உண்டாகின்றன. நல்லதைச் செய்வதற்கான வழி புத்தியிலே பளீரென்று அடிக்கிறது. லோக க்ஷேமத்தைச் செய்வதற்கான திரவிய பலமும் தானே கிடைக்கிறது. எல்லாரிடத்திலும் சமமான அன்பு உண்டாகிறது. மனசில் இந்த அன்பு ஊறாமலே வாய்ப் பேச்சில் இன்று 'சகோதர சகோதரிகளே' என்று பிரசங்கம் பண்ணி சமத்துவத்தைப் பற்றி நிறையப் பேசுகிறோம். அம்பாளிடம் பக்தி பண்ணாத வரையில் இது அநுபவத்தில் வராத வாய்ச் சவடால்தான். சாக்ஷாத் ஜகன்மாதாவைத் தெரிந்து கொண்டாலே, உண்மையாக அவள் ஒருத்திதான் இத்தனை பேருக்கும் அம்மா, லோகத்தில் உள்ள பசு, பட்சி உள்பட நாம் இத்தனை பேரும் அவள் குழந்தைகள்தான், அதனால் நாம் எல்லோரும் வாஸ்தவமாகவே சகோதர சகோதரிகள் என்ற உண்மையான அன்பு உணர்ச்சி உண்டாகிறது. அவளைத் தெரிந்து கொண்டால் அதன் பின் நமக்குள் வெறுப்பு, துவேஷம் வரவே வராது. தப்புக் கண்டு பிடிக்க வராது. தப்பு நடக்கிறபோதுகூட அதைப் பரிவோடு திருத்துகிற மனப்பான்மை வருமே தவிர, தப்பைப் பிரகடனம் பண்ணிச் சண்டையில் இறங்கத் தோன்றாது. அம்பாளை உபாசிப்பதால் லோகம் முழுக்க ஒரு குடும்பம் என்கிற இந்த அன்பு உணர்ச்சி உண்டாகிறது. பகைவன், சிநேகிதன் என்கிற வித்தியாசமே காமாக்ஷியின் கடாக்ஷம் பெற்றவர்களுக்கு இராது என்கிறார் மூகர்.

எல்லாம் சமமாகத் தெரிகிற ஞானநிலையின் உச்சிக்கே அம்பாளின் அநுக்கிரகம் நம்மைக் கொண்டு சேர்க்கிறது. ''அவள் அம்மா; அவளுடைய குழந்தைகளே நாம் எல்லாரும்'' என்பதற்கு மேலே ஒரு படி போய் — அம்மா, குழந்தை என்கிற வித்தியாசம் கூடப் போய் — எல்லாமே அவள்தான் என்று தெரிகிறது. 'ஒரு சக்திதான் இத்தனையும் ஆகியிருக்கிறது. ரூபங்களில்தான் பேதம். உள்ளே இருக்கிறது ஒன்றுதான்' என்கிற பரம அத்வைத ஞானம் சித்திக்கிறது. இதைத்தான் மூகர் சொல்கிறார் — ''சிவ சிவ பச்யந்தி ஸமம்'' என்கிற சுலோகத்தில். ''காமாக்ஷியின் கருணா கடாக்ஷ வீக்ஷண்யம் பெற்றவனுக்குக் காடும் வீடும் சமமாகத் தெரிகின்றன; சத்ருவும் மித்ரரும் சமமாகத் தெரிகின்றனர்'' என்கிறார்.

அம்பாளைத் தாயாராகவும் நம்மைக் குழந்தையாகவும் வைத்துக் கொண்டு உபாசிக்க ஆரம்பித்தாலும் கூட, அவளே காலக் கிரமத்தில் இந்த இரண்டும்கூட ஒன்றேதான் என்கிற பரம ஞானத்தை அநுக்கிரகம் செய்கிறாள். இதை ஆச்சாரியாள் ஒரு சிலேடை மூலம் காவிய நயத்தோடு 'ஸௌந்தர்ய லஹரி'யில் சொல்கிறார்.

''பவானி, உன்னுடைய அடிமை நான்'' என்று பக்தன் துதிக்க ஆரம்பிக்கிறானாம். 'பவாநி த்வம்' — ''பவானி உன்னுடைய'' என்று இவன் சொல்லுகிறபோதே அம்பாள் இவனுக்கு 'பவானித்வம்' என்கிற நிலையை அநுக்கிரகித்து விடுகிறாள் என்று சிலேடை பண்ணுகிறார். இங்கே 'பவானி' என்றால் 'ஆகிவிடுகிறேன்' என்று அர்த்தம். ''தீர்க்க ஸுமங்கலீ பவ'' என்கிறோமே, இங்கே 'பவ' என்றால் 'ஆவாய்' என்று அர்த்தம். 'பவானி' என்றால் ஆகிறேன். 'பவானித்வம்' — 'நீயாகவே நான் ஆகிவிடுகிறேன்'. எல்லாம் பிரம்மம்தான் என்கிற அத்வைத ஞானம் உண்டாகி இப்படிச் சொல்கிறான் பக்தன். தாஸனாக இருக்கப் பிரார்த்தித்தவனைத் தானாகவே ஆக்கிக் கொண்டு விடுகிறாள் அம்பிகை. இதற்கு மேற்பட்ட அநுபவமோ, இதற்கு மேற்பட்ட பரம தாத்பரியமோ வேறு கிடையாது. என்றைக்கும் அழியாத ஆனந்தமான ஆத்ம ஞானத்தை அம்பாளின் உபாசகன் பெற்று விடுகிறான்.

ஸ்ரீ ஆதிசங்கரர் லட்சார்ச்சனை

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி கோவிலில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளுக்கு லக்ஷார்ச்சனை ஏப்ரல் 23ந் தேதியிலிருந்து மே மாதம் 6ந் தேதி வரை நடைபெறுகிறது. ஸ்ரீ ஆதிசங்கரர் லக்ஷார்ச்சனையில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் எட்டு ரூபாயை பொக்கிஷதார், ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா, 116-ஏ, ராஜவீதி, காஞ்சிபுரம்-2 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.



அட்டவணை நேரத்துக்குச் சரியாக அந்த மின்னல் வேகத் துரித பஸ் எங்களைச் சென்னைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது.

பஸ்ஸை விட்டு இறங்கியதும், ''பசிக்கிறது அம்மா'' என்றாள், லதா. ஹோட்டலுக்குப் போய்ச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டோம். அடுத்து...

என் கணவரை ஏறிட்டுப் பார்த்தேன்.

பலமான யோசனையின் அறிகுறியாக வலை பின்னிக் கிடந்தது அவரது முகம்.

லதாவை ஜெனரல் ஆஸ்பத்திரியில் காட்டி மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். அதற்குத்தான் திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்திருக்கிறோம் நாங்கள். எப்போது ஆஸ்பத்திரிக்குப் போவது, எப்படி டாக்டரைச் சந்திப்பது என்று யோசிக்கிறாரோ என் கணவர்?

கேட்டேன்.

''அதில்லை, சுமதி'' என்று மறுத்தவர், மோவாயை அழுத்தத் தேய்த்தார். ''ராத்திரிக்கு நாம் தங்கிக் கொள்ள ஓர் இடம் வேண்டும், இல்லையா?''

''ப்பூ'' அலட்சியமாகச் சிரித்தேன் நான். ''தடுக்கி விழுந்த இடமெல்லாம் லாட்ஜாக இருக்கிறது. அதற்குப் போய்ப் பிரமாதமாய் யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறீர்களே!''

''போதுமடீ என் ஞானத் தங்கம்! இவ்வளவு பெரிய பட்டணத்தில் லாட்ஜ் இருப்பதை நீ சொல்லித்தான் நான் தெரிந்து கொள்ளணுமாக்கும்!'' கேலியாக என்னைப் பார்த்தார், அவர்.

''பின்னே?''

''நமக்கு இடம் வேண்டும். அதே சமயம் பணமும் செலவழியக் கூடாது.''

திடுக்கிட்டேன், நான். ''அதெப்படி முடியும்?''

''அதுதான் சாமர்த்தியம்.''

மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார் அவர். சற்றைக்கெல்லாம் குப்பென்று ஒரு மலர்ச்சி. ''அப்பாடா... இப்போதுதான் ஞாபகம் வந்தது....''

''என்ன?''

''பானு என்ற ஒரு சிநேகிதன் ரயில்வே ஆபீசில் வேலை செய்கிறான். நான் டிவிஷன் ஆபீஸில் இருந்தபோது நானும் அவனும் ஒரே செக்ஷனில் வேலை பார்த்தோம்.''

''நீங்கள் ரயில்வேயில் சேர்ந்தபோதா? இப்போது பத்து வருஷத்துக்கு மேலாகிறதே! உங்களைப் போல் அவரும் வேறூர் உத்தியோகம் மாறிப் போயிருந்தால்...?''



போதுமடா, ஞானத்தங்கம்!

தமிழ் இனியன்

''நிச்சயமாய்க் கிடையாது. போன வாரம் திருச்சியில் ஒரு ரயில்வே உத்தியோகஸ்தரைச் சந்தித்தேன். பானு இன்றுவரை அதே மேஜை நாற்காலியோடுதான் கொஞ்சிக் குலாவுகிறானும்.''

''இருந்தாலும் எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் திடுமென்று அவர் வீட்டுக்குப் போவது எனக்கென்னவோ அத்தனை உசிதமாகப் படவில்லை.''

''சட்! அசட்டுத்தனமாக ஏதாவது உளறி வைக்காதே! பணத்தை மிச்சப்படுத்தனும் என்றால் இக்காலத்தில் சங்கோசமெல்லாம் பார்க்கக் கூடாது'' என்று முறைப்புடன் பகர்ந்தார் அவர்.

நான் பதில் பேசவில்லை. எனக்குத் தெரியாதா என் கணவரின் மனப் போக்கு?

அவர் எப்போதுமே இப்படித்தான்! கம்பெனிக் காரியமாக அடிக்கடி அவருக்கு வெளியூர் 'காம்ப்' வரும். அச்சமயங்களில் பிரயாணப்படி, தினப்படி, லாட்ஜ் அலவன்ஸ் இத்தனையும் அட்வான்ஸாகவே கை கொள்ளாமல் வாங்கிக் கொள்வார், அவர். ஆயினும், போகும் இடங்களில் லாட்ஜில் தங்கிக் கொள்ள அவருக்கு மனம் வராது. பழைய பரிச்சயம் ஏதாவது இருக்குமா என்று ஆராய்வார். தொடர்பு விட்டுப் போனது பற்றியோ, அகாலவேளை என்றோ கருதிக் கொண்டிருக்க மாட்டார். எப்படியோ தேடிப் பிடித்து நட்பைப் புதுப்பித்துக் கொண்டு அவர்களின் வீட்டில் கட்டையைச் சாய்ப்பதுதான் அவருடைய வாடிக்கையான வழக்கம்.

சிக்கனம் நம் அளவில் இருந்தால் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் அது மற்றவர்களுக்கு — எதிர்பாராத செலவாகையால் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் — எத்தனை இடைஞ்சல்? இதுவா நாகரிகம்? நட்பென்ற போர்வையில் இப்படித்தானா இங்கிதமின்றி நடந்து கொள்வது? இதை எத்தனையோ தடவை அவருக்கு எடுத்துச் சொல்லி விட்டேன். அவர் புரிந்து கொண்டால்தானே! இதோ... மனைவி, குழந்தையுடன் ஆஸ்பத்திரிக்கு வந்த சந்தர்ப்பத்தில்கூட, ஏதோ குடும்ப சகிதம் விருந்து போவது போல் பழைய சிநேகிதரைத் தேடுகிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

''சுமதி! ஒரே ஒரு நிமிஷம். இங்கேயே இரு. பக்கத்தில்தான் இருக்கிறது பானுவின் ஆபீஸ். ஓடிப்போய் அவனது வீட்டு முகவரியை வாங்கி வருகிறேன்'' என்று அவர் நகர்ந்தார்.

''இப்போது ஆபீஸ் நேரம் முடிந்திருக்குமே!''

''உண்மைதான். ஆனால் பியூன், காவல்காரன் யாராவது இருப்பார்கள்.''

என் பதிலுக்குக் காத்திராமல் ஓடியவர் கால் மணி நேரத்தில் திரும்பி வந்தார்.

அவர் கொண்டு வந்த முகவரியைப் பார்த்தேன். திருவல்லிக்கேணியில் இருந்தது பானுவின் வீடு. ஆட்டோ வைத்துக் கொண்டு புறப்பட்டோம்.

''அடடே ... கணேசனா, வா வா'' என்று அவரையும், ''வாங்க, வாங்க...'' என்று என்னையும் வாய் கொள்ளாமல் வரவேற்றவர், பானுதான். பரவாயில்லை. அதிர்ச்சியோ, அதிகப் பரபரப்போ இன்றி வரவேற்ற விதத்தைப் பார்த்தால் உற்சாகமாகவே இருந்தது.

நண்பர்கள் இருவரும் பத்து வருட இடைவெளியைப் பத்து நிமிடங்களில் பேசி முடித்தனர். ''அப்பா...'' என்று தயங்கியபடி வந்தான் கண்ணாடி அணிந்த ஓர் ஒட்டைச் சிவிங்கி. மூத்த பையனும்.

''என்னடா சீனு?''

''தாத்தாவுக்கு மாத்திரை காலி.''

''அப்படியா'' என்று பர்சைப் பிரித்தார், பானு. ''நான் ஒரு மடையன்'' என்று தலையில் தட்டிக் கொண்டார்.

''என்ன?''

''வரும் போதே நூறு ரூபாய் நோட்டை மாற்றாமல் வந்து விட்டேன். ஏன் கணேசன், உன்னிடம் நூறு ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா?''

''இல்லையே?'' என்று கைவிரித்த என் கணவர் ஒரு மரியாதைக்காக, ''மருந்து என்ன விலை?'' என்றார்.

''பத்து ரூபாய் ... முப்பது காசு.''

விலையைக் கேட்ட பிறகு அவரால் சும்மா இருக்க முடியவில்லை. ''வேண்டுமானால் நான்....'' என்றவராய் பாண்ட் பையில் கையைத் திணித்தார்.

பானு, ஓர் ஒப்புக்காக வேண்டியேனும் அதை மறுக்கக் கூடாதோ! ''அதைத்தான் நானும் நினைத்தேன். நீ பத்து ரூபாய் மட்

வாரி வழங்கும் வாரணமுகன்

லட்சுமி தேவி வந்து நின்றதால் திருநின்றவூர் என்ற பெயர் கொண்ட பதியில், லட்சுமிபுரம் என்னும் பகுதியில், லட்சுமி விநாயகருக்கு ஆலயம் அமைக்கப்படுகிறது. அருட் செல்வம், பொருட் செல்வம் இரண்டையும் வாரி வழங்குபவர் லட்சுமி விநாயகர். ஸ்ரீ காஞ்சி பரமாசாரியர்களின் பரம அநுக்கிரகத்துடன் எழுப்பப்பெறும் இவ்வாலய விநாயகர் வரப்பிரசாதியாக விளங்குவார் என நம்பலாம். விநாயகர் கோவிலில் நவக்கிரக சந்நிதியும் காலட்சேப கூடமும் நிறுவத் திட்டமிட்டுள்ளனர். இப்பணிக்குத் தேவைப்படும் ரூ. 40,000 அதிவிரைவிலேயே திரளுவதற்கு நண்பர்கள் அடியிற் காணும் முகவரிக்குப் பொருள் அனுப்ப வேணும். திரு பி. சுப்பைய நாயுடு, பொருளாளர், லட்சுமி விநாயகர் ஆலயத் திருப்பணி, லட்சுமிபுரம், திருநின்றவூர், செங்கற்பட்டு மாவட்டம்.

டும் சீனுவிடம் கொடு. அப்புறமாய் உனக்கு மாற்றித் தருகிறேன்'' என்றார், குரலில் பிசிறோ, தொய்வோ இல்லாமல்.

கொஞ்ச நேரம் கழிந்தது.

''மாமோவ்...'' என்று ஒரு வாண்டு ஓடி வந்து கணவரின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டது.

''மூன்றாவது பெண் ரமா. படுசுட்டி. வாய் கொடுத்தால் மீள முடியாது'' என்று அணிந்துரை வழங்கினார் பாலு.

என்னவரின் பாண்டிலிருந்து பர்சை உருவினாள், ரமா. அப்பாவின் பாராட்டைக் கண் முன்னால் நிரூபிக்கிறாள் என எண்ணிக் கொண்டேன் நான்.

''காசு வேண்டுமா, பாப்பா?'' என்றார் இவர், கொஞ்சலாக.

''ஆமாம், மாமா.''

கால் ரூபாய் நாணயமொன்றை அவர் எடுத்துக் கொடுத்தார். அந்தச் சுட்டிப் பெண் போட்டாளே ஒரு குண்டு!

''போ மாமா! இந்தக் கால் ரூபாய் யாருக்கு வேண்டும்? ஒரு ரூபாய் கொடு மாமா!'' என்றதும் அப்படியே அசந்து போனேன் நான்.

பெற்றவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார், புன்னகை வழியும் முகத்துடன். அவர் முன்னிலையில் அவரது குழந்தையின் 'எளிய' கோரிக்கையை எப்படி மறுக்க முடியும்?

ஒரு ரூபாய் நோட்டோடு ரமா மறைந்த இரண்டாவது நிமிடம், ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி ஆடிக் கொண்டே வந்தாள்.

''மாமா... மாமா திருச்சி மாமா! ரமாக் குட்டிக்கு ஒரு ரூபாய் கொடுத்தாயாமே, எனக்கு?'' என்று பாடிக் கொண்டே கை நீட்டினாள்.

அடுத்த ஒரு ரூபாய் நோட்டு, அவுட்டு.

இத்தனை 'வழிப்பறிகளையும்' பாலு சர்வ சாதாரணமாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாரே தவிர, வீடு தேடி வந்த மனிதரிடம் குழந்தைகள் அட்டகாசம் அடிக்கிறதே என்று ஓர் அதட்டல் போட வேண்டுமே?

ஊஹூம்.

பொழுது விடிந்தது.

''ஏ, லட்சுமி! எனக்கு இன்று இரண்டாம் சனிக்கிழமை. ஆபீஸ் லீவுதான். கணேசன் வேறு வந்திருக்கிறான். சமையல் இன்றைக்கு 'ஏ'கிளாசாக இருக்க வேண்டும்'' என்று மனைவிக்குக் குரல் கொடுத்தார், பாலு.

பெரியவன் சீனு தலையைச் சொறிந்து கொண்டு வந்தான்.

''முன்னதாகப் போனால்தான் அப்பா, நல்லதாய்க் கறிகாய் வாங்கலாம்'' என்றான் எதுகை குலையாமல்.

''போவேண்டா. உன்னை யார் காலைக் கட்டி வைத்தார்கள்?''

''பணம்?''

''ஓ..ஐ..ஆம்...சாரி!'' பாலு பர்சை எடுத்தார்... ''சை..! ஏதோ என்னிடம் சில்லறைப் பணம் இருக்கிற நினைப்பில் மறுபடியும், மறுபடியும் பர்சை எடுக்கிறேனே! ம்.... எவ்வளவு ரூபாய்க்குக் கறிகாய் வாங்கப் போகிறாய்?''

''தேங்காயும் வேண்டும் என்கிறாள், அம்மா. ஐந்து ரூபாய் இருந்தால் போதும்.''

பாலுவின் பார்வை வினயத்துடன் என் கணவரிடம் திரும்பியது. அதைப் புரிந்து கொண்ட அவர், ''ஐந்து ரூபாய் இல்லை. பத்து ரூபாயாகத்தான் இருக்கிறது'' என்றார் தட்டிக் கழிக்கும் நோக்கத்தில்.

பாலு, அப்படியும் விடவில்லை.

''ஏ சீனு! பத்திரமாய் நோட்டை வாங்கிப் போய், மீதி ஐந்து ரூபாயை மாமாவிடம் கொண்டு வந்து கொடுத்து விடு'' என்று சரளமாய் உத்தரவிட்டார்.

என் கணவரின் பர்சிலிருந்து இரண்டாவது பத்து ரூபாய் மௌனமாய் வெளியேறியது.

ஆஸ்பத்திரியில் ஏகக் கூட்டம்.

டாக்டரைப் பார்த்து மருந்து எழுதி வாங்குவதற்குள் மணி பன்னிரண்டாகி விட்டது. அதற்கிடையில் லதா எங்கோ திடீரென்று காணாமல் போய் விட்டாள். ஆஸ்பத்திரி எல்லைக்குள்தான். அவளைத் தேடினோம். ஒருவழியாகக் கண்டு பிடித்து, கடிகாரத்தைப் பார்த்தால், மணி — இரண்டு.

பசி, வயிற்றைக் கிள்ளியது.

''இங்கேயே ஏதாவது டிபன் சாப்பிடுவோமே'' என்றேன்.

''வேண்டாம். பசி குறைந்து விடும். நமக்காக ஸ்பெஷல் சாப்பாட்டுடன் காத்திருப்பான் பாலு'' என்று தடுத்து விட்டார் அவர்.

மூன்று மணிக்கு வீடு திரும்பினோம்.

சாய்வு நாற்காலியில் தொந்தி மலரச் சரிந்து கிடந்த பாலு, மெள்ள நிமிர்ந்தார்.

''எனக்கு அப்போதே தெரியும், இந்த ஊர் ஆஸ்பத்திரிக்குப் போனால் சீக்கிரம் திரும்ப மாட்டீர்கள் என்று. இன்று அருமையான சாம்பாரும், கறியும் பண்ணி வைத்திருந்தாள், என் மனைவி. பாவம், உங்களுக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. சாப்பாடு நேரம் கடந்து விட்டது. நீங்கள் ஓட்டலிலேயே சாப்பிட்டிருப்பீர்கள் என்று ஒரு சுற்று அதிகமாகவே எல்லோரும் சாப்பிட்டு விட்டோம். எந்த ஹோட்டலில் நீங்கள்


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
விசேட
10%
தள்ளுபடி
20-வது அகில இந்திய கைத்தறி இருவார கண்காட்சி
இடம்: பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-600008.
1974 ஏப்ரல் 28 முதல் மே 12 வரை.
Criterion CO 3083 TMC
பருத்திப் புடவைகள், வேட்டிகள், லுங்கிகள், கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள், புகழ்பெற்ற காஞ்சிபுரம், ஆரணி மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்.

தலைமை ஏற்கவரும் தலைமுறை



திரு வல்லபதாஸ்

இருபத்தைந்து வயதிலிருந்து நாற்பது வயதுக்குள் உள்ளவர்கள் தலைமைப் பொறுப் பேற்கும் தகுதிகளை அடைய உதவி புரியும் அகில உலக ஜெய்சீஸ் இளைஞர் ஸ்தாபனத்தின் இந்தியத் தலைவர் வல்லப தாஸ் அவர்களிடம், ''நீங்கள் செய்த பணிகளில் மிகச் சிறந்த ஒன்றைச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டதும் கூறுகிறார்:

''எங்கள் ஜெய்சீஸ் இளைஞர் குழு சமீபத்தில் எடுத்துக் கொண்ட பணிகளில் மகத்தானது சுய வேலை வாய்ப்பு முயற்சி. பட்டதாரிகள் வீட்டில் அமர்ந்தபடியே வேலை கிடைக்கவில்லை என்று முனகினால் பயன் கிட்டுமா? எங்களை அணுகினால் அவர்களுக்குச் சிறு சிறு தொழில் நிறுவனங்கள் நிறுவ உதவி செய்து வருகிறோம். ஒரு வருஷ காலத்தில் ஜெய்சீஸ் இளைஞர் குழு ஸிண்டிகேட் பாங்கிடமிருந்து 13 லட்ச ரூபாய் நிதி 167 இளைஞர்களுக்குக் கிடைக்க வழி வகுத்துத் தந்திருக்கிறது. எஸ். எஸ். எல். ஸி. தேறிய ஒருவர் டைப்ரைட்டிங் கலையில் விற்பன்னர். அவருக்கு ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் தொடங்க நிதி உதவி கிடைக்க வழி செய்திருக்கிறோம். இதே மாதிரி கோழி வளர்ப்புப் பண்ணை, போட்டோ ஸ்டுடியோ, அச்சகம் ஆகிய சிறு சிறு நிறுவனங்களை இளைஞர் தொடங்க நாங்கள் ஸிண்டிகேட் பாங்கில் நிதி உதவி கிடைக்க உதவியிருக்கிறோம்!''

வெள்ளி விழா ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்த ஜெய்சீஸ் இளைஞர் ஸ்தாபனங்களில் பத்தாயிரம் இளைஞர்கள் அங்கத்தினர்களாயுள்ளார்கள். நோமன் எச். மில்வாலா சென்னை ஜெய்சீஸ் தலைவர். அவரிடம் சென்னை ஜெய்சீஸை அறிமுகப் படுத்தி வைக்குமாறு கோரியதும் சாதனைகளை அடுக்குகிறார்: ''நாங்கள் இன்ஜினியரிங் வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கு 'புக் பாங்க்' நடத்தி வருகிறோம். பேச்சுக் கலையில் சிறந்து விளங்கப் பயிற்சி முகாம் நடத்துகிறோம். குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கி வருகிறோம். எங்கள் சேவைகளை விளக்க 'லீடர்' என்ற ஒரு பத்திரிகையே நடத்துகிறோம்!''

அடேயப்பா! அந்த அளவுக்குப் பொதுத் தொண்டு புரிகிறார்களா என்று வியக்கத் தோன்றுகிறதல்லவா? —பீ. எஸ். மணி

சாப்பிட்டீர்கள்? ரோஸ் லேண்டா, பிக்னிக்கா......''

பசியில் குமுறும் எங்கள் வயிற்றில் எண்ணெயை ஊற்றியது போல் இருந்தது, பானுவின் பேச்சு. மென்று விழுங்கிக் கொண்டோம்.

என் கணவரின் பார்வை, பானுவின் மூத்த மைந்தனைத் தேடித் துழாவியது. மீதி ஐந்து ரூபாய் இன்னும் வாங்கவில்லையே!

''எங்கே சீனு?''

''மாட்னிக்குப் போயிருப்பான்.''

என் கணவரின் பணம் நல்ல வெள்ளோட்டம் போகிறது.

''அதுசரி, கணேசன், டாக்டர் என்ன சொன்னார்?''

''மருந்து எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆறு மாதங்கள் கழித்து மறுபடியும் கொண்டு வந்து காட்ட வேண்டும்.''

''ஏதோ ... உன் மகனின் பேரால் மறுபடியும் நாம் சந்திக்கப் போகிறோம்'' என்று இதழ் பிரியச் சிரித்தார், பானு.

என் கணவருக்குத் தலைவெடிக்குமான ஆத்திரம். பல்லை நறநறத்தவராய் ''ஆமாம்'' போட்டார்.

அன்றிரவு.

மலைக்கோட்டை எக்ஸ்பிரஸில் நாங்கள் ஊர் திரும்பிக் கொண்டிருந்தோம்.

''அடுத்த தடவை சென்னை வரும்போதும் பானுவின் வீட்டிலேயே தங்குவோமா?'' என்றேன், நான்.

''மூடு வாயை! நண்பனா அவன்? படுபாவி. லாட்ஜில் டபின் ரூம் எடுத்திருந்தால் பதினைந்து ரூபாயோடு போயிருக்கும். அதற்குப் பயந்து இவன் வீட்டுக்குப் போனால் இருபத்து நாலு ரூபாய் காலி. பரதேசிப்பயல்...'' என்று படபடவெனப் பொரிந்தார், அவர்.

நான் புன்முறுவலுடன் கேட்டேன். ''ஏன் அத்தான் இரண்டு ரூபாய் அதிகம் சொல்கிறீர்கள்? சீனுவிடம் இருபது ... இரண்டு குழந்தைகளுக்கும் தலைக்கு ஒரு ரூபாய். ஆக மொத்தம் இருபத்திரண்டு ரூபாய்தானே?''

''அந்த மூதேவிப் பயல் ஆபீசுக்குப் போய் முகவரி சேகரித்ததில், பியூனுக்கு இரண்டு ரூபாய் அழுதேன்.''

''ஓஹோ... உங்கள் திருப்பணி அட்ரஸ் வாங்கும்போதே ஆரம்பமாகி விட்டதா?''

என் கணவரிடமிருந்து பதில் இல்லை! பாவம்... அவர் முகத்தைப் பார்க்க எனக்கே கஷ்டமாகத்தான் இருந்தது. ஆயினும், இனி தக்க முகாந்திரம் இல்லாமல் திடீர் விருந்தாளியாக எங்கும் பிரசன்னமாகா இருக்க அவருக்கு ஒரு பாடம் கிடைத்ததே!

அதை நினைத்தேன்; மகிழ்ந்தேன்.



▲ லண்டனின் பழமையான டவர் பாலத்துக்கு அருகே புதுமையான சிற்பம் காட்சியளிப்பதானது பழமைக்கும் புதுமைக்கும் பிரிட்டன் பாலமமைப்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்தச் சிற்பத்தினை உருவாக்கிய கலைஞர் டேவிட் வைன் கலைக்கல்லூரி எதிலும் போய்ச் சம்பிரதாயமான முறையில் படித்ததில்லை. என்றாலும் லண்டனில் இவரது சிற்பங்கள் இடம் பெற்றுள்ள அளவில் வேறு எந்த சிற்பியினுடையதும் இல்லை! பலசிற்பக் கலைஞர்களை அணுகி யோசனைகளை, அறிவுரைகளைப் பெற்றுள்ள டேவிட், சிறந்த சிற்பியாக விளங்கப் புத்திசாலித்தனமும் கடுமையான உழைப்பும்தாம் தேவை என்கிறார்.



▲ 1920ல் தியாகி அருணாசலம் தம் வாழ்க்கையைச் சாதாரணத் தொண்டராகத் தொடங்கி, விடுதலை இயக்கத்தில் முழு மூச்சோடு ஈடுபட்டார். உடல் நிலையைப் பாதிக்கும் அளவுக்குப் பலமுறை கடுஞ் சிறைவாசம் அனுபவித்தவர். தமிழக அரசியல் வாழ்க்கையில் முக்கிய பங்கு பெற்ற திரு அருணாசலம், தமிழக சட்டசபையிலும் மேல் சபையிலும் அங்கத்தினராக இருந்தவர். திருச்சியில் தியாகி டி. எஸ். அருணாசலத்தின் சிலையைத் தலைவர் காமராஜர் சமீபத்தில் திறந்து வைத்தார்.



▲ அமெரிக்க ருஷ்யக் கூட்டுறவின் ஓர் அம்சமாக 1975 ஜூலை மாதத்தில் இரு நாட்டு விண்வெளி வீரர்களும் தங்கள் விண்கலன்களை விண்வெளியில் இணைப்பர். அப்பாலோவும் ஸோயுஸும் இணைந்த நிலையிலேயே உலகைச் சுற்றி வரும். இந்தக் கூட்டு முயற்சிக்கான, ஆங்கில ருஷ்ய எழுத்துக்களுடன் கூடிய சின்னத்தைப் படத்தில் காணலாம். அப்பாலோ-ஸோயுஸ் விண்கலன்களின் மாதிரித் தோற்றத்தையும் இணைந்த நிலையில் பார்க்கலாம்.


எல்பி நதியின் கீழே பூமியைக் குடைந்து இரண்டு மைல் நீளமுள்ள குகைப் பாதையை அமைத்து வருகிறார்கள், மேற்கு ஜெர்மனியில். ஸ்டாக்ஹோமிலிருந்து லிஸ்பனுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் பயணம் செய்வோர் இனி ஹாம்பர்க் நகரின் சந்தடி மிகுந்த தெருக்களைக் கடக்க வேண்டியதில்லை. இந்தக் குகைப் பாதை ஹாம்பர்க் நகரைத் தவிர்த்து விட்டுப் பயணத்தைத் தொடரும் வசதியை அளிக்கிறது. ஒரு நாளைக்கு அறுபதாயிரம் மோட்டார் வாகனங்கள் இந்தக் குகைப் பாதையைப் பயன்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ▼



VOLTAS



காஸ்மோபாலிடன் அதிநவீன 1.5 டன் ரூம் ஏர்கண்டிஷனர்



மிகச் சிறந்த குளுமை தருவதோடு இந்த வகையிலேயே மிகச் சிறந்த செயலாற்றும் காஸ்மோபாலிடன்... இதன் இதர தன்னிகரற்ற சிறப்பம்சங்கள் இதோ :

- ☐ அதிக தூரம் குளுமையூட்டும்.
- ☐ மிகப் பரந்த இடத்திற்கு குளுமையூட்டும். தானே திறந்து கொள்ளும் 'ஃப்ளிப்-டாப்', அதிவிரைவில் சீரான குளுமை பரப்ப உதவும்.
- ☐ 'தொட்டவுடன் இயங்கும்'— அத்தனை வேகம்.
- ☐ 1.5 டன் முழுமையான குளுமை, ஆயின் மின்சக்திச் செலவோ சிக்கனம்.

வோல்டாஸ் லிமிடெட்,
116, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

உங்கள் வட்டாரத்திலுள்ள எங்கள் அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளை அணுகுக அல்லது அருகிலுள்ள வோல்டாஸ் அலுவலகத்தை நாடுக.

Carrier
காஸ்மோபாலிடன்
1.5 டன்
ரூம் ஏர்கண்டிஷனர்

வழங்குவோர் வோல்டாஸ்:
குளுமை தருவதையே
குறிக்கோளாய்க் கொண்டவர்கள்

CMVAC-60-182-TAM



சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

முப்பதாம் அத்தியாயம்

மாமல்லர் ஊகம்


பாறையிலே தெப்பம் மோதப்போன சமயத்தில் சிவகாமி 'ஆ' என்ற சத்தமிட்டுக் கொண்டு படகில் எழுந்து நிற்க முயன்றாள். அடுத்த கணத்தில் அவள் தூக்கித் தண்ணீரில் எறியப்பட்டாள்.

கண் முன்னால் ஆயிரம் மின்னலின் ஒளி போல் பிரகாசமா யிருந்தது. அப்புறம் ஒரே இருள் மயமாயிற்று. காதில் 'ஙொய்' என்ற சப்தம் ஒலித்துக்கொண்டிருந்தது.

வெகு நேரமாகத் தோன்றிய உணர்ச்சியற்ற நிலைக்குப் பிற்பாடு சிவகாமிக்கு ஏதோ உணர்ச்சி உண்டாவது போலிருந்தது. கால் விரல்களிலே மணல் தட்டுப்படுவது போல் தோன்றியது. பூனைத் தெப்பத்தில் ஏறி வந்தது, தெப்பம் பாறையில் மோதப்போனது முதலிய விவரங்கள் ஒரு கணத்தில் ஞாபகத்துக்கு வந்தன. உடனே தான் தண்ணீருக்குள்ளே மூழ்கி யிருப்பதும், மூச்சு விடுவதற்குக் கஷ்டப்படுவதும் உணர்வில் தோன்றியது.

'ஆஹா! மாமல்லரும் மூழ்கியிருப்பாரல்லவா? இரண்டு பேரும் சேர்ந்து தானே வெள்ளத்தில் மூழ்கினோம்? ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு செத்துப் போகக் கூடாதா?' என்ற எண்ணம் மின்னல் போல் உதித்தது. அதே கணத்தில் ஒரு கரம் அவளுடைய கரத்துக்குத் தட்டுப்பட்டது. மறு கணத்தில் அந்தக் கரம் அவளுடைய கையைப் பற்றியது. ஆகா! அது மாமல்லரின் உறுதியான கரம் தான்; சந்தேகமில்லை. நமது கடைசி மனோரதம் உண்மையிலேயே நிறைவேறப் போகிறதா? சண்டையும், சூழ்ச்சியும், வஞ்சகமும் கொடுமையும் நிறைந்த இந்த உலகை விட்டு நீங்கிச் சொர்க்கலோகத்தில் புகும் போது நாமும் மாமல்லரும் கைகோத்துக்கொண்டு போகப் போகிறோமா?

இதென்ன? கால் நன்றாய் ஊன்றுகிறதே! — இதோ கூழாங் கற்கள் காலில் தட்டுப்படுகின்றனவே? — இதோ திடீரென்று வெளிச்சம்!



தண்ணீர் வர வரக் கீழிறங்கி, கழுத்து மட்டுக்கும் வந்து, மார்பு மட்டுக்கும் வந்து, பிறகு இடுப்பு மட்டுக்கும் வந்து விட்டது. ஆனால், பிரவாகத்தின் வேகம் மட்டும் குறையவில்லையாதலால் சிவகாமியை உருட்டித் தள்ளப் பார்த்தது. அதோடு மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் தண்ணீர் கொட்டியபடியால் சிறிது நேரம் மிக்க வேதனையாக இருந்தது. இவ்வளவு அவஸ்தைகளுக்கிடையில் தன் கரத்தை மாமல்லர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நிற்பதையும், தன்னைப் போலவே ஆயனர், குண்டோதரன், அத்தை எல்லோரும் வெள்ளத்தின் வேகத்தினால் தடுமாறிக் கொண்டிருப்பதையும் சிவகாமி கண்டாள். சுகர் வட்டமிட்டுக் கொண்டு 'கீச்' 'கீச்' என்று கத்துவதையும் ரதி எப்படியோ வெள்ளத்திலிருந்து பிழைத்து, கரை மீதிருந்த பாறையில் தலையை வைத்துக் கொண்டு ஏற முடியாமல் கால்களை உதைத்துக் கொள்வதையும் பார்த்தாள்.

* * *

பானைத் தெப்பம் மோதிய இடத்தில் வெள்ளத்தின் வேகத்தினால் பெரிய பள்ளம் ஏற்பட்டிருந்தது. ஆனால், அடுத்தாற்போல் சமீபத்திலேயே ஆழம் குறைந்து தண்ணீர் மேட்டுப்பாங்கான இடத்தில் பரவிப் பரந்து சென்றது. இக் காரணத்தினால் எல்லாரும் தப்பிப் பிழைப்பது சாத்தியமாயிற்று.

எல்லாரும் தட்டுத் தடுமாறிக் கரை ஏறியானதும், ''ஐயோ! போச்சே!'' என்றான் குண்டோதரன். மற்றவர்கள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தார்கள். ''என்ன போய் விட்டது?'' என்று ஆயனர் கேட்டதும், ''அவல் மூட்டை போச்சே!'' என்றான்.

சற்று நேரம் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.. பிறகு புருஷர்களும் ஸ்திரீகளும் துணிகளைப் பிழிந்து உலர்த்திக் கட்டிக் கொள்வதற்காக வெவ்வேறு திசை நோக்கிச் சென்றார்கள்.

குண்டோதரனும் குமார சக்கரவர்த்தியும் ஒரு பக்கமாகப் போனபோது, ''குண்டோதரா! அவல் மூட்டை போனதைப் பற்றி அழுகிறாயே! தெப்பம் போய் விட்டதே. அதற்கு என்ன செய்கிறது?'' என்று மாமல்லர் கேட்டார்.

''பிரபு! நல்ல வேளையாக இந்தப் பாறைப் பிரதேசத்தில் தெப்பம் மோதிக் கவிழ்ந்ததே என்று எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. இல்லாவிடில் கடலில் போய்த்தானே சேர வேண்டும்? சமுத்திரத்து அலைகளிலே இந்தப் பானைத் தெப்பம் என்ன செய்யும்?'' என்றான் குண்டோதரன்.

''இருந்தாலும் தெப்பத்தையும் காப்பாற்றி யிருக்கலாம். நீ மட்டும் இன்னும் கொஞ்சம் லாவகமாகக் கழி போட்டிருந்தால்...''

''அப்படி அவசியம் வேணுமென்றால் அதோ கிராமம் தெரிகிறதே. அங்கே பானைகள் சம்பாதித்துத் தெப்பம் கட்டிக்கொள்ளலாம் பிரபு! ஆனால், இப்போது தெப்பம் எதற்கு? இந்த வெள்ளம் அடங்குகிற வரையில் இங்கேயே இருப்பதுதான் நல்லது!''

''அழகுதான் குண்டோதரா! என் சைனியத்தை எங்கேயோ விட்டு விட்டு நான் இங்கே இருக்க வேண்டுமென்று சொல்கிறாய்? இவர்களை ஒரு பத்திரமான இடத்தில் சேர்த்தவுடனே நாம் இதே தெப்பத்தில் புறப்படலாமென்று எண்ணி யிருந்தேன்...''

''புறப்பட்டு என்ன பிரயோஜனம் பிரபு! இந்தப் பெரு வெள்ளத்தில் எங்கே போகிறது? என்ன செய்கிறது? சைனியம் தாங்கள் விட்ட இடத்திலேயே இருக்குமா? தென் பெண்ணைக் கரை யெல்லாம் இப்போது ஒரே வெள்ளக் காடாய் இருக்குமே!''

''அதனால்தான் அவசியம் நான் போக வேண்டும். பரஞ்சோதியும் மற்றவர்களும் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?''

''என்ன நினைப்பார்கள்? தாங்கள் பத்திரமா யிருக்க வேண்டுமே என்றுதான் நினைப்பார்கள். அவர்களைப்பற்றித் தங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டியதில்லை. ஏரி உடைத்துக் கொண்ட செய்தி அவர்களுக்கு நல்ல சமயத்தில் போய்ச் சேர்ந்திருக்கும்.''

துணிகள் உலர்ந்து கொண்டிருக்கையில் குண்டோதரன் தன்னுடைய வரலாற்றை மாமல்லருக்கு விவரமாகக் கூறினான். நாகநந்தி விஷயமாக ஆதியில் சக்கரவர்த்திக்குச் சந்தேகம் ஏற்பட்டு, அதன்பேரில் ஆயனர் வீட்டுக்குச் சத்ருக்னர் தன்னைக் காவல் போட்டதில் தொடங்கி, முதல் நாள் இரவு நாகநந்தியைத் தொடர்ந்து ஏரிக் கரைக்குப் போய் அவருடன் துவந்த யுத்தம் செய்தது வரையில் விவரித்தான். அப்போது ஓர் அதிகாரக் குரல் தன்னை எச்சரித்ததையும், அதன்படியே தான் திரும்பி வந்து வயோதிக புத்த பிக்ஷுவை வெள்ளத்தில் தள்ளி விட்டுத் தெப்பத்தைக் கைப்பற்றிக் கொண்டு வந்ததையும் விவரமாகக் கூறி முடித்தான்.

குண்டோதரன் கூறியதையெல்லாம் கேட்டு, மகேந்திர பல்லவரின் முன் யோசனையிலும், இராஜதந்திரத்திலும் மாமல்லருக்கு இருந்த மதிப்பு பன்மடங்கு அதிகமாயிற்று. குண்டோதரனுடைய சாமர்த்தியத்தைப் பற்றியும் அவர் மிக வியந்து பாராட்டினார்.

''ஆனால், நீ அந்த வயோதிக பிக்ஷுவைத் தெப்பத்திலிருந்து தள்ளியது மட்டும் எனக்குப் பிடிக்கவில்லை, குண்டோதரா! அந்தப் பாவத்தை ஏன் செய்தாய்?'' என்று கேட்டார்.

''அது பாவமில்லை, பிரபு! பெரிய புண்ணியம்! அவன் புத்த பிக்ஷுவுமில்லை; ஒன்றுமில்லை. காஞ்சி நகர்த் தெற்குக் கோட்டை வாசலில் காவலனாக இருந்தவன். இந்த நாகநந்தியின் வலையில்



விழுந்து தேசத் துரோகியாகிவிட்டான். அவனை வெள்ளத்தில் தள்ளியது போதாது. அவன் தலையில் ஒரு கல்லையும் தூக்கிப் போட்டிருக்க வேண்டும்!'' என்றான் குண்டோதரன்.

''அப்படியானால் எல்லாவற்றுக்கும் மூலகாரணமான நாகநந்தியை ஏன் உயிரோடு விட்டாய்? அவரையும் கொன்று விடுவதற்கென்ன?'' என்று மாமல்லர் கேட்டார்.

''பிரபு! எப்படியும் அந்த நாகப் பாம்பைக் கொன்று தீர்த்துவிடுவது என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால், 'சண்டையை நிறுத்து!' என்று இருளில் கேட்ட அதிகாரக் குரலின் கட்டளையை மீறக்கூடவில்லை. ஆகையினாலேதான் உடைப்பிலே தள்ளிவிட்டு வந்தேன். யார் கண்டார்கள்? உடைப்பு வெள்ளத்தில் அந்த வேஷதாரி பிக்ஷு மூழ்கி ஒழிந்து போயிருக்கலாம் அல்லவா?''



''கூடாது! குண்டோதரா! கூடாது! அப்பேர்ப்பட்ட பாதகனுக்கு அவ்வளவு சுலபமான மரணம் கூடாது. அந்தக் கள்ள பிக்ஷுவால் ஆயனரும் சிவகாமியும் எப்பேர்ப்பட்ட அபாயத்துக்கு உள்ளாகிவிட்டார்கள்!''

''பிரபு! மன்னிக்க வேண்டும். நாகநந்தியைப் பற்றி இவர்களிடம் ஒன்றும் பிரஸ்தாபிக்காமலிருப்பதே நலம். இவர்களுக்கு விஷயம் ஒன்றும் விளங்காது. வீணில் மனத் துன்பம் அடைவார்கள்.''

மாமல்லர் அதை ஒப்புக் கொண்டார். பிறகு, ''ஏரிக் கரையில் உனக்குக் கட்டளையிட்ட குரல் யாருடையது என்று தெரியவில்லையா?'' என்று கேட்டார்.

''ஊகித்தேன், பிரபு! ஆனால், தங்களிடம் சொல்லத் தைரியமில்லை. மன்னிக்க வேண்டும்!'' என்றான் குண்டோதரன்.

எச்சரித்தவர் மகேந்திர சக்கரவர்த்தியாயிருக்குமோ என்ற எண்ணம் ஏற்கனவே அவர் மனத்தில் தோன்றியிருந்தது. குண்டோதரனும் அப்படியே ஊகிக்கிறான் என்று இப்போது தெரிந்தது.

மாமல்லரின் உள்ளத்தில் மகிழ்ச்சி, வெட்கம், வேதனை ஆகிய உணர்ச்சிகள் ஏக காலத்தில் உதயமாயின. குண்டோதரனை எச்சரித்தது மகேந்திர சக்கரவர்த்தியாயிருக்கும் பட்சத்தில் சைனியத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. எல்லோரும் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். ஆனால், தம்மிடம் நம்பிக்கை இல்லாமல்தானே அவர் தொடர்ந்து வந்திருக்க வேண்டும்? அதற்குத் தகுந்தாற்போல் இருக்கிறதல்லவா தம்முடைய காரியமும்? நதிக் கரையிலே சைனியத்தை நிறுத்திவிட்டுத் தனியாக வந்து வெள்ளத்திலேயும் சிக்கிக் கொண்டோமல்லவா? சக்கரவர்த்தியை மறுபடியும் சந்திக்கும்போது அவர் முகத்தை எவ்விதம் ஏறிட்டுப் பார்ப்பது?

இதற்கு மாறாக இன்னொருவித சிந்தனையும் உண்டாயிற்று. எது எப்படி வேண்டுமானாலும் போகட்டும்! என்ன அபகீர்த்தி, அவமானம் ஏற்பட்டாலும் ஏற்படட்டும். இந்த ஒரு நாள் ஆனந்த வாழ்வுக்காக எதைத்தான் சகித்துக் கொள்ளக் கூடாது? இனி, வருங்காலமெல்லாம் இந்த ஒரு தினத்தின் இன்ப மயமான வாழ்க்கையை நினைத்து நினைத்துப் பார்த்து மகிழ்ச்சியடையலாம் அல்லவா?

''பிரபு! நடந்தது நடந்துவிட்டது. இனி மேல் நடப்பதைப் பற்றித்தானே யோசிக்க வேண்டும்?'' என்று குண்டோதரன் கூறி மாமல்லரின் சிந்தனையைக் கலைத்தான்.

''வேறு என்ன யோசனை செய்ய இருக்கிறது? வெள்ளத்திலே வந்து மாட்டிக் கொண்டுவிட்டோம். இங்கிருந்து போகும் வழியைத் தேட வேண்டும்......''

''பிரபு! இன்று இரவு தங்குவதைப் பற்றி முதலில் யோசிப்போம். திறந்த வெளியிலே தங்க முடியாதல்லவா? இரவு மழை பிடித்துக் கொண்டால் என்ன செய்கிறது?''

''எங்கே தங்கலாம் என்று நினைக்கிறாய்?''

''அதோ சற்றுத் தூரத்தில் ஒரு கிராமம் தெரிகிறது. அங்கே போய்



பற்பல வகைகளில் 100%பாலியெஸ்டர் மற்றும் 100%ப்யூர் காட்டன் புடவைகள்—'ஆஷியானா', 'ஷிஃபாலா' மற்றும் 'ரேலிகா'. பர்வீன் பாபியைப் போன்றே கவர்ச்சி நிறைந்த டிசைன்கள்.

BD-7205


பவுடரினால் துலக்கிய
இடத்திலே கீறல்
விழுந்ததுதான் மிச்சமா?
HOW TO USE VIM
Vim
மாசில்லாத பளபளப்பை வீசிட
வைப்பது விம்.
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!

நான் முதலில் விசாரித்துக் கொண்டு வருகிறேன்.''

'' அப்படியே, செய் '' என்றார் மாமல்லர்.

அப்போது 'மாமல்லா! மாமல்லா!' என்ற சுகரிஷியின் குரல் கேட்டது. அந்தக் குரல் வந்த வழியே சென்ற மாமல்லர், பாறையருகில் மகிழ மரத் தடியில் சிவகாமி தனியே உட்கார்ந் திருப்பதைக் கண்டார். அவள் அருகில் தாமும் உட்கார்ந்தார்.

முப்பத்தோராம் அத்தியாயம்

மகிழ மரத்தடியில்

விரைந்து சென்ற வெள்ளத்தின் இரைச்சலைத் தவிர வேறு சத்தம் எது வும் சற்று நேரத்துக்கு அங்கு இல்லாமல் இருந்தது.

மாமல்லர் கண் கொட்டாமல் சிவ காமியின் முகத்தைப் பார்த்துக் கொண் டிருந்தார். சிவகாமி சிறிது நேரம் தரையைப் பார்ப்பாள்; சிறிது நேரம் வெள்ளத்தையும் வானத்தையும் பார்ப் பாள். இடையிடையே மாமல்லரின் முகத் தாமரையிலும் அவளுடைய இரு விழிகளாகிய கரு வண்டுகள் ஒரு கணம் மொய்த்துவிட்டு விரைவாக அவ்விட மிருந்து அகன்று சென்றன.

புயலுக்கு முன்னால் ஏற்படும் அசாதாரண அமைதியைப் போன்ற இந்த மௌனத்தைக் கண்டு சுகரிஷி யும்கூட வாய் திறவாமல் சிவகாமியின் முகத்தையும் மாமல்லரின் முகத்தை யும் மாறி மாறிப் பார்த்துக் கொண் டிருந்தார். கடைசியில் பொறுமை இழந்தவராய், '' இந்த வாய் மூடி மௌனிகளுடன் நமக்கு என்ன சக வாசம்!'' என்று சொல்கிறதைப் போல் இறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டு அங்கிருந்து பறந்து சென்றார்.

கிளி அங்கிருந்து அகன்றதும், மாமல்லரும் மௌனத்தைக் கலைக்க விரும்பியவராய், ''சிவகாமி! என்ன சிந்தனை செய்து கொண்டிருக்கிறாய் ?'' என்று கேட்டார்.

சிவகாமி மாமல்லரின் முகத்தை ஏறிட்டு நோக்கி, '' சற்று முன்னால் தண்ணீரில் மூழ்கினேனே, அப்படியே திரும்பிக் கரை ஏறாமல் வெள்ளத்தோடு போயிருக்கக் கூடாதா என்று யோசித் துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள்.

'' அப்படியானால் நான் உன்னைத் தேடிக் கொண்டு வந்ததெல்லாம் பிசகு என்று ஏற்படுகிறது. ஆனால், இப் போதுகூட ஒன்றும் மோசம் போய் விடவில்லையே ? பெருவெள்ளம் இங்கே யிருந்து வெகு சமீபத்தில்தானே ஓடு கிறது !'' என்றார் மாமல்லர்.

''உண்மைதான்! வெள்ளம் வெகு சமீபத்தில் ஓடுகிறது! ஆனால், தானாக வெள்ளத்தில் விழுந்து சாவதற்கு மனம் வருகிறதா? அதுவும் நீங்கள் அருகில் இருக்கையில்'' என்று சிவகாமி கூறிய போது, அவளுடைய கண்களில் கண் ணீர் ததும்பிற்று.

''இது என்ன! ஏதாவது சந்தோஷ மாய்ப் பேசலாம் என்று பார்த்தால் நீ இப்படி ஆரம்பித்துவிட்டாயே!'' என் றார் மாமல்லர்.

'' பிரபு ! இன்றைய தினத்தைப் போல் நான் என்றைக்கும் ஆனந்தமா யிருந்தது கிடையாது. அதனாலேதான் இன்றைக்கே என் வாழ்நாளும் முடிந்திருக்கக் கூடாதா என்று தோன்று கிறது !''

'' அழகாயிருக்கிறது, நீ ஆனந்தம் கொண்டாடுகிற விதம்'' என்றார் நர சிம்மவர்மர்.



''சென்ற ஒரு வருஷ காலமாக நான் அனுபவித்த துன்பத்தையும் வேதனை யையும் அறிந்தால் இப்படித் தாங்கள் சொல்ல மாட்டீர்கள்!'' என்றாள் சிவகாமி.

''துன்பமா? உனக்கு என்ன துன்பம் நேர்ந்தது? ஏதாவது உடம்பு அசௌக ரியமா ? ஏன் எனக்குச் சொல்லி அனுப்பவில்லை ?''

''உடம்புக்கு ஒன்றுமில்லை, பிரபு ! உடம்பு, மூன்று வேளையும் சாப்பிட் டுக் கொண்டு, ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு சௌக்கியமாய்த் தான் இருந்தது. எல்லாத் துன்பத்தை யும் வேதனையையும் உள்ளந்தான் அனுப வித்தது !''


'' ஆஹா ! துன்பமும் வேதனையும் உனக்கேன் வரவேண்டும் ? யாராவது உன்னை உபத்திரவப்படுத்தினார்களா, என்ன ? உன் தந்தை ஆயனர்

அதைத் தடுக்காமல் என்ன செய்து கொண்டிருந்தார்?''

சிவகாமி எதைக் குறிப்பிட்டு இவ்விதமெல்லாம் பேசுகிறாள் என்பது பல்லவ குமாரருக்குத் தெரிந்துதான் இருந்தது. எனினும், அவள் வாயினால் சொல்லிக் கேட்பதற்காகவே அஃவிதம் புரிந்து கொள்ளாதவர் போலப் பேசி வந்தார்.

அதற்குச் சிவகாமி, ''ஒருவராலும் எனக்கு ஓர் உபத்திரவமும் ஏற்படவில்லை. காட்டிலே வளர்ந்த பேதைப் பெண்ணாகிய எனக்குப் பேசத் தெரியவில்லை, பிரபு! என் மன வேதனைக்கெல்லாம் காரணம் தங்களை மறக்க முடியாமைதான்!'' என்று கூறிக் கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீர் வடித்தாள்.

மாமல்லர் ஆர்வம் பொங்கிய கண்களினாலே அவளைப் பார்த்து, ''இவ்வளவுதானே, சிவகாமி! அதற்காக



இப்போது ஏன் கண்ணீர்விட வேண்டும்? நானுந்தான் உன்னுடைய நினைவினால் எவ்வளவோ வேதனைகளை அநுபவித்தேன்! என்னுடைய ஓலைகளையெல்லாம் நீ படிக்கவில்லையா?'' என்றார்.

''தாங்கள் எழுதியிருந்த ஒவ்வோர் எழுத்தையும் மனப்பாடம் செய்திருக்கிறேன். ஒவ்வோர் ஓலையையும் நூறு தடவை ரதிக்குப் படித்துக் காட்டியிருக்கிறேன். ஓலையைப் படிக்கும்போது சந்தோஷமாயிருக்கும். அப்புறம் அவ்வளவுக்கவ்வளவு வேதனை அதிகமாகும்; தங்கள் பேரில் கோபம் கோபமாய் வரும்......''

''சிவகாமி! உனக்கு என் பேரில் கோபித்துக் கொள்ளும் சௌகரியமாவது இருந்தது. எனக்கு அதுகூட இல்லையல்லவா? யாருடைய துன்பம் அதிகம் என்று சொல்!''

''என் பேரில் தாங்கள் கோபித்துக் கொள்ளவில்லையா? அப்படியானால், அசோகபுரத்துப் புத்தவிஹாரத்தின் வாசலிலே என்னைப் பார்த்துவிட்டு ஒரு கண நேரம்கூடத் தாமதிக்காமல் போனீர்களே, ஏன்? என் பேரில் இருந்த அன்பினாலேயா?''

''ஆம், சிவகாமி! நான் வரும் வரையில் அரண்ய வீட்டிலேயே இருக்கும்படி சொல்லியிருந்தும் நீங்கள் கிளம்பி வந்து விட்டீர்களே என்று எனக்குச் சிறிது கோபமாய்த்தான் இருந்தது. ஆனால், அன்றிரவே புயலையும் மழையையும் பொருட்படுத்தாமல் நான் வரவில்லையா? எவ்வளவு முக்கியமான காரியங்களை விட்டுவிட்டு வந்தேன்? இப்போதுகூட அங்கே என்ன நடந்திருக்கிறதோ என்னவோ? அதையெல்லாம் மறந்துவிட்டு உன்னுடைய பொன் முகத்திலே ஒரு புன்சிரிப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். நீயோ கண்ணீர் விட்டு என்னைக் கலங்க அடிக்கிறாய்!'' என்றார் மாமல்லர்.

''எல்லாம் உங்களால் ஏற்பட்ட மாறுதல்தான். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னாலே ஓயாமல் சிரிப்பும் சந்தோஷமுமாய்த்தான் இருந்தேன். காட்டில் யதேச்சையாய்த் திரியும் மானைப் போல் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தேன். என் தந்தைகூட என்னை அடிக்கடி, 'இப்படிச் சிரிக்காதே சிவகாமி, பாஞ்சாலி சிரித்துத்தான் பாரதப் போர் வந்தது. பெண்கள் அதிகமாய்ச் சிரிக்கக் கூடாது' என்று எச்சரிப்பதுண்டு. அந்தச் சிரிப்பும் குதூகலமும் இப்போது எங்கே போய்விட்டன? நினைத்தால் எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது.....''

''சிவகாமி! நீ சிரிப்பும் சந்தோஷமுமாய் இருந்த காலத்தைப் பற்றிப் பேசு; உன் குழந்தைப் பிராயத்தைப் பற்றிச் சொல்லு. அந்த நாட்களைப் பற்றிக் கேட்க வேணுமென்று எனக்கு ஆவலாயிருக்கிறது!'' என்றார் நரசிம்மவர்மர். மேலும், அவர் வற்புறுத்திக் கேட்டதன் பேரில் சிவகாமி சொல்லத் தொடங்கினாள்:

''நான் சின்னஞ்சிறு பெண்ணாயிருந்தபோது, என் தந்தையின் செல்வக் கண்மணியாய் வளர்ந்து வந்தேன். அரண்யம் சூழ்ந்த சிற்ப அரண்மனையிலே நான் ராணியாயிருந்து தனி அரசு செலுத்தினேன். என் தந்தையிடம் சிற்ப வேலை கற்றுக் கொண்ட சீடர்கள் என்னிடம் பயபக்தி கொண்ட பிரஜைகளாயிருந்து வந்தார்கள். கண் இமையை அசைத்தால் போதும்;

அவ்வளவு பேரும் விரைந்து ஓடி வந்து 'என்ன பணி?' என்று கேட்பார்கள். அப்போதெல்லாம் எனக்குக் கவலை என்பதே தெரியாது; துன்பம் என்பதையே அறிந்ததில்லை.

''உலகத்திலே எதைப் பார்த்தாலும் எனக்கு வியப்பும் மகிழ்ச்சியுமாயிருக்கும். காலையிலே எழுந்ததும் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டு உதயமாகும் தங்கச் சூரியனைக் கண்டு ஆனந்திப்பேன். மாமரங்களில் தளிர்த்திருக்கும் இளஞ் சிவப்பு நிறத் தளிர்களைக் கண்டு களிப்படைவேன். மரம் செடி கொடிகளில் புஷ்பிக்கும் விதம் விதமான வர்ண மலர்கள் எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை அளிப்பதுண்டு. செடி கொடிகளுக்கு மத்தியில் ஆடிக் கொண்டே பறக்கும் பட்டுப் பூச்சிகளை ஓடிப் பிடிக்க முயல்வேன். அவை என் கையில் அகப்படாமல் தப்பித்துக் கொள்ளும்போது கலீரென்று சிரிப்பேன். மது உண்ட வண்டுகளின் ரீங்காரத்தைக் கேட்கும்போதெல்லாம் எனக்கும் ஆனந்த போதை உண்டாகிவிடும். காட்டுப் பறவைகள் இசைக்கும் கீதத்தைக் கேட்டுப் பரவசமடைவேன்.

'' இரவிலே அகண்ட வானத்திலே மின்னும் நட்சத்திரங்கள் எல்லாம் தங்களுடன் வந்து சேரும்படி என்னைக் கண் சிமிட்டி அழைப்பது போலத் தோன்றும். அவற்றின் அழைப்புக் கிணங்கி நானும் மனோரதத்தில் ஏறி உயர உயரப் பறந்து செல்வேன். சில சமயம் சந்திரனைப் பார்த்தால் எனக்கு அன்னப் பட்சியைப் போலிருக்கும். அதன்மேல் ஏறிக் கொண்டு நட்சத்திரங்களுக்கிடையே வட்டமிட்டுக் கொண்டிருப்பேன். சில சமயம் நிலா மதியானது ஓர் அழகிய சிறு தோணியைப் போல் எனக்குத் தோன்றும். அதன் மேல் ஏறிக் கொண்டு வானமாகிய நீலக் கடலில் மிதந்து வருவேன். வழியிலே தென்படும் நட்சத்திரச் சுடர்மணிகளையெல்லாம் கைநிறைய அள்ளி அள்ளி மடியிலே சேர்த்துக் கட்டிக் கொள்வேன்.

'' இப்படிக் குதூகலமாகக் காலம் போய்க் கொண்டிருக்கையில் என் தந்தை எனக்கு நாட்டியக் கலை கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். அது முதல் எனக்கு நடனக் கலைப் பைத்தியம் பிடித்து விட்டது. சதா சர்வகாலமும் நாட்டியமாடியவண்ணமாகவே இருந்தேன். காட்டுக்குள் விளையாடப் போனால் ஆடிக் கொண்டே போவேன். தாமரைக் குளத்தில் குளிக்கப் போகையில் என் கால்கள் ஜதி போட்டுக் கொண்டே போகும். அந்த நாளில் பூமியும் வானமும் ஒரு பெரிய நடன அரங்கமாக எனக்குக் காட்சி தந்தன.

''தடாகத்தில் வண்ணத் தாமரைகள் தென்றற் காற்றில் அசைந்தாடும்போது அவை ஆனந்த நடனமாடுவதாகவே எனக்குத் தோன்றும். வான அரங்கத்தில் விண் மீன்கள் விதம் விதமான ஜதி பேதங்களுடன் நடனம் புரிந்துகொண்டு திரும்பத் திரும்பச் சுழன்று வருவதாகத் தோன்றும்.

''இப்படி ஆனந்த வெள்ளத்தில் மிதந்த வண்ணமாக என் வாழ்க்கை நடந்து கொண்டிருந்த காலத்திலேதான் தாங்கள் ஒரு நாள் தங்கள் தந்தையாருடன் எங்கள் அரண்ய வீட்டுக்கு வந்தீர்கள்.....'' என்று கூறிச் சிவகாமி கதையை நிறுத்தினாள். (தொடரும்)

கதிர் மணிகளைக் காக்கக் கதிரியக்கம்

அணுவைப் பிளக்கும் போது உருவாகும் சக்தியை அழிக்கவும் ஆக்கவும் பயன்படுத்தலாம். அழிப்பதற்கு அணுகுண்டு என்றால் ஆக்க ரீதியில் மின் நிலையங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்று பல உபயோகங்கள்.

அணுவைப் பிளப்பதன் வேண்டாத உடன் விளைவு கதிரியக்கம். கதிரியக்கமுள்ள கழிவுப் பொருள்கள் மக்களைப் பாதிக்காத முறையில் அவற்றை ஆழக் குழிதோண்டி காங்கிரீட் அறைகளுக்குள் புதைக்க வேண்டும்.

ஆனால் இதே கதிரியக்கத்தையும் கட்டுப்படுத்தப் பட்ட அளவில் மனித குலத்துக்குப் பயன் தரும் வகையில் உபயோகிக்கலாம். ஒரு முக்கிய பலன் உணவு தானியங்களைப் பூச்சி அழிக்காமல் காப்பது.

இந்த விஞ்ஞானத் துறையில் பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றியபோது அபார சாதனைகளைப் புரிந்துள்ளார் டாக்டர் ஏ. சீனிவாசன். அண்மையில் பத்மபூஷண் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்ட இவர் தற்போது பம்பாய் புற்று நோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனராய் விளங்குகிறார்.



சுதந்திரம் இல்லாத ஜனநாயகம்

பால்கி வாலா—





ஜனநாயகம் என்ற சொல் மதிப்பிழந்த அளவுக்கு வேறு எந்த வார்த்தையுமே மதிப்பிழக்கவில்லை. வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அம்சத்துடன் ஜனநாயகத்தில் மக்கள் திருப்தி அடைந்து விடுவதாகத் தோன்றுகிறது. இந்த அளவில் பார்க்கப் போனால் ஜனநாயகம் என்பதற்கும் சுதந்திரம் என்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. சுதந்திரமே மக்களுக்கு வழங்காத ஜனநாயக நாடுகளும், ஜனநாயகமே இல்லாத சுதந்திர நாடுகளும் உலகில் உள்ளன!

சுதந்திரம் என்ற ஆன்மாவை இழந்த ஜனநாயகம் வெறும் பிணமே.

நமது அரசியல் சட்டம் உறுதி அளித்த அடிப்படை உரிமைகள் மனிதனுக்கு இன்றியமையாத ஆயுதங்கள். அந்த ஆயுதங்கள் இல்லாமல் அவனால் சுதந்திரக் கோட்டையைக் காக்க முடியாது.

அரசியல் சட்டத்தைப் பாராளுமன்றம் மாற்றி அமைக்கும் போது மக்களின் எண்ணங்களைத்தான் அது பிரதிபலிக்கிறது என்ற கருத்து அபத்தமானது. பாராளுமன்றத்துக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் போது எத்தனையோ பல காரணங்களை உத்தேசித்து மக்கள் அவருக்கு வோட்டுப் போடுகிறார்கள். அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றுவது என்பது தேர்தல் பிரச்னையாக்கப்படுவது கிடையாது. அது விஷயம் பிரஸ்தாபிக்கப்படுவது கூட இல்லை.

ஆனால் பெல்ஜியம் நாட்டில் அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றுவது என்றால் அதற்கு முன்பாகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அந்தத் திருத்த மசோதாவையே தேர்தல் பிரச்னையாக்குவார்கள்.

ஆஸ்திரேலியாவிலும் அரசியல் சட்டத்தை மாற்றுவதெனில் மக்களின் வாக்கெடுப்பு அதை முன்னிட்டு நடத்த வேண்டும். 1973ம் ஆண்டு வரை ஆஸ்திரேலியப் பாராளுமன்றம் இருபத்தாறு திருத்தங்களை மக்கள் முன் சமர்ப்பித்தது. இவற்றில் இருபத்திரண்டு அரசியல் சட்டத் திருத்தங்களை மக்கள் வாக்கெடுப்பின் போது நிராகரித்து விட்டார்கள்!

உலக முழுவதும் மக்களின் அடிப்படை உரிமைகளைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி வருகிறது. மனித உரிமைகளை நிலைநிறுத்தும் அகில உலகப் பிரகடனத்தில் இந்தியாவும் கையெழுத்துப் போட்டிருக்கிறது. அதே இந்திய அரசுதான் இப்போது தனது மக்களின் உரிமைகளைக் காலின் கீழ் போட்டு மிதிக்கிறது.

நாட்டிலுள்ள எல்லா விதமான அரசியல் அமைப்புக்களையும் விட அரசியல் சாசனமே முக்கியமானது. அதற்கு உட்பட்டே எல்லாக் காரியங்களும் நடக்க வேண்டும் என்ற கருத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுக் காரியம் பண்ணுகிறது நமது அரசு.

31-சி ஷரத்து ஏற்கனவே சட்டமாக்கப்பட்டு விட்டது. இந்த ஷரத்தினால் அரசியல் சாசனம் மக்களுக்கு வாக்களித்த பத்து அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இவற்றில் மூன்று உரிமைகள் மட்டுமே சொத்து உரிமை சம்பந்தப்பட்டவை என்பதை அனைவரும் கவனிக்க வேண்டும்.

இது தவிர புதிதாக 32-ம் திருத்த மசோதா கொண்டு வர விருக்கிறார்கள். இந்த ஷரத்து அதிர்ச்சி அளிப்பதாய் உள்ளது! இதன்படி எந்த ஒரு பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினராவது தமது கட்சியின் ஆணையை மீறி ஒரு மசோதா மீது வோட்டளித்தாலோ அல்லது வோட்டுப் போடாமல் நடுநிலைமை வகித்தாலோ அவரது சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினர் பதவியே பறிபோய் விடும்!

இது எந்த நியாயத்தில் சேர்ந்ததோ புரியவில்லை.

ஒரு கட்சி அங்கத்தினர் தமது கட்சியின் விருப்பப்படி வோட்டுப் போடவில்லையானால் அந்தக் கட்சியிலிருந்து அவர் வெளியேற்றப்படுவது ஒருவேளை நியாயமாகலாம். ஆனால் பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படும் என்பது எவ்வாறு நியாயமாகும்?

இதன் மூலம் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக இயங்கும் உரிமையை இழக்கின்றனர். ஒரு சட்ட

மசோதா மக்களுக்குத் தீங்கு செய்யும் என்று அவர்கள் மனப்பூர்வமாகக் கருதினால் கூட அதனை எதிர்த்து அவர்கள் வோட்டளிக்க முடியாது! கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அதற்கு ஆதரவு தர வேண்டும் அல்லது பதவி இழக்க வேண்டும்.

இதைவிட நமது ஜனநாயகத்துக்கு இழுக்கு வேறு உண்டா? -சுயராஜ்யாவிலிருந்து

தமிழாக்கம்: **குட்டி கிருஷ்ணன்**

★ ★ ★

சபாஷ் சோஷலிசம்!

நம் நாட்டில் இரண்டரைக் கோடி மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர்.

வங்காள அரசு பதினேழு காலி இடங்களுக்கு விளம்பரம் செய்ததற்குச் சுமார் ஒரு லட்சம் மனுக்கள் வந்து குவிந்தன!

முதலீடு இல்லாமல் லாபம்!

சிமெண்ட் மூட்டையின் கண்ட்ரோல் விலை பதின்மூன்று ரூபாய். பம்பாயில் கறுப்புச் சந்தையில் மூட்டை முப்பத்தாறு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. உற்பத்தி செய்கிறவர்களுக்கு மூட்டைக்கு ரூபாய் ஒன்றோ இரண்டோ லாபமாகக் கிடைத்தால் எந்த முதலீடும் செய்யாத இடைநிலைத் தரகர்களுக்கு மூட்டைக்கு ரூபாய் இருபத்துமூன்று லாபம் கிடைக்கிற விசித்திர நிலை இந்நாட்டில் உள்ளது!

வேலையற்றவருக்கு வரி!

ஹரியானா ராஜ்ய மின் வாரியத்தில் 300 காலி இடங்களுக்கு விளம்பரம் செய்ததில் 60,000 மனுக்கள் வந்தன. மனுச் செய்து கொள்வதற்கு வேலையற்றவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணம் சுமார் 5 லட்சம் ரூபாய்! மின்வாரியத்துக்கு ஐந்து லட்சம் லாபம்!

பண வீக்கத்தின் எதிர்: உற்பத்தி!

பிரேஸில் (தென் அமெரிக்கா) நாட்டில் பண வீக்கம் 80, 90 சதவிகிதம் வரை உயர்ந்தது. உற்பத்தியைப் பெருக்கியும் இதர பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்தும் பத்து சதமாகக் குறைத்து விட்டனர்!

தைரியம் வருமா?

பிரான்சு நாட்டில் தேச உடைமையான வங்கிகளும் உள்ளன. தேச உடைமை ஆகாதவையும் உள்ளன. தேச உடைமை ஆன வங்கியிடமிருந்து பிரஞ்சு அரசு ஏதாவது ஒரு திட்டத்துக்குக் கடனுதவி கோரினால், அத்திட்டம் லாபகரமாக இராது என்று வங்கி கருதினால் கடன் வழங்க மறுத்து விடும்! நமது நாட்டில் அரசுக்குக் கடன் வழங்க மறுக்க எந்த வங்கிக்காவது தைரியம் உண்டா? —**பாணன்**

(பால்கிவாலா சென்னையில் பேசியவற்றிலிருந்து சில கருத்துக்கள்)



அரசாங்கத்தின் அதிகாரங்கள் அதிகரித்துக் கொண்டே போகிற ஒரு நிலையை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கின்றோம். இதன் விளைவாகத் தனி மனிதனின் சுதந்திர முயற்சிக்கு இடமில்லாது போகும்; அல்லது அது குட்டுப்பட்டுக் குட்டுப்பட்டுச் செயலிழந்து போகும்......

-அரவிந்தர்



மக்கள் ஏமாற்றப்பட்டு ஏமாந்து போனாலொழியத் தங்கள் சுதந்திரங்களை விட்டுக் கொடுக்கவே மாட்டார்கள். - எட்மண்ட் பர்க்

எந்த வகையைச் சேர்ந்த சோஷலிஸமாயினும் சரி, அதனால் உண்டாகும் ஆபத்து அரசாங்கத்திடம் குவியும் அபரிமிதமான அதிகாரங்கள்தாம். சோஷலிஸம் என்பதைச் சுதந்திரத்தோடு இணைப்பது என்றால் அதிகார வர்க்கத்தின் அதிகாரங்கள் எப்படியாவது கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

-பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்

சர்வாதிகாரியின் கொடுமை ஆபத்தானதுதான்; ஆனால் அதைவிட ஆபத்தான விஷயம், ஜனநாயகத்தில் மக்கள், 'நமக்கென்ன வந்தது' என்ற மனப்பான்மையில் வாளா விருப்பதாகும்.

- மான்டெஸ்கோ



ஒருவழிப்பாதை; ஒழுங்கான சேவை!



உலகத்தின் மிகச் சிறந்த போக்குவரத்து முறை நம் ஒவ்வொருவர் உடலிலும் இருக்கிறது. பல ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள பாதை. இரவும் பகலும் நடைபெறும் ஒழுங்கான போக்குவரத்து. எத்தனையோ அவசியமான புதிய பொருள்களை ஏற்றிச் சென்று, வழங்க வேண்டிய இடங்களுக்கு வழங்கி, அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டிய விரயங்களைத் திரும்ப ஏற்று வரும் ரத்த ஓட்டமே இந்தப் போக்குவரத்து.

உடல் முழுவதும் ஒவ்வோர் உறுப்பிலும் ஒவ்வொரு திசுவிலும் பாய்ந்து ஓடிச் சுற்றி வரும் மொத்த ரத்தத்தின் அளவு சுமார் ஐந்து லிட்டர் இருக்கும். இதயத்திலிருந்து நல்ல ரத்தம் ஒரு பெரிய குழாயில் புறப்படுகிறது. தலைக்கு ஒன்று, கைகளுக்கு ஒன்று, அடி வயிறு, கால்களுக்கு ஒன்று என்று மூன்று முக்கிய கிளைகளாகப் பிரிகிறது. பிறகு இவை தம்முள் கிளை விட்டுக் கிளை விட்டுச் சிறு குழல்களாக உடலெங்கும் பரவுகிறது. மயிரிழைகளை விட மெல்லிய தந்துகிகள் என்னும் சன்னக் குழாய்களாகப் படர்ந்து பரவுகிறது. ஆக்ஸிஜன் என்னும் உயிர் வாயு உடலிலுள்ள ஒவ்வொரு உயிர் அணுவுக்கும் கிடைக்க இப்படிப் படரும் ரத்தமே உதவுகிறது. உழைத்து இயங்கும் உயிர் அணுக்கள் வெளியிடும் விரயமான வாயுவைப் பதிலுக்கு ஏற்று, சேகரித்து வேறு பாதையில் கிளை கிளைகளாகச் சேர்ந்து மொத்தமாக இதயத்தை அடைகிறது.

இதயத்திலிருந்து புறப்படும் குழாய்ப் பாதையில் ரத்தம் சீராக ஓட, இதயத் துடிப்புக்கு ஏற்பக் குழாய்த் தசைகள் அலை அலையாக அசைந்து கொடுத்து உதவும்; விரயத்தைத் தாங்கி வரும் குழாய்ப் பாதையில் ரத்தம் பின்னோக்கித் தேங்கி விடாமல் இருக்க வால்வுத் தடைகள் உண்டு. ரத்தப் போக்கு வரத்து எப்போதும் 'ஒரு வழிப் பாதை'யிலேயே நிகழ்கிறது! உடலில் ரத்தம் பரவாத பகுதிகள் நகமும் மயிரும் கண்ணின் கரு விழிப் படலமுமேயாகும்.

கடலின் நீர் உப்பாயிருப்பது போல உடலில் உள்ள ரத்தத்திலும் உப்பு அம்சம் இருக்கிறது. ஆதியிலே படைப்பின் தொடக்கத்திலே எல்லா உயிரினமும் கடலில் தோன்றியதுதான் என்ற கருத்துக்கு ஆதரவான ஓர் ஆதாரம் இது. உடலில் உப்பும் நீரும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் நிலையாக இருக்கிறது; இருக்கும்படி உடலே கவனித்துக் கொள்கிறது. உப்பு அதிகரித்த உணவு உட்கொண்டால் உடனே நீர் அருந்தத் தோன்றுவது இதனால்தான்.

ரத்தத்தைப் பகுத்துப் பார்த்தால் அதில் பாதிக்குச் சற்று அதிகமாக பிளாஸ்மா என்னும் வெளிர் நிற அம்சம் இருக்கும். உடலுக்குத் தேவையான ஜீவாதாரமான சத்துப் பொருள்களை ஏற்றிச் சென்று தேவையான உறுப்புக்களுக்கு வழங்குவது இதுவே. ரத்தத்தின் மறு பாதி சிவப்பு அணுக்களும் வெள்ளை அணுக்களும் பிளேட்லட்ஸ் என்ற தட்டை அணுக்களும் சேர்ந்த பகுதியாகும். இந்தச் சேர்க்கையில் சிவப்பு அணுக்களே அதிகம். சிவப்பு அணுக்களில் உள்ள ஹேமோகுளோபின் என்னும் புரத அம்சப் பொருளே ரத்தத்துக்குச் சிவப்பு வண்ணம் அளிப்பது. இதுவே உடலெங்கும் பிராணவாயு வழங்கும் தூதன்.

பிளாஸ்மாவும் சிவப்பு, வெள்ளை, பிளேட்லட் அணுக்களும் ரத்த ஓட்டம் என்னும் போக்குவரத்து இயக்கத்தின் ஊழியர்கள். உடல் என்னும் பெரிய நிறுவனத்துக்கு ஒவ்வொரு ரகத்திலும் இத்தனை லட்சம் ஊழியர்கள் தேவை என்று ஓர் அளவு வைத்திருக்கிறது இயற்கை. இந்த எண்ணிக்கை மிகுந்தாலும் தொல்லை, குறைந்தாலும் தொல்லை.

எலும்பின் உள் மொச்சையில் ரத்தச் சிவப்பு அணுக்கள் உற்பத்தியாகிக்கொண்டே



ஒரு துளி ரத்தம் வைத்தியப் பரிசோதனையாளருக்கு ஒரு நூறு விஷயங்களைச் சொல்கிறது.

இருக்கின்றன. சாதாரண சிவப்பு அணுவின் ஆயுட்காலம் 120 நாட்கள். அதற்குப் பின் அது மடிந்து விடும். உடலெங்கும் கணந்தோறும் பல்லாயிரம் சிவப்பு அணுக்கள் அழிந்தபடி இருக்கின்றன. அதற்கு ஈடு செய்தபடி புதியவை பிறந்தபடி இருக்கின்றன. சிவப்பு அணுத் தயாரிப்புக்கு இரும்பு அம்சம் தேவை. அழிந்து போன சிவப்பு அணுக்களில் முக்கியமான இரும்பு அம்சத்தை உடல் மீட்டு, புதிய தயாரிப்புக்குப் பயன்படுத்திக் கொள்வதும் ஓர் இயற்கை விந்தை!

ரத்தச் சிவப்பு அணு ஒரு சிறந்த பணியாளன் என்றால் வெள்ளை அணு ஒரு சிறந்த படை வீரன். உடல் நோயுறும்போது ரத்தத்தின் வெள்ளை அணுதான் நோய்க் கிருமிகளைத் தாக்குகிறது. நோயின் தீவிரத்துக்கு ஏற்ப வெள்ளை அணு படை இரட்டி, எதிர்த்துப் போராடுகிறது. கிருமிகளைச் சூழ்ந்து கொண்டு அழிக்கிறது.

பிளேட்லட் அணுக்கள் ரத்தத்தில் மிகச் சிறு பகுதியே. இருந்தாலும், இவற்றின் ஆயுட் காலம் ஒரு வாரம், பத்து நாட்களே என்றாலும், இவை உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியமானவை. விபத்துக் காயங்களில் அடிபட்டுக் கசியும் ரத்தம் உறைவதற்கு இந்த அணுக்களின் அம்சங்களே துணை புரிகின்றன. எங்காவது காயம் பட்டு ரத்தம் வெளியே கசியத் தொடங்கினால் முதல் காரியமாக இந்த அணுக்கள் ஓடி, பாதையை அடைத்து, கசியும் வாய்ப்பை நிறுத்தி, அங்கே ர்த்தம் கட்டியாகி உறையச் செய்கின்றன. காயம் குணமாக ரத்தம் உறைதல் முதல் படி. இந்த இயல்பான நிகழ்ச்சி அபூர்வமாகச் சிலர் உடலில் நிகழ்வதில்லை. ஹெமோபீலியா என்ற இந்தக் குறை ஒரு பரம்பரைக் குறை. இப்படிப்பட்டவர்கள் காயம்பட்டுக் கொண்டால் ரத்தம் அதிகம் விரயமாகும். புது ரத்தம் செலுத்தும் தேவை இருக்கும். மேனாடுகளில் இப்படி ஹெமோபீலியாவில் பாதிக்கப்பட்டவர், தமது ரத்தப் பிரிவு இன்னது என்று எழுதிய அட்டையைச் சட்டைப் பையில் வைத்திருப்பார்களாம். விபத்தில் அவர்கள் அடிபட்டு மயக்கமடைந்தாலும் கவனிப்பவர்கள் தக்க சிகிச்சை அளிக்கவே இந்த ஏற்பாடு.

வேறு வேறு மக்கள் வேறு வேறு இன ரத்தம் கொண்டுள்ளனர் என்பது இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டது. ஒருவர் ரத்தத்தை மற்றொருவருக்குச் செலுத்தும் முறையான வைத்திய சிகிச்சை தொடங்கியும் அறுபது ஆண்டுகளே ஆகின்றன.

ரத்தத்தில் இன வித்தியாசம் என்பது என்ன? ஒவ்வொருவர் ரத்தத்தின் சிவப்பு அணுக்களும் வேறு வகைகளை ஏற்குமா தள்ளுமா என்று பார்த்து, 'ஏ', 'பி', 'ஏ-பி', 'ஓ' என்று இனம் பிரித்திருக்கிறார்கள். ரத்தம் செலுத்தும்போது அந்தந்த இன ரத்தத்துக்கு அந்தந்த இன ரத்தமே பார்த்துச் செலுத்துவார்கள். ஆபத்துக் காலத்தில் 'ஓ' இனம் வேறு எந்த இனத்தவருக்கும் ஏற்கும்.

ரத்தம் செலுத்துவதற்குப் பதில் பிளாஸ்மா செலுத்தும்போது இந்த இனக் கவலை இல்லை. இப்படி ரத்த இனப் பிரிவுகள் ஒன்றுடன் ஒன்று சேராமல் முரண்டு பண்ணுவதால் அபூர்வமாகச் சில சமயம் கர்ப்பக் காலத்தில் தாயின் இனப் பிரிவால் குழந்தையின் ரத்த இனப் பிரிவு தீவிரமாக எதிர்க்கப் படுவதுண்டு. இதனால் குழந்தைக்குப் பிறவியிலேயே காமாலை தெரியும். விபரீதமாகு முன், குழந்தை உடலின் முழு ரத்தத்தையும் மெல்ல வெளியேற்றி, புதுரத்தம் செலுத்தப்படுவதும் உண்டு. தாயாகப் போகிறவர்கள் பயப்பட வேண்டாம். இது எப்போதோ ஆயிரத்தில் ஒன்று என்று தோன்றும் நிகழ்ச்சி.

ரத்தச் சோகை நமது மக்களிடையே மிகவும் பரவியுள்ள ஒரு குறை. போதிய போஷாக்கு இல்லாததால் நேர்வது. கொஞ்ச

ஒருவர் ரத்தத்தை மற்றொருவருக்குச் செலுத்தும் முறையான வைத்திய சிகிச்சை தொடங்கி அறுபது ஆண்டுகளே ஆகின்றன.



தூரம் நடந்தாலும் மேல் மூச்சு வாங்குகிறது. மார்பு படபடக்கிறது. உடல் வலிக்கிறது. பசிக்கவில்லை என்றால், காரணம் ரத்தச் சோகையாகவும் இருக்கலாம். நகம் உட்புறம் வளைவதும் தலைமுடி அதிகம் உதிர்வதும்கூடச் சோகையின் அடையாளங்கள். வைத்திய உதவியுடன் தக்க உணவாலும் நல்ல உடற் பயிற்சியாலும் சோகையைக் கட்டுப்படுத்திக் குணப்படுத்தலாம். காசம் போன்ற வேறு நோயால் அவதிப்படும் போதும் ரத்தச் சோகை கூடவே நேர்வது உண்டு.

தொழில் செய்யும் சூழ்நிலையால் காரீய ஆவி, சில வாயுப் புகை போன்றவற்றை அதிகம் மூச்சிழுக்க நேர்வதால் — நாளடைவில் ரத்தம் பாதிக்கப்பட்டுச் சிலர் கஷ்டப்படுகின்றனர். மருந்தை விடத் தொழில் மாற்றமே இவர்களுக்குச் சிறந்த சிகிச்சையாகும். முடிந்தபோதெல்லாம் வேறு சூழ்நிலைகளில் முக்கியமாக ஆரோக்கியமான வெட்ட வெளிகளில் போய் இருப்பதும் நீள மூச்சை



கிஸ்ஸிஞ்ஜர் கல்யாணம்



அமெரிக்க அரசாங்கக் காரியதரிசியான ஹென்றி கிஸ்ஸிஞ்ஜர் அரசியல் துறையில் எத்தனையோ திகைக்க வைக்கும் காரியங்களைச் செய்தது போலவே தம் வாழ்விலும் அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தும்படியாக அண்மையில் திருமணம் புரிந்து கொண்டார் தமது 50வது வயதில்.

வெள்ளிக் கிழமை மணி நாலு. ஆர்லிங்டன் நீதிபதி ஈ. தாமஸ் ஒரு முக்கியமான அரசாங்க அதிகாரியின் திருமணத்தை நடத்தி வைக்கத் தயாராக இருக்கும்படி கோரப்பட்டார். திருமணத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் அந்த முக்கிய அதிகாரி யார் என்பது தெரிய வந்தது. கிஸ்ஸிஞ்ஜர் நீல நிற ஸூட்டும் கண்ணைப் பறிக்கும் டையும் அணிந்திருந்தார். 39 வயது மணப் பெண் நான்ஸி தங்க ரேக்குகள் பதித்த ஆடையை அணிந்திருந்தாள். நாலு நிமிஷத்தில் திருமண வைபவத்தை முடித்துக்கொண்டு கிஸ்ஸிஞ்ஜர் தம்பதி விமான நிலையத்துக்குக் காரில் சென்று நெல்ஸன் ராக்பெல்லர் உதவிய ஜெட் விமானத்தில் *அகபுல்கோவுக்குப் பத்து நாள் தேநிலவைத் தொடங்கச் சென்றனர்.

நான்ஸி நியூயார்க் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பணக்கார வக்கீலின் மகள். ஹார்வார்டில் கல்வி பயின்றவள். கிஸ்ஸிஞ்ஜர் அவளுக்கு ஹார்வார்டில் ஆசிரியராக இருந்திருக்கிறார்.

ராக்பெல்லர் சகோதரர்களுக்கு அயல் நாட்டு விவகாரங்களில் உதவும் நிபுணராக கிஸ்ஸிஞ்ஜர் பணியாற்றியதுண்டு. அப்போது நான்ஸியை ராக்பெல்லர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார் கிஸ்ஸிஞ்ஜர். இப்போது நான்ஸி முன்பு கிஸ்ஸிஞ்ஜர் கவனித்து வந்த அதே வேலையை ராக்பெல்லர் சகோதரர்களுக்குச் செய்து வருகிறாள்.

நான்ஸியின் உயரம் ஐந்து அடி பத்தரை அங்குலம்! அமெரிக்கர்கள் மோகம் கொள்ளும் நீண்ட அழகிய கால்களை உடைய இவர் ''நான் மாடல் பெண்ணாக இருந்தால் சோபித்திருப்பேன்!'' என்று வேடிக்கையாகக் கூறுகிறார் - இப்போது வாழ்க்கையில் என்னமோ சோபிக்காமல் இருந்து விட்டதுபோல!

கூடைப் பந்தாட்டம், பாலே நடனம் ஆகியவற்றில் நான்ஸிக்கு ஈடுபாடுண்டு.

ஆதாரம்: ''டைம்'' - பி.எஸ்.எம்.

---

* மெக்ஸிகோவின் மேற்குக் கடற்கரையில் ஆயிரக்கணக்கானவர்களை ஆண்டுதோறும் ஈர்க்கும் ஓர் உல்லாசபுரி.

நெஞ்சு கொள்ளும் மட்டும் இழுத்து விடுவதும் ரத்தத்துக்கு உதவியாகும்.

ரத்தத்தின் இரும்புச் சத்து விரயமாகும் வாய்ப்பு ஆண்களை விடப் பெண்களுக்கு அதிகம். மாதாந்திரக் காலங்களிலும், தொடர்ந்த பிரசவங்களிலும் விரயமாகும் இரும்புச் சத்தைப் புதுப்பிக்கப் பெண்கள் இரும்புச் சத்து நிறைந்த உணவுகளையும், டாக்டர் ஆலோசனையுடன் அத்தகைய மருந்துகளையும் அருந்துதல் நல்லது.

காலில் ரத்த நாளம் பருத்துக்கொள்வது ஓர் இடர். நின்றபடியே உழைப்பவர்களுக்கும், மற்றும் சில கர்ப்பிணிகளுக்கும் வரும் இந்தத் தொல்லைக்கு மாற்று, அடிக்கடி படுத்துக் கால்களை உயர வைத்து இதம் காண்பதே. நீண்ட நேரம் நின்றாக வேண்டிய போலீஸ்காரர் காலில் பட்டை கட்டிக் கொள்வது இந்த இடரைத் தவிர்க்கவே.

உடலின் வேறு பகுதிகளைப் பற்றும் புற்று நோய் ரத்தத்தின் வெள்ளை அணுக்களையும் பற்றுகிறது. காரணம் தெரியவில்லை. லுக்கிமியா என்னும் இந்த நோய் பற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

காரணமின்றிப் பல் ஈற்றிலோ மூக்கிலோ பல நாட்கள் ரத்தம் கசிந்தால் அலட்சியமாக இருக்கலாகாது.

ஒரு துளி ரத்தம் வைத்தியப் பரிசோதனையாளருக்கு ஒரு நூறு விஷயங்களைச் சொல்லுகிறது. எளிய, சிக்கனமான இந்தச் சோதனை அவசியமானது. மைக்ராஸ்கோப் என்னும் நுண்ணோக்கியின் கண்டுபிடிப்பு ரத்தப் பரிசோதனைக்கும் சிகிச்சை பற்றித் தெளிவு காணவும் மிகவும் உதவி வருகிறது.

ரத்தச் சோதனையில் ரத்த அம்சம் ஒவ்வொன்றும் எத்தனை எண்ணிக்கை, என்ன விகிதம் என்று குறிப்பார்கள். ஒவ்வொரு விகித வித்தியாசமும் ஒரு நோய் அடையாளம். சிவப்பணு பெரிதானாலும் சிறுத்தாலும், வடிவம் கோணினாலும் அளவில் அதிகமானாலும் குறைந்தாலும் வேறு வேறு நோய் அடையாளங்கள். அப்படியே இதர அம்சங்களும் நிபுணருக்கு நோய்களைச் சுட்டிக் காட்டும்.

ஓர் உடலின் ஆரோக்கியத்தைப் பதம் பார்க்க ஒரு சொட்டு ரத்தம் போதும்!

ஆலோசனை:

டாக்டர் என். ஆர். மணிவண்ணன்

கட்டுரை: **தம்பி சீனிவாசன்**

க்ளாக்ஸோ பேபி பவுடர்
அன்னையின் அன்பென அணைக்கும் அதிமென்மை



க்ளாக்ஸோ மற்றும் 'பாப்பாவுக்குப் பயனுறும்' படைப்புகளின் நம்பகமான பாரம்பரியத்தில் இன்னொன்று...

மென்மையின் உருவம்! ஏனெனில் உங்கள் பாப்பாவும் மென்மையானது தானே! அது அதிசன்னமாகத் தயாரிக்கப்பட்டிருப்பதால், நீராட்டிய பின்னரும், இடுப்புத் துணியை மாற்றிய பின்னரும் உங்கள் பாப்பாவின் பட்டு மேனியில் மென்மையைப் பொழிகின்றது. உங்கள் நம்பிக்கைக்குகந்த அதே க்ளாக்ஸோவின் தயாரிப்பு.

100 கிராம் மற்றும் 400 கிராம் டின்களில் கிடைக்கிறது.




பெற்ற மனமறியும்—பிள்ளைக் கனியமுதுக்குப் பேராதரவு—க்ளாக்ஸோ

க்ளாக்ஸோ


CMGBT-4-203 TM

ஓரியண்ட்





டெஸ்க் மின்விசிறி



சூப்பர் டீலக்ஸ் டேபிள் மின்விசிறி


வலிமை மிக்கது
ஓசையற்றது
நம்பிக்கை வாய்ந்தது

ஓரியண்ட் மின்விசிறிகள் நவீன மோஸ்தரில் கட்டப்பட்டுள்ள வீடுகள், ஆபீஸ்கள் மற்றும் அலுவலகங்களின் எழிலுக்கு ஏற்றவாறு இணைந்து பரிமளிக்கும் வகையில் அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளன. உங்களுடைய குறிப்பிட்ட தேவைகளுக்கு தகுந்தவாறு பற்பல விதங்களில் கிடைக்கின் றன—ஸீலிங், டேபிள், டெஸ்க், ஸ்டாண்ட், ஆல் பர்ப்பஸ் மற்றும் எக்ஸ்ஹாஸ்ட் மாடல்கள்.


இந்தியாவின் மிகச் சிறந்த அனுபவமிக்க மின் விசிறி தயாரிப்பாளர்களால் தேர்ந்து அளிக்கப்படும் எல்லாவிதமான ஓரியண்ட் மின் விசிறிகளும் அவற்றின் ஈடிணையற்ற சிறப்புத் தன்மைகளுக்கு இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் பெயர் பெற்றவை.

எல்லா மின்விசிறிகளும் இரண்டு வருட உத்தரவாதம் உள்ளவை.


மிக அதிக அளவில் விற்பனையாகும் பெருமை மிக்க திறுசுகள்.



ஸ்டாண்ட் மின்விசிறி



டீலக்ஸ் டேபிள் மின்விசிறி



ஆல் பர்ப்பஸ் மின்விசிறி


ஓரியண்ட் விசிறி

உலக முழுவதும் தேர்ந்தெடுக்கப்படுபவை

ஓரியண்ட் விசிறி

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், 6, கோர் பீபி லேன், கல்கத்தா-54
தொழிற்சாலைகள் : கல்கத்தா, பரிதாபாத்

CC-O-4/73



விண்ணும் மண்ணும்





30. நம்பிக்கைத் துரோகம்!

கி.ராஜேந்திரன்

பகல் நேரப் பாரிஸ் கலை நகரம் என்றால் இரவு நேரப் பாரிஸ் உல்லாஸபுரி. இந்த மாறுதலை நகரின் புறத் தோற்றத்திலும் காணலாம்; மக்களின் மன மாற்றத்திலும் உணரலாம். பாலங்கள், அரங்கங்கள், சதுக்கங்கள், தொல் பொருட் காட்சி சாலைகள், அரண்மனைகள், மாதா கோயில்கள், நினைவுச் சின்னங்கள், சமாதிகள் என்று சகலமும் நுணுக்கமான கலைச் சிறப்புக்களுடன் அமைந்திருப்பதைப் பார்க்கப் பகல் நேரத்தில் மனம் பூரிக்கும். 'எத்தனை கலை ஆர்வம் உள்ளவர்களாக இருந்தால் இத்தகைய ஓர் அற்புத நகரை உருவாக்கி யிருப்பார்கள்!' என்று எண்ணத் தோன்றும். உடனேயே அதற்குப் பிரத்தியட்ச நிரூபணமும் கிடைத்து விடும். ஃபிரெஞ்சு மக்களின் கலை ஆற்றலைத் தெரு ஓரங்களிலெல்லாம் காணலாம்! நூற்றுக் கணக்கான ஓவியர்கள் நடை பாதையில் தென்படுவார்கள். பாரிஸ் நகரக் காட்சிகளையும் உல்லாசப் பயணிகளின் உருவத் தோற்றங்களையும் தத்ரூபமான வண்ணப் படங்களாகச் சில நிமிஷ நேரத்தில் நாம் காத்திருக்கையிலேயே வரைந்து தந்து விடுவார்கள்!

இருட்டியவுடன் பாரிஸின் தோற்றம் ஏதோ மாயா ஜாலம் போலத் திடுமென்று மாறிவிடும். 'கலைநகர் என்ற அளவிலே இதுவே உலகத்தின் தலைநகர்' என்று பகலெல்லாம் பறைசாற்றிக் கொண்டிருந்த பாரிஸ் மாலை மயங்கியதும், 'உலக மகா உல்லாசபுரி இதுதான்' என்று அறிவிக்கும் விதமாகக் கணப் போதில் மாற்றமடைகிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் லட்சோபலட்சம் வண்ண வண்ண விளக்


குகள் கடைகளிலும், சதுக்கங்களிலும் தெருக்களிலும் எரியத் தொடங்குவது தான். அவை சும்மா எரிவதில்லை. பார்ப்பவர்களை மயக்கும் விதமாகவும், ஈர்க்கும் விதமாகவும், உற்சாகம் பொங்கித் ததும்பப் பண்ணும் விதமாகவும், கவலை என்ற ஒரு மனத் தத்துவமே உலகிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு விட்டது என்று நம்பச் செய்யும் விதமாகவும் கண் சிமிட்டிச் சிரிக்கும், கவர்ந்திழுத்து வரவேற்கும், கிண்டல் செய்து ஊக்குவிக்கும், ஆசை காட்டி ஆனந்தம் அளிக்கும்! இந்தப் புறத் தோற்ற மாறுதல்களுக்கு ஏற்ப பாரிஸின் அகத் தோற்றமும் மாறிவிடும். பாரீஸ் நகர வாசிகள் அலுவல்களுக்கு மூட்டை கட்டி வைத்து விடுவார்கள். வீட்டில் மனைவி, மக்களுடன் பொழுதைக் கழிப்பதும், 'பார்' ஒன்றில் ஒரு பீர்க் குவளையைக் கரத்தில் ஏந்தியபடி நண்பர்களுடன் அரட்டை அடிப்பதுமாக இருப்பார்கள். அந்நகருக்கு அன்றாடம் வரும் ஆயிரக் கணக்கான உல்லாசப் பயணிகளுக்கோ என்றால், பகலெல்லாம் சுற்றி அலைந்து கலைச் செல்வங்களைக் கண் குளிரப் பார்த்து இரசித்ததில் உடலும் மனமும் ஏன், அறிவும் கூடக் கனத்துப் போயிருக்கும்: அந்த உள்ளங்கள் இலேசாகித் தளர்ந்து கொடுக்க வசதியாக எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள். இசையா, நாடகமா, நடனமா, திரைப் படமா, அத்தனையும் உண்டு என்பதோடு அவரவர் ரசனைக்கு ஏற்ப அவற்றில் புராதனப் பண்பாட்டுடன் கூடியவையும் உண்டு, நவீன பாணியில் அமைந்தவையும் உண்டு. ஏன், நைட் கிளப்புகளைக்கூட இந்த விதமாகச் சம்பிரதாய முறைகளைப் பின்பற்றுபவை, நிகழ்காலத்துக்கு ஏற்ப மாறிக்கொண்டு வருபவை என்று இனம் பிரிக்கலாம்! எதைக் காண, அல்லது கேட்க இன்று மாலை எங்கே போவது என்பதைத் தீர்மானிப்பது ஒன்றுதான் சங்கடம்.

இரவுக்குரிய மனோரம்யமான மாறுதலை அடைந்து விட்ட பாரிஸ் நகரின் வீதிகளில் டாக்ஸி சென்று கொண்டிருந்த போது அதில் அமர்ந்திருந்த மூவரில் மைக்கேல் மட்டுமே சூழ்நிலையில் மிகவும் மனமகிழ்ந்து போனவனாக, ''அங்கே பார், இதோ பார்'' என்று அனுபமாவுக்குப் பல விஷயங்களையும் காட்டிக் கொண்டு வந்தான். நியூயார்க்கில் எஃப். பி. ஐ. ஆசாமிகள் இருவர் தன் இருப்பிடத்துக்கு வந்து போனது பற்றிய விவரங்களை மைக்கேல் கூறக் கேட்ட பிறகு அனுபமாவையும், தனஞ்செயனையும் அளப்பரிய கவலை ஆட்டிப் படைத்தது. அதுவும் அன்று நடந்தனவற்றை முழுமையாக மைக்கேல் கூறாது பாதியில் நிறுத்திவிட்டிருந்ததால் அவர்கள் வெகுவாகப் பதற்றம் அடைந்திருந்தார்கள். அப்படி இருந்தும்கூடப் பாரிஸின் பரவசப்படுத்தும் பல தோற்றங்களில் அவர்கள் மனம் லயிக்காது இருக்க முடியவில்லை.

''டாக்ஸியில் திரும்பும்போது சொல்கிறேன் என்றீர்களே...?'' என்பதாக நினைவுபடுத்தினாள் அனுபமா மைக்கேலுக்கு. ''அப்புறம் என்ன நடந்தது?''

''என்ன நடந்திருக்கும்? வாக்குவாதத்தில் நான்தான் வெற்றி பெற்றேன். இல்லாத போனால் உன்னுடன் புறப்பட்டு வந்து இதோ இரவு நகரான பாரிஸில் இப்போது நான் வளைய வந்து கொண்டிருக்கமுடியுமா?''

''எஃப். பி. ஐ. பற்றி நான் எவ்வளவோ உயர்வாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்கள் சொன்னது



எனக்கு அவர்களிடமிருந்த மதிப்பையெல்லாம் போக்கடித்து விட்டது'' என்றான் தனஞ்செயன்.

''அப்படி ஒரேயடியாக அவர்களுக்கு முட்டாள் பட்டம் கட்டத் தேவையில்லை. அவர்களுக்குக் கிடைத்த தடயங்கள், சாட்சியங்கள் பூஜ்யம். இருந்த போதிலும் அவர்கள் கடமை மறவாமல் நாட்டு நலனைக் காக்கும் உத்தேசத்துடன் இயங்கினார்கள். என்னையும் ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னார்கள். நான் அந்த அதிகாரி முகத்தில் மதுவை விட்டெறிந்ததற்காகப் பின்னால் ரொம்பவும் வருத்தப்பட்டேன். எத்தனை கண்ணியமாக நடந்து கொண்டான் தெரியுமா அவன் அப்போது? கைக்குட்டையால் முகத்தை நிதானமாகத் துடைத்துக் கொண்டு, 'நீ ஆத்திரமடைவதில் நியாயம் இருக்கிறது. என் காதலியைப் பற்றி யாராவது இழிவாகப் பேசினால் எனக்கும் தான் கோபம் வரும்' என்றான்.

'' 'உங்கள் மனங்களே விகாரமானவை' என்று நான் அவர்களைத் திட்டினேன்.

'''எங்கள் மனங்களைப் பழிக்காதே! இந்தத் துப்பறியும் தொழில் விகாரமானது என்று சொல்லு. மனத்தால் நாங்கள் யாருடைய உள்ளத்தையும் புண்படுத்த நினைக்கவில்லை. ஆனால் இந்தத் தொழில் அத்தகைய நிர்ப்பந்தச் சூழல்களை உருவாக்கி விடுகிறது' என்றான் அவர்களில் ஒருவன்.''

''அவன் கூறியதில் உள்ள நியாயத்தை நீ புரிந்து கொண்டதுபோலவே எனக்கும் அர்த்தமாகிறது'' என்றான் தனஞ்செயன். ''ஆனால் அனுபமாவும் நானும் சேர்ந்து உன்னைக் கடத்திக் கொண்டு போகத் திட்டமிட்டிருப்பதாக எந்தக் காரணத்தைக் கொண்டு அவர்கள் ஓர் அசட்டுத் தீர்மானத்துக்கு வந்தார்கள்? அதுதான் விளங்கவில்லை!''

மிக இயல்பான விதத்தில் சம்பாஷணையை வளர்த்துத் தனஞ்செயன் தன் மனத்தைக் குடைந்து கொண்டிருக்கும் கவலைகளுக்கு மாற்றுக் காண விழைகிறான் என்பதை அனுபமா உணர்ந்து கொண்டாள்.

''அதுதான் வேடிக்கை'' என்றான் மைக்கேல், தனஞ்செயனுக்குப் பதில் கூறும் விதமாக. ''என்னைக் கடத்திக் கொண்டு போக முயற்சி நடக்கிறது என்பதாக எஃப். பி. ஐ.க்கு ஒரு டெலிபோன் வந்ததாம். ஃபோன் செய்த



வன் என்ன காரணத்தாலோ தான் யார் என்பதை வெளியிடவில்லை. அரை நிமிஷத்தில் அவர்களை எச்சரித்துவிட்டு ஃபோனை வைத்து விட்டாலும். எங்கிருந்து அந்த ஃபோன் வந்தது, யார் செய்தார்கள் என்று ஏதும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதை அப்படியே அலட்சியப்படுத்தி விடவும் அவர்கள் மனம் இடம் தரவில்லை. கவலை கொண்டு என் நடவடிக்கைகளை ஆராய்ந்திருக்கிறார்கள். சமீப காலத்தில் நீ எங்கள் நண்பனாகி யிருப்பதையும், அனுபமா என்னை விட்டு விட்டு உன்னுடன் அடிக்கடி பல இடங்களுக்குச் சென்று வருவதையும், எல்லோரும் ஒன்றாக இந்தியா செல்ல விமான டிக்கெட் வாங்கியிருப்பதையும் பார்த்தார்கள். ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டு அனுபமா உதவியுடன் என்னைக் கடத்திக்கொண்டு போக நீ முயலுகிறாய் என்று தீர்மானித்து விட்டார்கள்!

''ஆனால் யார் என்னைக் கடத்திக் கொண்டு போகப் போவதாக எஃப். பி. ஐ. கருதியதோ அவனேதான் என்னைக் காப்பாற்றி யிருக்கிறான், உண்மைக் கடத்தல்காரர்களிட மிருந்து! என்ன விநோதம் பார்த்தாயா?''

இவ்வாறு கூறி மைக்கேல் தனஞ்செயனின் கரத்தை நன்றியுடன் பற்றி அழுத்தினான். தனஞ்செயனுக்குச் சுய வெறுப்பு நெஞ்சிலிருந்து உருண்டு திரண்டு வந்து தொண்டையை அடைத்துப் பேசவொட்டாமல் செய்தது.

''ஆக மொத்தம் டெலிஃபோனில் எஃப். பி. ஐ. காரியாலயத்தைக் கூப்பிட்டு எச்சரித்தவன் விஷயம் அறிந்துதான் பேசியிருக்கிறான்'' என்றாள் அனுபமா. ''எந்தக் காரணம் பற்றியோ அவர்கள் முழு விவரமும் கூறாததால் எஃப். பி. ஐ. தவறான முடிவுக்கு வர நேர்ந்திருக்கிறது!''

தனஞ்செயனுக்கு என்ன நடந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகப் புரிந்தது. தன்னைப் பின்தொடர்ந்து வந்து, அனுபமா காரில் ஒலிபரப்புக் கருவியை ஒளித்து வைத்தும் தன் ஹோட்டல் அறையைச் சோதனை செய்து பார்த்து உதை வாங்கிக் கொண்டும் போய்ச் சேர்ந்த பாகிஸ்தானியக் கைக்கூலிகள் தாம் எஃப். பி. ஐ.க்கு ஃபோன் செய்திருக்கிறார்கள். குண்டர்களாகிய அவர்கள் தாங்கள் யார் என்பதை வெளியிடாததில் ஆச்சரியமில்லை. மைக்கேல் இந்தியா செல்வதை எஃப். பி.ஐ. தடுத்து விடக் கூடும்


மைக்கேல் பாரத நாடு செல்வதைத் தடுத்தாக வேண்டும் என்று அவர்களுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு பிறந்திருக்கும். வேறு வழியின்றி ஹைஜாக் முயற்சியில் இறங்கி யிருக்கிறார்கள். அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் பாகிஸ்தானுக்கு இரட்டிப்பு லாபமாயிருந்திருக்கும். ஏனெனில் இந்தியாவுக்கு ஏற்படும் நஷ்டத்தையும் தனது லாபமாகப் பாகிஸ்தான் கருதிக் களிக்கும்.

இந்த எண்ணங்களைத் தன் உள்ளத்தோடு வைத்துக் கொண்டு, தனஞ்செயன் மைக்கேலிடம் கேட்டான்: ''பால் ஸ்மித்தும் ஜிம்கார்ட்டரும் தங்களது ஹைஜாக் முயற்சிக்குக் கொடுத்த காரணம் பொய் என்று நீ நினைப்பதாகச் சொன்னாயே, எந்த அடிப்படையில் அந்த முடிவுக்கு வந்தாய்?''

''அது முழுப் பொய் என்று நான் நினைப்பது மட்டுமல்ல. உறுதியாக நம்பவும் செய்கிறேன்'' என்றான் மைக்கேல். ''விமானத்தை அவர்கள் ராவல்பிண்டிக்குத்தானே கொண்டு செல்ல நினைத்தார்கள்? நிச்சயம் அவர்கள் பாகிஸ்தானிய ஏஜெண்டுகளாகத்தான் இருக்க வேண்டும். ராக்கெட் விஞ்ஞானத் துறையில் என் அனுபவ ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வது பாகிஸ்தானின் நோக்கமாயிருக்க வேண்டும்.''

''உங்கள் ஊகம் எஃப். பி. ஐ. காரியாலயத்துக்கு ஃபோன் செய்தவர்கள் கொடுத்த தகவலுக்கு அனுசரணையாகத்தான் உள்ளது. ஆனால் அவ்வாறு தகவல் கொடுத்தது யார்?'' என்று ஒரு கேள்வியை அனுபமா எழுப்பினாள்.

''அந்தக் குண்டர்களுக்குள்ளேயே ஏதேனும் பிணக்கு ஏற்பட்டு ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்க எண்ணி ஃபோன் பண்ணி யிருக்கலாம். முழு விவரமும் சொன்னால் தொலைபேசியில் பேசியவனும் தொல்லைக்கு உள்ளாக நேரும் என்பதால் கோடி காட்டி விட்டு நிறுத்திக் கொண்டிருக்கிறான்'' என்று தனஞ்செயன் அவசரம் அவசரமாக ஒரு விளக்கம் தந்தான். அந்த அவசரத்தை மைக்கேல் கண்டு கொள்ளக் கூடாது என்ற கவலையில், ''எஃப். பி. ஐ. ஆசாமிகள்தாம் தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்திருக்கின்றனர்'' என்று ஒரு தமிழ்ப் பழமொழியையும் கூறி, விளக்கி அவனைச் சிரிக்க வைத்தான்.



வி ஜி பி
எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்
murphy மர்பி
mecom
மெகாம்
கார் ரேடியோக்கள்
டெலிவிஷன்
Rallifan
Crompton
USHA
Vijay
ராலி ஓரியண்ட்
ஜிஇஸி உஷா விஜய்
கூல் ஹோம் கிராம்ப்டன்
சீலிங், டேபிள், பெடஸ்டல்
மற்றும் எக்ஸாஸ்ட் விசிறிகள்
NELCO
நெல்கோ
ரேடியோக்களும்
டிரான்ஸிஸ்டர்களும்
Dunlopillo
டன்லப்பில்லோ
மெத்தை, தலையணை
மற்றும் குஷன்கள்
TIMESTAR
ரோமர் டைம்ஸ்டார்
ஃபேவர் லூபா ஜெனிவ்
ஹென்ரி சாண்டஸ்
எனிகார்
உலகப் பிரசித்தி பெற்ற
கைக்கடிகாரங்கள்
VIP
VIP பிரீஃப் கேஸ்
ஸூட் கேஸ்
எச்.எம்.வி.
மாவு அரைக்கும்
இயந்திரம்
ஆம்ப்ளிபையர், ஸ்டீரியோ
சவுண்ட் எக்யிப்மெண்ட்
ALLWYN
கோத்ரெஜ் ஆல்வின்
ஃப்ரிஜ்ரேட்டர்கள்
க்ரோம்கிராஃப்ட்
USHA
MERRITT
உஷா
மெர்ரிட்
தையல் மெஷின்கள்
கோத்ரெஜ்
டைப்ரைட்டர்
Sumeet WIECO
RALLI-MIX
RICO
சுமீத் வீகோ ரிகோ
ராலிமிக்ஸ் மிக்ஸி
எலக்ட்ரிக் மிக்ஸர்கள்
காரியர் வண்டிகளும்,
மூன்று சக்கர சைக்கிள்களும்
PHILLIPS
Atlas
BSA
RALEIGH
ROBIN HOOD
Hercules
பிலிப்ஸ் பிஎஸ்ஏ ராலே
ஹெர்குலிஸ் கார்ட்டன்
ராபின்ஹூட் அட்லஸ்
ஆண்களுக்கும் பெண்களுக்கும்
சிறந்த உலகப் பிரசித்தி பெற்ற
சைக்கிள்கள்
Racold
GEC
ராகோல்டு
வீனிட்டோன் ஜிஇஸி
வாட்டர் ஹீட்டர்,
வாட்டர் பாய்லர், கெட்டில்,
டோஸ்டர்,
காபி பர்கொலேட்டர்,
அயர்ன்கள், ஹாட் ப்ளேட்
மற்றும் குக்கிங் ரேஞ்சுகள்
வி ஜி பியின் நிகரற்ற சுலபத் தவணை முறைத்
திட்டத்தினால் இதுவரை 4 இலட்சத்திற்கும்
மேலான மக்கள் பயன் பெற்றுள்ளனர்!
வி ஜி பியின் எழில் கொஞ்சும்
காட்சியறைகளுக்கு இன்றே வருகை
தந்து, நீங்கள் விரும்பும் எந்தப்
பொருளையும், உங்கள் வசதிக்கேற்ப
முழு விலை கொடுத்தோ, தவணை
முறையிலோ வாங்கிச் செல்லுங்கள்.
GEC
Crompton
ஜிஇஸி டெக்ஸ்மோ
கிராம்ப்டன் கருணா
வீட்டு உபயோகத்திற்கும்,
விவசாயத்திற்கும் உகந்த
மோட்டார்களும் பம்ப்
செட்டுகளும்
FOLDELUXE
STEEL FOLDING FURNITURE
மடக்கும் மேஜைகளும்
நாற்காலிகளும்
பிரஸ்டிஜ்
பிரஷர் குக்கர்கள்
Prestige
Westclox
WEKUP
Jayc0
JAZ
FAVRE-LEUBA GENEVE
RIVEX
MASTER
SHIMCO
CAMY
JOTHI
HOTTA
NAYAK
ஹெஎம் வெஸ்ட்கிளாக்ஸ்
வேக்அப் ஃபேவர் லூபா
ஜாஸ் கேமி ஜோதி
ரிவக்ஸ் மாஸ்டர் ஜேகோ
ஹோட்டா ஷிம்கோ நாயக்
டைம்பீஸ், அலாரம் மற்றும்
சுவர் கடிகாரங்கள்
NIPPON
ஹைரிச் நிப்பான்
இரும்பு கட்டில் மற்றும்
சோபாக்கள்
வி ஜி பி
வி. ஜி. பன்னீர்தாஸ் & கோ.
பிரைவேட் லிமிடெட்
விஜிபி சதுக்கம், சைதாப்பேட்டை, சென்னை-600015
கிளைகள்: விஜிபி பில்டிங்ஸ், சைதாப்பேட்டை
சென்னை-600015 போன்: 442333
27, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-600017
போன்: 440246
விக்டரி ஹவுஸ், 7, மவுண்ட்ரோடு, சென்னை-600002
போன்: 812121
27, ரத்தன் பஜார், சென்னை-600003 போன்: 33214
விஜிபி கிளைகள்: செங்குன்றம், செங்கல்பட்டு, அரக்கோணம்,
காஞ்சிபுரம், வந்தவாசி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர்.
நீங்கள் வாங்கும் பொருள்களெல்லாம் பாங்கான முதலீடே!
national-365


கோடையிலே சிரிப்பாறி —கே. வி. முரளி



ஒரு தேநீர் விருந்தில் கேட்டது :

மனைவி: இத்தனை தடவை 'ஐஸ்கிரீம்' கேட்டு வாங்கிக் கொண்டு வருகிறீர்களே உங்களுக்கு வெட்கமா யில்லை ?

கணவன்: இல்லை. ஏனென்றால் உனக்கு என்று சொல்லித்தான் கேட்டு வாங்கி வருகிறேன் !



"என்ன சார் இது? ஏர்-கண்டிஷனர் விலையைக் கேட்டுவிட்டு வாங்காமலே போகி றீர்கள், என்ன விஷயம் ?"

"வேண்டாம். விலையைக் கேட்டதுமே குளிர் எடுத்துவிட்டது !"

அனுமதித்தனர்?" என்று கேட்டாள் அனுபமா.

"என் கோபம் அடங்கிய பிறகு அவர்களிடம் சாந்தமாகப் பேசி நிலைமையை விளக்கினேன். புரிந்து கொண்டார்கள்" என்றான் மைக்கேல்.

"என்ன சொன்னீர்கள்?"

"குழந்தையாக இருந்தபோது அமெரிக்கா வந்து சேர்ந்த நீ, அதன் பின் இந்தியாவைப் பார்த்ததே இல்லை என்று எடுத்துரைத்தேன். தனஞ்செயனின் நட்புக் கிடைத்ததை யொட்டி உன் இதயத்தில் இந்தியாவைக் காண வேண்டும் என்ற ஆர்வம் தலைதூக்கியது என விளக்கினேன். என் காதல் ஒருதலைப்பட்சமானது என்று அந்த எப். பி. ஐ. பேர்வழிக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தது. இந்தியப் பெண்ணாகிய உன்னை இந்தியச் சூழலில் வைத்துப் பார்க்கும்போது உன் மனத்தை இன்னும் நன்றாக என்னால் புரிந்துகொள்ள முடியும், அதன் மூலம் உன் இதயத்தில் எனக்கு ஒரு நிரந்தர இடத்தைத் தேடிக் கொள்ள முடியும் என்று நான் கருதுவதாக அவர்களிடம் தெரியப் படுத்தினேன். அதனால் உன்னுடன் வருமாறு இந்தியாவுக்கு என்னை நீ அழைத்தது என் பாக்கியம் என்றேன். இந்தப் பயணம் முடிந்து அமெரிக்கா திரும்பும்போது நீயும் நானும் கணவன் — மனைவியாக விளங்குவோம் என்று கூட நம்பிக்கையுடன் பேசினேன். நான் அப்படிக் கூறியது தவறா அனு?"

நாத் தழுதழுக்க அவன் பேசியபோது அனுபமாவின் இதயம் சுக்கல் சுக்கலாக உடைந்து கொண்டிருந்தது. எவ்வளவு ஆழ்ந்த, அழுத்தமான, அசைக்க முடியாத காதலை அவன் வெளிப்படுத்திக் கெஞ்சாத குறையாகப் பேசுகிறான்! அந்தக் காதலை ஏற்காதது மட்டுமின்றி அவனை ஏய்த்துக் கொண்டு மிருப்பது எவ்வளவு பெரிய பாவம்!

"இல்லை. நீங்கள் பேசியதில் தவறே இல்லை. ஆனால் இவ்வளவு உயர்ந்த ஓர் உள்ளத்தை எனதாக்கிக் கொள்ளக் கூடிய மனப் பக்குவத்தை நான் இன்னும் பெறவில்லையே என்ற துயரம் தான் எனக்கு" என்றாள்.

"இதைவிட அதிகமான கருணையுள்ள பதிலை எதிர்பார்த்தேன் அனு!" என்று கூறி ஒரு பெருமூச்செறிந்தான் மைக்கேல்.

அனுபமாவின் உள்ளம் கரைந்து கொண்டிருக்கையில் அருகில் இருந்த தனஞ்செயனின் மனம் கடினமாகிக் கொண்டிருந்தது. அவன் மேலும் விவரங்களைத் தெரிந்துகொள்ள விழைந்தவனாக, "உங்கள் காதல் ஈடேற வாழ்த்தி அனுப்பி வைத்தார்களோ, அந்தத் துப்பறியும் புலிகள்!" என்பதாக இலேசாகக் கிண்டல் எட்டிப் பார்க்க மொழிந்தான்.

"அப்படி என்னைச் சுலபமாக விட்டு விடவில்லை. மேலும் கேள்வி கேட்டுக் குடைந்தார்கள். நானும் அனுபமாவும் இந்தியா செல்வதைச் சரி என்று கொண்டாலும், 'அதே தினத்தில், அதே விமானத்தில் தனஞ்செயன் புறப்படுவது ஏன்?' என்று வினவினார்கள்.

"'தனஞ்செயனின் வியாபாரம் முடிந்து அவன் தாய் நாடு திரும்புகிற

நேரமும் நாங்கள் இந்தியாவுக்குச் சுற்றுலா நிமித்தம் புறப்படுகிற சமயமும் ஏறத் தாழ ஒன்றாக இருக்கவே நண்பர்கள் ஒரே நாளில் ஒருசேரக் கிளம்பத் தீர்மானித்தோம். நான் மனப்பூர்வமாக விரும்பித்தான் அவர்களுடன் போகிறேன். தனஞ்செயன் ஒற்றனுமில்லை; அனு எனக்கு ஆசை காட்டி மோசம் பண்ணுகிறவளும் இல்லை' என்று கூறினேன். அப்போதும் அவர்கள் சமாதானமடையவில்லை.''

''ஏன் அவ்வளவு சந்தேகமாயிருந்தால் என்னைச் சிறையில் அடைத்துவிட்டு உனக்கும் இந்தியா செல்லக் கூடாது என்று அவர்கள் தடையுத்தரவு போடுவதுதானே?'' என்று தனஞ்செயன் கோபமாகவே கேட்டான்.

''இதே மாதிரிதான் எனக்கும் கோபம் வந்தது. இதே வினாவைத்தான் நானும் எழுப்பினேன்'' என்ற மைக்கேல் மேலும் தொடர்ந்தான்: ''அந்தக் கட்டத்தில்தான் அவர்கள் திணறித் திண்டாடிப் போனார்கள். 'என்ன காரணம்காட்டித் தனஞ்செயனை நாங்கள் சிறைப்படுத்த முடியும், அல்லது உன் பயணத்தை ரத்துச் செய்யச் சொல்ல முடியும்!' என்று அழாத குறையாகக் கேட்டார்கள். எந்த விதமான சாட்சியமும் இல்லாதபோது உன்னைப் போன்ற ஓர் அயல்நாட்டு அரசாங்க அதிகாரியை அல்லது என்னைப் போன்ற ஒரு கௌரவமான பிரஜையைக் கைது செய்தாலோ தடுத்து நிறுத்தினாலோ ஏற்படக்கூடிய பின் விளைவுகளுக்காக அவர்கள் பயந்தார்கள். 'வாஷிங்டனிலும் நியூயார்க்கிலும் உள்ள இந்தியத் தூதராலயங்கள் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா? சூடான செய்திகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதித் தள்ளாவா? டெலிவிஷனில் இந்த அதிகார துஷ்பிரயோகம் அமர்க்களப்படாதா? ஏற்கெனவே சீர்கெட்டிருக்கும் அமெரிக்க இந்திய உறவுகள் இந்த விவகாரத்தினால் மேலும் மோசமாகாதா?' என்றெல்லாம் என்னையே திருப்பிக் கேட்டார்கள். 'இந்தியாவுக்குப் போக வேண்டாம்' என்று என்னிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்வதற்கு அதிகமாக நடவடிக்கை ஏதும் அவர்களால் எடுக்க முடியவில்லை.''

இதற்குள் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலை டாக்ஸி நெருங்கி நின்றது.

''என்ன இருந்தாலும் எனக்கு உங்கள் மீது கொஞ்சம் மன வருத்தம் தான். ஏன் முன்பே என்னிடம் நீங்கள் இந்த விவரங்களை யெல்லாம் கூறவில்லை?'' என்றாள் அனுபமா ஒரு விதமான கோபக் கொஞ்சலுடன்.

''எஃப். பி. ஐ. ஆட்களின் உங்களைப் பற்றிய சந்தேகங்கள் ஆதாரமற்றவை என்பது இப்போது நிரூபணமாகி விட்டதால் இனி இதையெல்லாம் உங்களிடம் வெளியிடுவதில் தவறில்லை என்று தோன்றியது; சொன்னேன்'' என்றான் மைக்கேல். ''முன்பே கூறியிருந்தால் உன் மனம் ரொம்ப வேதனைப் பட்டிருக்கும் இல்லையா? ஒருவேளை இந்தப் பயணம் வேண்டாம் என்றுகூட நீ முடிவு செய்து விடுவாயோ என்று எனக்குப் பயம்.''

''அது மட்டும்தானா, அல்லது எஃப். பி. ஐ. ஆட்களின் விஜயத்துக்குப் பிறகு உனக்கே எங்கள் மீது கொஞ்சம் சந்தேகம் விழுந்து விட்டதா?'' என்று தனஞ்செயன் கேட்டான்.

''என் மனம் அணுவளவும் உங்களைத் தவறாக எண்ணவில்லை. ஆனால் என் அறிவு இலேசாகப் பேதலித்துத் தான் போயிற்று. இப்போது அதுவும் சீர்ப்பட்டு விட்டது'' என்று கூறியவாறே டாக்ஸிக்குப் பணம் எண்ணிக் கொடுத்து, 'டிப்' வழங்கி அனுப்பினான் மைக்கேல்.

ஹோட்டலுக்குள் நுழைந்து ஃபிரெஞ்சுப் போலீஸாரிடமிருந்து தங்களுக்கு ஏதாவது தகவல் உண்டா என்று விசாரித்தார்கள். வாஷிங்டனிலிருந்து எதிர்பார்த்த செய்திகள் இன்னும் ஃபிரெஞ்சுப் போலீஸாருக்குக் கிடைக்கவில்லை என்றும், ஆகவே இன்னும் ஓரிரு நாட்கள் அவர்கள் பாரிஸில் தங்க வேண்டியிருக்கும் என்றும் தெரிய வந்தது.

''நாளைக் காலை நாம் விமானத்தில் ஏறப் போவதில்லை என்றால் இன்று இரவு நீண்ட நேரம் கண் விழிப்பதில் தவறில்லை'' என்று கூறிக் கண் சிமிட்டினான் மைக்கேல்.

அவன் சிந்தனைப் போக்கை உடனே புரிந்து கொண்டவனாக, '''பாரிஸ் வந்துவிட்டு இவர்கள் நைட் கிளப்புக்குப் போகாமல் திரும்புவதா?' என்ற நோக்கில்தான் நம் பயணத்தை ஃபிரெஞ்சு போலீஸார் ஒத்திப் போட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது'' என்றான் தனஞ்செயன்.

'''நாம் நைட் கிளப்புக்குப் போகலாம்' என்று வெளிப்படையாகத் தைரியமாகச் சொல்லுங்களேன். எதற்குச் சுற்றி வளைத்துச் சாக்குப் போக்குக் காட்டிப் போலீஸாரையும் துணைக்கு அழைக்கிறீர்கள்?'' என்றாள் அனுபமா.

(தொடரும்)

தலைவிதிக்குக்கூட ஒரு தலை விதியை நிர்ணயித்து விடுகிறது திரை உலகு!

சமூகத்தின் உச்சியில் ஒரு பெண்! சமுதாயத்தின் அடித்தளத்தில் ஒரு பெண் — இருவரும் இரட்டைப் பிறவிகள்.



வாணி

ஒருவரையொருவர் அறியாத வகையில், விதி அவர்களின் விலாசத்தை மாற்றுகிறது. விதி எதை வேண்டுமானாலும் மாற்றலாம். ஆனால் சினிமா உலக நியதிகளை மட்டும் அசைக்க முடியாது என்பது அதன் தலைவிதி! ஜெமினியின் ''அபூர்வ சகோதரர்'' களிலிருந்தே நமக்குப் பழகிப்போன கதைதான். ஆனால், யார் என்ன சொன்னால் என்ன? இந்த மாதிரி இரட்டைப்பிறவிகளின் மாறுபட்ட கூத்துக்களெல்லாம் மக்களுக்குப் பிடிக்கின்றனவே!

இரட்டைப் பிறவிச் சகோதரிகளாக நடிப்பவர் வாணிஸ்ரீ. நடுங்கி, ஒடுங்கிப் பயப்பட ஒரு வாணிஸ்ரீ: சீறிப் பாய்ந்து போராட ஒரு வாணிஸ்ரீ! சக்கைப் போடு போடுகிறார்.

முரட்டு மனிதனாக வருபவர் சிவாஜி கணேசன். நன்றாய் நடிக்க அவருக்குச் சொல்லித் தர வேண்டுமா என்ன? ''பாத்துப் போ பாத்துப் போ'' என்ற பாடலுக்கேற்ற அபிநயங்களுடன் குடி போதையில் தள்ளாடும் சிவாஜி, ரசிகர்களின் கையொலியைப் பெறுகிறார். சிவாஜி அதிகமாகச் சண்டைக் காட்சியில் நடிப்பதில்லையே என்று குறைப்படும் ரசிகர்களுக்கு அந்தக் குறையை வைக்கவில்லை.

சாது மனிதனாக வருபவர் முத்துராமன். முரட்டு வாணிஸ்ரீயுடன் பேசி, காதலிக்கும்போது நன்றாய் நடித்திருக்கிறார். காலில் சக்கர வண்டியைக் கட்டிக்கொண்டு டாக்டர் ரவியும், ராணியும் மலைப் பாதையில் வளைந்து வளைந்து போவதும், எதிரில் வரும் லாரி, கார்களுக்கு ஒதுங்கி வழி விடுவதும் நன்றாய்ப் படமாக்கப் பட்டிருக்கின்றன.

ராணி

இந்தக் கட்டத்தில் ஹிந்திப் பாட்டு சுவாரஸ்யமாக இருந்தது. தமிழ்ப் பாட்டு 'சப்'பென்று போய் விட்டதே!

கடைசியில், 'டிஷ்யூம், டிஷ்யூம் சண்டை' 'போதும், போதும்' என்று கதறும் அளவுக்கு வருகிறது. வில்லனாக வரும் ஸ்ரீகாந்துக்கு நல்ல சான்ஸ். — பெண் புலியிடம் தம் பெல்ட்டினாலேயே அடிவாங்க! நன்றாய் அடிவாங்குகிறார்.

ஆரூர் தாஸின் வசனம் நன்றாயிருக்கிறது. சுந்தரபாபுவின் ஒளிப் பதிவு பாராட்டுக்குரியது — படம் அதி அற்புதமான வண்ணங்களுடன் ஜொலிக்கிறது. டைரக்ஷன் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் சாணக்யா, சி. வி. ராஜேந்திரன். சிறப்பாய்ச் செய்திருக்கிறார்கள்.

இது ஹிந்தியில் வந்த ''சீதா அவுர் கீதா'' வின் நேரடித் தமிழாக்கம். — நடிகர்கள்தான் மாறியிருக்கின்றனர். விஜயா புரொடக்ஷன்ஸுக்கிருக்கும் வசதிகளுக்கு நேரடியாக ஒரு தமிழ்க் கதையையே வண்ணப் படமாக்கியிருக்கலாமே! கார்பன் காப்பி எதற்கு?

—காந்தன்

************************ இழப்பு அறியாச் சிறப்பு ************************

■ ஜப்பானில் உள்ளஒரு தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்க வந்த பிரிட்டிஷ் மந்திரி ஒருவர், தாம் வந்ததை எந்தத் தொழிலாளியும் ஏறிட்டுப் பார்க்கவில்லையே என்று உடன் வந்த மானேஜரிடம் ஆச்சரியத்துடன் கேட்டார். மானேஜர் பதில் சொல்லாமல் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு போர்டைக் காண்பித்தார்:

''ஒரு விநாடி இழப்பு, தேசத்தின் இழப்பு''. ஜப்பானின் முன்னேற்ற ரகசியம் புரிகிறதா?

-'மிர்ரர்' - பாமாப்ரியா



சற்றும் எதிர்பாராமல் நிகழ்ந்த சந்திப்பு அது. அரை நிமிஷம் முன்னே பின்னே ஆகியிருந்தால் அந்தச் சந்திப்பு நேராமலேகூடப் போயிருக்கலாம். அதன் பிறகு நேர்ந்த மனக் குழப்பங்களுக்கு இடமே இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் கணக்காக அந்த அரை நிமிஷத்தில்தான் எல்லாமே நடந்துவிட்டது.

பாதசாரிகள் பாதையைக் கடந்து செல்வதற்கு அனுமதியளிக்கும் பச்சை விளக்கு எரிந்ததும் ரகு அவசரம் அவசரமாகச் சாலையின் எதிர்ப்புறத்து நடைபாதையை எட்டிப் பிடிக்க விரைந்தான். அப்போது உரக்க ஒலித்த ஒரு கார் ஹாரனின் ஒலி அவன் கவனத்தை அந்தத் திசையில் திருப்பியது.

அதே சமயம் டிரைவர் சீட்டிலிருந்து வெளியே எட்டிப் பார்த்து ஒரு பெண் முக மலர்ச்சியுடன் அவனை நோக்கி, ''ஹலோ, ரகு!'' என்று கூறியவாறு கையசைத்தாள். மறு கணமே ரகு அடையாளம் கண்டுகொண்டான். ''யார் பாமாவா ?''

''எதிர்பார்க்கவே யில்லை. இல்லையா ?''

''எப்படி எதிர்பார்க்க முடியும்? நீ தில்லியிலோ, கல்கத்தாவிலோ இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன்.....''

''ஓ! எப்போதாவது என்னைப் பற்றியும் நினைப்பது உண்டு என்று சொல்லு!''

''நினைக்காமல் இருக்க முடியுமா ?''

''எந்த விதத்திலாவது நினைத்துக் கொண்டிருக்கிறாயே, அது போதும்!'' என்று குறும்புத்தனம் துள்ளும் விழிகளால் அவனை ஊடுருவுவது போல் பார்த்தவாறு கூறினாள் பாமா. ரகு தன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டான்.

பாமா மெல்ல நகைத்துக் கொண்டே தொடர்ந்து கூறினாள்: ''நான் இங்கே வந்து ஆறு மாதமாகிறது. வந்ததிலிருந்து உன்னைத் தான் வலை போட்டுத் தேடிக் கொண்டிருக்கிறேன். எப்படி எப்படியோ விசாரித்துப் பார்த்தும் பயனில்லை. பத்திரிகையில் விளம்பரம் கொடுக்காததுதான் பாக்கி ! நல்ல வேளை ! அதற்குள் நீயாகவே என் கண்ணில் பட்டுவிட்டாய் ! காரில் ஏறிக் கொள்'' என்று கூறியவாறு கார்க் கதவைத் திறந்து விட்டாள் பாமா.

''நான் வீட்டுக்குப் போக வேண்டாமா?''

''பஸ்ஸில்தான் போக வேண்டுமா ? நான் உன்னை வீட்டு வரையில் கொண்டு விடப் போகிறேன்.''

"இன்று வணங்குகிறேன்!"

உமா சந்திரன்



"நான் இருப்பது நுங்கம்பாக்கம்."

"கல்பாக்கமாயிருந்தாலும் சரி. உன்னைக் கொண்டு விட்டபிறகு இந்திரா நகருக்குப் போய்க் கொள்கிறேன்."

"அங்கேதான் வீடா?"

"அப்பா ரிடையர் ஆன பிறகு அங்கே தான் வீடு கட்டிக்கொண்டு குடியேறி யிருக்கிறோம்."

ரகுவின் கையில் டிபன்பாக்ஸும் ஃபிளாஸ்க்கும் அடங்கிய பை இருந்தது. காலையில் மேக மூட்டம் இருந்ததால் கையோடு காவலாக ஜானகி கொடுத்த குடையையும் எடுத்துக் கொண்டுதான் காரியாலயத்துக்குக் கிளம்பி யிருந்தான். இப்போது அவை இரண்டையும் கையில் பிடித்துக் கொண்டு பாமாவின் அருகே காரில் உட்கார்ந்திருந்தபோது சங்கோசமாகவே இருந்தது ரகுவுக்கு.

அவனுடைய சங்கோசத்தைக் கவனிக்காதவன் போல் பாமா கூறினாள்: "நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி ரகு! ஜானகிக்குத்தான் உன் மேல் எவ்வளவு பரிவு! மறக்காமல் குடையையும் கொடுத்து அனுப்பியிருக்கிறாளே!"

"அதனால்தான் வருகிற மழையும் வராமலே போய்விட்டது!" என்ற ரகு, சட்டென்று நினைத்துக் கொண்டு கேட்டான்: "அது சரி! என் மனைவியின் பெயர் உனக்கு எப்படித் தெரிந்தது?"

"நான்கு வருஷங்களுக்கு முன்னால் அப்பா டெல்லியில் இருந்த போது உன்னுடைய கல்யாண அழைப்புக் கடிதம் வந்ததே!"

சற்றுப் பொறுத்து அவள் கூறினாள்: "நுங்கம்பாக்கத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். உன் வீட்டுக்கு நீதான் வழி சொல்ல வேண்டும்."

"அடுத்த பஸ் ஸ்டாண்ட் பக்கமாக இறங்கிக் கொள்கிறேனே! அங்கிருந்து ஐந்து நிமிஷ நடைதான்!" என்றான் ரகு.

"உன் வீட்டுக்கு நான் வர வேண்டாம் என்று சொல்கிறாயா?"

"அப்படி இல்லை, பாமா. நெருக்கடியான சந்து பொந்திலெல்லாம் காரை ஓட்டிக் கொண்டு வருவது சிரமமாயிருக்குமே, அதற்காகத்தான்!"

"ஒரு சிரமமும் இல்லை. காசியின் சந்து பொந்துகளில்கூடக் கார் ஓட்டப் பழகியிருக்கிறேன். நீ வழி மட்டும் சொன்னால் போதும்" என்று சிரித்துக் கொண்டே கூறிய பாமா, ரகு காட்டிய வழியே காரை லாகவமாக ஓட்டிச் சென்றாள்.

பாமாவும் காரிலிருந்து இறங்கியபின்புதான் அவன் வீடு பூட்டியிருப்பதைக் கவனித்தான். "அடேடே! ஜானகி இன்னும் ஆபீஸிலிருந்து திரும்பவில்லை போலிருக்கிறது!" என்றான்.

பாமா அவனை வியப்புடன் பார்த்தாள். "ஜானகியும் வேலைக்குப் போகிறாளா?"

"ஆமாம். எழும்பூர் ரயில்வே நிலையத்தில் டைப்பிஸ்ட் உத்தியோகம். சாதாரணமாக எனக்கு முன்னாலேயே அவள் வீடு திரும்பி விடுவாள். நான் டவுனிலிருந்து பஸ்ஸைப் பிடித்து வருவதற்கு நேரமாகிவிடும். இன்று எனக்குக் கார் சவாரி கிடைத்துவிட்டதனால் நான் முந்திக் கொண்டுவிட்டேன்!" என்று கூறிய ரகு, தன்னிடமிருந்த சாவியால் பூட்டைத் திறந்தான்.

"யார் முதலில் வந்தாலும் வீட்டைத் திறப்பதற்கு வசதியாக ஆளுக்கொரு சாவி வைத்துக் கொண்டிருக்கிறோம்" என்றான்.

"நல்ல ஏற்பாடுதான்!" என்றாள் பாமா.

இரண்டே அறைகள் கொண்ட அடக்கமான வீடு. கதவு திறந்ததும் எதிர்ப்பட்ட அறையில் ஒரு பக்கம் மேஜை நாற்காலிகளும் மறுபக்கம் கட்டிலும் போடப்பட்டிருந்தன. துணி உலர்த்தும் கொடிக்கும் அங்கேயேதான் வசதி செய்யப்பட்டிருந்தது. கட்டிலுக்கு எதிர்ப்புறத்துச் சுவரில் கோட் ஸ்டாண்டுகளும் கண்ணாடியும் மாட்டப்பட்டிருந்தன.

"சிரிக்காதே, பாமா. டிராயிங் ரூம், பெட் ரூம் எல்லாமே இந்த ஓர் அறைதான் எங்களுக்கு!" என்றான் ரகு.

இசையை வென்ற தமிழ்!



தமிழ்த் தாத்தா உ. வே. சுவாமிநாதய்யர் தமிழ் ஏடுகளைக் காத்துத் தந்தது அனைவருக்கும் தெரியும். தமிழ்த் தாத்தா கனம் கிருஷ்ணய்யர் என்ற சங்கீத மாமேதையின் வம்சத்தில் வந்தவர். ஆரம்ப நாளில் மாணவராக இருந்தபோது சுவாமிநாதய்யருக்குத் தமிழிலும் இசையிலும் ஆர்வம் இருந்தது. அதைக் கண்ட அவரது ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ''ஐயா! நீர் தமிழ், இசை இரண்டினில் ஒன்றில் கவனம் செலுத்துங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார். தமிழ்த் தாத்தா இசையைத் தியாகம் செய்துவிட்டுத் தமிழுக்கு ஏற்றம் தேடித் தந்தார். தமிழின்பம் இசை ஆர்வத்தை வென்றது!

அவரது பரம்பரையில் வந்த இளம் குருத்து கொள்ளுப் பேத்தி சுகன்யாவுக்கு இசை ஊற்று அற்றுப் போய்விடவில்லை. மிருதங்க வாத்தியம் பயில்கிறாள்! சுகன்யா திருவல்லிக்கேணி ஜயகணேச தாள வித்யாலயத்தின் மாணவிகளில் ஒருத்தி. வித்யாலயத்தின் ஆண்டு விழாவில் இந்தச் சிறுமி சுகன்யாவின் வித்வத் திறமையை வியந்து திரு எஸ்.டி. சுந்தரம் கூறியது.

தகவல்: பி. எஸ். எம்.

'' ஏன் இதற்கென்ன குறைச்சல்? உங்கள் இரண்டு பேருக்கும் இதைவிடப் பெரிய வீடு தேவையில்லையே !''

'' இதற்கே இருநூறு ரூபாய் வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைவிடப் பெரிய வீட்டுக்கு வாடகை கொடுக்க எங்களுக்குச் சக்தியும் கிடையாதே'' என்றான் ரகு.

பாமா பெருமூச்செறிந்தவாறு ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். ''ஜானகி கெட்டிக்காரிதான்! அறை சிறியதாயிருந்தாலும் எவ்வளவு கச்சிதமாக வைத்திருக்கிறாள்!'' என்றாள். அப்போது அவள் கண்கள் மேஜையின் மேல் இருந்த போட்டோவைக் கவனித்து விட்டன. கல்யாணமான புதிதில் ரகுவும் ஜானகியும் சேர்ந்தாற்போல் எடுத்துக் கொண்ட நெஞ்சளவு போட்டோ அது. அதைக் கையில் எடுத்துப் பார்த்ததும் பாமா, ''ஜானகி இவ்வளவு அழகியா ? நான் எதிர்பார்க்கவே யில்லை!'' என்றாள் வியப்புடன். ரகு சிரித்தான். ''நான் அதிர்ஷ்டசாலி என்று முன்பே நீ சொல்லிவிட்டாயே!'' என்றான்.

குடையைக் கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு டிபன்பாக்ஸும் பிளாஸ்க்கும் அடங்கிய பையை மேஜையின் மீது வைத்ததும் அவன் கேட்டான்: ''என்ன சாப்பிடுகிறாய் பாமா ? சூடாகக் காப்பி கலந்து எடுத்து வரட்டுமா?''

''சட்டுப்புட்டென்று ஏதாவது கொடுத்து என்னை அனுப்பிவிடலாம் என்று நினைக்காதே. ஜானகியை நேரில் பார்த்த பிறகுதான் நான் இங்கிருந்து கிளம்புவதாயிருக்கிறேன்'' என்றாள் பாமா.

வெளியே திடீரென்று வானம் குமுறியது. மின்னல்கள் அடுத்தடுத்துப் 'பளீர் பளீர்' என்று வெட்டின. கண் மூடித் திறப்பதற்குள் சடசடவென்ற இடியோசையுடன் பலத்த மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது.

ஜானகி கட்டாயம் மழையில் நனைந்து கொண்டுதான் வரப் போகிறாள்! அவள் நனையக்கூடாதென்ற பரிவுடன், இருந்த ஒரு குடையையும் அவளிடம் கொடுத்துவிட்டு வெறும் கையுடன்தானே புறப்பட்டுச் சென்றிருந்தான்! அவன் வெட்டியாகக் குடையைச் சுமந்ததுதான் கண்ட பலன். ஜானகியின் முன் யோசனையைப் பரிகசிப்பது போல் இப்போது மழை அட்டகாசமாகப் பொழியத் தொடங்கி விட்டதே !

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு டேராடூனில் இதே மாதிரி முன்னிருட்டு வேளையில் முன் எச்சரிக்கையில்லாமல் கொட்ட ஆரம்பித்திருந்த மழையில் நனைந்து கொண்டு கையில் பிடித்த ஸூட்கேஸுடன் கால்நடையாகவே பஸ் ஸ்டாண்டை நோக்கி விரைந்து சென்ற நினைவு அவன் நெஞ்சத் திரையில் நிழலாடியது. ''போய் வருகிறேன்'' என்று பாமாவிடமும் அவள் தந்தையிடமும் கடைசி முறையாக ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ளாமலே அவன் கிளம்பியிருந்தான். சிறிது தாமதித்தாலும் எங்கே தன் உறுதி தளர்ந்துவிடுமோ என்ற அச்சம் அவனைப் பிடித்துத் தள்ளியிருந்தது.

அன்று பாமாவின் தகப்பனார் அவனிடம் தம்முடைய விருப்பத்தை வெளியிட்டபோது அவன் அதிர்ந்துதான் போய்விட்டான். அவரோ பெரிய அதிகாரி. அவனோ, எந்தத் தலைமுறை உறவையோ சொல்லிக் கொண்டு அவரிடம் வேலை கேட்க வந்த சாதாரண ஆள். அவனுடைய பட்டப் படிப்பை மட்டும் காட்டி உடனடியாக அவனுக்கு வேலை எதுவும் தேடிக் கொடுக்க முடியாத நிலையில் அவர் தம்முடைய சொந்தக் கணக்கு வழக்குகளையும் வீட்டு நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்ள உதவியாக அவனைத் தம் வீட்டோடு வைத்துக் கொள்ளத் தீர்மானித்தார். அவருடைய அந்தத் தீர்மானத்துக்கு இன்னொரு காரணமும் இருந்தது. மனைவியின் மறைவுக்குப் பிறகு மூன்று ஆண்டுகளாக ஜகதீசன் தம்முடைய ஒரே மகள் பாமாவைப் பெண்கள் கல்லூரி ஹாஸ்டலிலேயே தங்கியிருந்து படிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். ரகு அவரிடம் வேலை கேட்டு வந்த சமயத்தில்தான் பாமா இறுதிப் பரீட்சை எழுதி முடித்துவிட்டு விடுமுறைக்கு வீட்டுக்கு வந்திருந்தாள். வீட்டில் சமையல்காரனும் ஏவின குரலுக்கு ஏனென்று கேட்க வேலையாட்களும் நிறைந்திருந்தாலும் பாமாவுக்குப் பாதுகாப்பாகப் பொறுப்பான மனிதர் யாராவது வீட்டோடு இருப்பது அவசியம் என்று ஜகதீசன் எண்ணினார். ரகுவின் கண்ணிய

தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலுக்கா, திருக்கருகாவூரில் அமைந்துள்ள

ஸ்ரீ சர்வசித்தி விநாயகர் ஆலயத் திருப்பணி பத்திரிகை

தேவாரப் பாடல்பெற்ற திருக்கருகாவூர் கிராமத்தில் வெட்டாற்றின் தென்கரையில் கடை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சர்வசித்தி விநாயகரின் ஆலயம் பழுதுற்றிருப்பதால் அதைத் திருப்பணி செய்து மகா கும்பாபிஷேகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி ஆலயத்திற்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. ஸ்ரீ சர்வசித்தி விநாயகப் பெருமான் கலியுக வரதராக இருந்து கொண்டு வேண்டுவோர் வேண்டுவனவற்றைப் பெற்றுய்ய அருள்பாலித்து வருவது அனைவரும் அறிந்ததே. இந்த ஆலயத்தைத் திருப்பணி செய்து மகா கும்பாபிஷேகம் நடத்த முற்பட்டிருக்கும் ஆஸ்திக பொதுமக்களின் முயற்சியில் இதைக் கண்ணுறும் அன்பர்கள் தாராளமாக நிதி உதவி செய்து திருப்பணியிலும் கும்பாபிஷேகத்திலும் பங்கேற்று ஸ்ரீ சர்வசித்தி விநாயகப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரர் ஆகுமாறு வேண்டிக் கொள்கிறோம். திருப்பணிக்கும் பணம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டிய விலாசம் :

ஆர். திருநாவுக்கரசு, நெல் வியாபாரம், கடைத் தெரு, திருக்கருகாவூர் S. O., தஞ்சை R. M. S. வழி.

இங்ஙனம்
கிராம மகாஜனங்கள்



ஸ்ரீ கோழிக்கோடு பாரி & கம்பெனியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற **ஸ்ரீ சிவராமய்யர்** அவர்களது சதாபிஷேக வைபவம், பம்பாய் வில்லி - பார்லாவில், 1974 பிப்ரவரி மாதம் 19ம் தேதி அன்று அவர்கள் இல்லத்தில் அதி விமரிசையாக நடைபெற்றது. உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்து வைபவத்தை சிறப்பித்தார்கள்.

நேற்றிரவு நீங்கள் கொசுக்கடியால் துன்பப்பட்டீர்களா?

இன்றே வாங்குவீர் ரிப்லெக்ஸ் க்ரீம் இன்றிரவு விரட்டுவீர் கொசுக்களை!




இன்பமணம் கொண்ட சிப்லெக்ஸ் க்ரீம் கொசுக்களை விரட்டுவதில் உன்னதமானது. முற்றிலும் தீங்கற்றது: சருமத்துக்குஎரிச்சலூட்டாது. குழந்தையின் மென்மையான சருமத்தின் மீது இதைப் பத்திரமாகத் தடவலாம்.



உங்கள் முகம், கை, கால்களின் திறந்த பகுதிகளின் மீது இரவில் சிப்லெக்ஸ் தடவுங்கள். கொசுக்களின் தொந்தரவின்றி இரவில் நிம்மதியாகத் தூங்கலாம்.



சிப்லெக்ஸ் க்ரீம் வெண்மையாக இருப்பதால், உங்கள் சருமத்தில் எளிதில் மறைந்து விடுகிறது. அது துணிகளின் மீது கறை உண்டு பண்ணுது; சருமத்தின் மீது எண்ணைப் படிய விடாது.



2 சைஸ்களில் கிடைக்கிறது: 25 கிராம் மற்றும் 50 கிராம் ட்யூப்.

நறுமணமுள்ள

ரிப்லெக்ஸ்

கொசுக்களை விரட்டியடிக்கிறது

டாடா ஃபைஸன் தயாரிப்பு

TF-R-4A

மான தோற்றமும் அடக்கமான பேச்சும் எடுத்த எடுப்பிலேயே அவருக்குப் பிடித்து விட்டன.

''இப்போதைக்கு இங்கேயே இருந்து கொள். சந்தர்ப்பம் நேரும்போது தகுந்தபடி சிபாரிசு செய்து நல்ல உத்தியோகம் செய்து வைக்கிறேன். கைச்செலவுக்கும் ஊருக்கு உன் தாயாருக்கு அனுப்புவதற்குமாக மாதம் இருநூறு ரூபாய் கொடுத்து விடுகிறேன். சரி தானே ?'' என்று ஜகதீசன் கூறியபோது ரகுவுக்கும் அது வரவேற்கக்கூடிய ஏற்பாடாகவே தோன்றியது. ஆனால் அதே ஜகதீசன் தன்னை மருமகனாக்கிக் கொள்ள விரும்பும் அளவுக்கு ஒரு சூழ்நிலை உருவாகும் என்று ரகு கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

எந்த வீட்டில் ஒதுங்க இடம் கிடைத்தால் போதும் என்று வந்திருந்தானோ, அதே வீட்டுக்கு மருமகனாகும் அதிர்ஷ்டம் அவனைத் தேடி வந்தபோது அவன் அதிர்ந்து போய் நின்றான். அவனது உள்ளத்தில் நிகழ்ந்த போராட்டத்தைப் பிரதிபலிப்பவை போல் அவன் உதடுகள் துடித்தன. வார்த்தைகள் வெளிக் கிளம்ப மறுத்தன. மிகுந்த கஷ்டத்துடன் அவன் கூறினான்: ''என்னை மன்னித்து விடுங்கள் சார். என்னை நம்பி ஊரில் ஒரு பெண் காத்திருக்கிறாள். அவளை என்னால் மறக்க முடியாது!'' அதன் பிறகு அவன் அங்கே நிற்கவில்லை. அதே வேகத்தில் தன் அறைக்கு விரைந்து சென்று துணிமணிகளைச் சூட்கேஸில் அள்ளிப் போட்டுக் கொண்டு பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டான்.

அன்று பாமாவின் உள்ளம் எத்தகைய கொடிய வேதனைக்கு உள்ளாகியிருக்கும் என்று எண்ணிப் பார்த்துக் கொண்டான் ரகு. பாமா முற்போக்கான கொள்கை உடையவள்தான். உணர்ச்சிகளின் பலவீனத்துக்கு ஆளாகித் தன்னைத் தானே வதைத்துக் கொள்ளும் பெண் அல்ல அவள். புத்திபூர்வமாக எதையும் புரிந்து கொண்டு உள்ளத்தைச் சமநிலையில் வைத்துக் கொள்ளும் விவேகம் அவளிடம் இருந்ததையும் ரகு அறிந்தே இருந்தான். அதே சமயம் அவள் எவ்வளவு தன்மான உணர்வு கொண்டவள் என்பதும் ரகுவுக்குத் தெரியும். அவளுடைய அன்பைத் துச்சமாக உதறிவிட்டு அவளிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் அவன் புறப்பட்டுச் சென்ற கொடுமையை அவள் எப்படித் தாங்கிக் கொண்டாள் ? அது மட்டுமல்ல, அந்த ஏமாற்றம் பற்றிய மனக் கசப்பு சிறிதும் இல்லாமல், பழைய கலகலப்பு கொஞ்சமும் மாறாமல், இவ்வளவு பெருந்தன்மையாக அவனிடம் நடந்துகொள்ள அவளால் எப்படி முடிகிறது?

வெளியே மழை மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. ஜானகி பாவம், மழையில் அகப்பட்டுக் கொண்டு எப்படித் தவிக்கிறாளோ !

ரகுவின் எதிரே உட்கார்ந்து கொண்ட பாமா கேட்டாள்: ''உனக்கு நினைவிருக்கிறதா ரகு? டேராடூனில் இதே மாதிரி கொட்டுகிற மழையில்தான் நீ எங்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போனாய்!''

''அதைப் பற்றி உனக்கு என் மேல் கோபம் இல்லையா பாமா ?''

''இல்லாமல் இருக்குமா? அன்று கோபப் பட்டேன். ஆத்திரம் அடைந்தேன். மணிக் கணக்காக அழுது கொண்டிருந்தேன். அந்நிலையில் உன்னை மீண்டும் நேரில் பார்த்திருந்தால் என்ன செய்திருப்பேனோ எனக்கே தெரியாது. என் மனத்தில் விழுந்த அடி சாமானியமானதா ? அதிலிருந்து மீண்டு நான் பழைய நிலையை அடைய எத்தனை மாதங்கள் பிடித்தன தெரியுமா ?''

ரகு எதுவும் பேசவில்லை. மௌனமாகத் தலை குனிந்திருந்தான்.

பாமா தொடர்ந்து கூறினாள்: ''ஆனால் அந்தக் கோப தாபமும் மன வேதனையும் எவ்வளவு அர்த்தமற்றவை என்பதைப் பின்னால் புரிந்து கொண்டேன். அதையெல்லாம் இப்போது நினைத்துக் கொண்டால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது!'' — சட்டென்று



''சோறு ஆறிப் போவதைப்பற்றிக்கூடக் கவலையில்லாமல் அப்படி என்ன அந்தப் புது ரேஷன் கார்டைப் பார்வை ?''

'' ஏதோ ரேஷனில் தப்பாமல் தரப் போகிற மாதிரி சுமார் பத்து சாமான்களின் பேர்களைப் போட்டிருக்கிறார்களே! அதில், குடி தண்ணீரையும், உப்பையும் விட்டு விட்டார்களே என்றுதான் !''

பாமா சிரித்தேவிட்டாள். ரகு வியப்புடன் அவளை நோக்கினான்.

''ஸாரி ரகு! அன்றைக்கு நீ யாரிடமோ பயந்து கொண்டு ஓடுவது போல் ஓடினாயே, அதை நினைத்துக் கொண்டேன். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை !'' என்று சிரிப்பினிடையே கூறினாள் அவள்.

'' என்னிடமேதான் எனக்குப் பயம் தோன்றியது பாமா. உன் அப்பா எனக்கு அளிக்கத் தயாராயிருந்த செல்வ வாழ்க்கையின் மயக்கத்தில் எங்கே என் உறுதி தளர்ந்துவிடுமோ என்று பயந்தேன்......''

பாமா பெருமூச்செறிந்தாள். ''ஜானகி பாக்கியசாலி. அவ்வளவு தூரம் உன் அன்புக்குப் பாத்திரமான ஒரு பெண் இருக்கிறாள் என்று எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால், அப்படி உன்னை வீட்டை விட்டே விரட்டியடிக்கும்படியான அசட்டுத்தனத்துக்கு மனத்தில் இடமே கொடுத்திருக்கமாட்டேன் !'' என்றாள்.

ரகுவின் நெஞ்சில் வேறு நினைவு அலைகள்... படுத்த படுக்கையாகச் சிறுமி ஜானகி.... கடும் ஜுரம் கண்டிருந்தது. அதிலிருந்து அவள் பிழைத்தெழுந்ததே மறு பிழைப்பாயிற்று. எழுந்தாளே ஒழிய, ஜுரத்தின் வேகம் இளம்பிள்ளை வாதத்தில் கொண்டு விட்டிருந்தது. கால்கள் வலுவிழந்துவிட்டன. கோணிக் கோணித்தான் அவளால் நடக்க முடிந்தது. ''ஜானகி! யார் செய்த வினையோ, இப்படி ஆகிவிட்டாயே ! நொண்டிப் பெண்ணை யார் கல்யாணம் செய்து கொள்வார்கள்? உன்னை எப்படிக் கரை சேர்க்கப் போகிறேனோ, தெரியவில்லையே!'' — அந்த ஏழைத் தாயின் இந்த அலறலைக் கேட்டுக் கொண்டு நின்றிருந்தான் ரகு. அன்றே அவன் மனத்தில் தோன்றிய தீர்மானம்....

''என்ன ரகு, ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டாயே !'' — பாமாவின் இந்தக் கேள்வி அவனை நிகழ்காலத்துக்குக் கொண்டு வந்தது.

சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் கூறினான்: ''ஏன் பாமா, ஒன்று கேட்டால் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டாயே ?''

பாமா விரக்தியாகச் சிரித்தாள்.

'' நீ என்ன கேட்கப் போகிறாய் என்று எனக்குத் தெரியும் ரகு. அதற்குப் பதிலும் சொல்லிவிடுகிறேன். எனக்குத் திருமணம் ஆகவில்லை. திருமணம் அப்படி ஒரு தவிர்க்க முடியாத தேவையென்றும் நான் நினைக்கவில்லை !'' என்றாள் அவள்.

ஏதோ ஒன்று ரகுவின் நெஞ்சைக் கசக்கிப் பிழிவது போல் இருந்தது. அதே சமயம் வெளியே கார் அருகே ஜானகியின் ரிக்ஷா வந்து நிற்பதை அவன் கவனித்துவிட்டான். சட்டென்று பாய்ந்து குடையை எடுத்துப் பிரித்துக் கொண்டு வெளியே ஓடினான்.

'' நான்தான் தெப்பமாக நனைந்தாயிற்றே ! இப்போது குடை எதற்கு?'' என்று சிணுங்கினாள் ஜானகி.

'' நான் பார்க்காதபோது சரி. கண் எதிரே நீ நனைந்து கொண்டு வருவதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா?'' என்று கூறிய ரகு, ஒரு குழந்தையைத் தூக்குவது போல் அவளைத் தூக்கிக் கொண்டான்.

''மழைத் தண்ணீரில் மேடுபள்ளம் தெரியாது. உன் கால் ஏதாவது பள்ளத்தில் மாட்டிக் கொண்டு விட்டால் ஆபத்து !''

வீட்டுக்குள்ளே வந்து அவன் அவளை இறக்கிவிட்டபோதுதான் யாரோ ஒரு யுவதி அங்கே இருப்பதைக் கவனித்தாள் ஜானகி. அந்நியப் பெண் எதிரே கணவன் தன்னைக் குழந்தை போல் தூக்கிக் கொண்டு வந்ததை நினைத்து அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. ஈர உடையுடன் நிற்பதற்குப் ..டிக்கவில்லை. ''இதோ வந்துவிட்டேன் !'' என்று கூறிய அவள், பரபரப்பில் சூச்சுக் கால்கள் வெளியே தெரியக் கோணிக் கோணி நடந்தவாறு உள்ளே சென்றாள்.

பாமாவின் கண்களில் குபீரென்று கண்ணீர் பொங்கி நின்றது.

''நான் வருகிறேன் ரகு!''

''அதற்குள்ளா ?''

'' ஜானகியைப் பார்த்தாயிற்றே !''

'' உன்னை அவளுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டாமா ?''

''வேண்டாம். அவள் எதிரே நான் அழுதேவிடுவேன் !''

வாயிலை நோக்கி விரைந்த பாமா கதவருகே சற்று நின்று திரும்பினாள்.

''ரகு! உன்னை நான் என்றுமே கும்பிட்டதில்லை. இன்று கும்பிடுகிறேன்.....'' என்று அவனை நோக்கிக் கரம் கூப்பிய பாமா, சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டு வேகமாக வெளியே நடந்தாள்.



வெள்ளைத் துணி-உடைகளை மிகப்பளிச்சிடும் தூய வெண்மை ஆக்குவதற்கு

ராபின் ப்ளூ தான் தேவை


(என்பதை லட்சக்கணக்கான தாய்மார்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர்.)



வெள்ளைத் துணி—உடைகளை, ஸோப்பு அல்லது டிடர்ஜெண்ட் கொண்டு வெளுக்கச் செய்வது மட்டும் போதாது. மிகப் பளிச்சிடும் தூய வெண்மை ஆக்குவதற்கு அவற்றை ராபின் ப்ளூவில் மூழ்கச் செய்தெடுக்க வேண்டும். ஒரு வாளி தண்ணீரில் ஒரு சிட்டிகை ராபின் ப்ளூ அற்புதமாக வேலை செய்யும்.

ராபின் ப்ளூ

ARBC-39 TAM



ஆசைகள் மடிவதில்லை
கதை: கௌசிகன்
சித்திரம்: சூர்யா...
16
சதீஷின் குற்றச்சாட்டிலும் எரிச்சலடைகிறார் நந்தகோபால்...
நீ குதர்க்க வாதம் புரிகிறாய் சதீஷ். உன் வாதப் படியே இருந்தாலும் இரண்டாவது உயிலைச் சோமு தன்னிடம் வைத்துக் கொள்ளுவானேன்?
அதற்கும் காரண மிருக்கிறது..
உயிலைத் தயாரித்தது லாயர் அனந்தாச்சாரி. அந்த உயிலில் தருமராஜனும் சாட்சிகளும் கையெழுத்திட்டுப் பூர்த்தி செய்திருப்பது அவருக்குத் தெரியுமா தெரியாதா என்பதில் சோமுவுக்கு ஒரு சந்தேகம்...
...உண்மையும் அதுதான். தான் தயாரித்துக் கொடுத்த உயிலுக்குத் தருமராஜன் முறைப்படி உயிர் கொடுத்தாரா என்பது அனந்தாச்சாரிக்கும் தெரியாததினால் தான்; இந்த வழக்கின் போது இது பற்றிய தகவலைக் கூற அவர் முன் வரவில்லை.
இப்போது அவர் படித்தது அவர் தயாரித்த உயிலின் நகல். தருமராஜன் அதைப் பதிவு செய்யா விட்டாலும் அதை முழுமையாக்கி இருந்தார். அதுதான் சோமு கையிலிருந்தது.
ம்... ஆக உன் ஊகங்களை உண்மையாக்க மேனகாவை மறுபடி விசாரித்தாக வேண்டும். ஆனால் உன் துரதிர்ஷ்டம் அவளோ இறந்து போன சோமுவினால் எங்கோ கடத்தப்பட்டு விட்டாள்! ஹ... ஹ.... ஹா!


மேனகா எங்கும் கடத்தப்பட வில்லை. என்னை ஏமாற்றுவதற்காக சோமு ஆடிய நாடகம் அது. முனிசாமியை மிரட்டி அவள் இருக்குமிடத்தை அறிந்தேன்...
அப்படியானால் மேனகா...?
... இப்போது இங்குதானிருக்கிறாள். இதோ வரவழைக்கிறேன். இன்ஸ்பெக்டர் சார்... அந்தப் பெண்ணை அழைத்து வாருங்கள்.
கோர்ட்டிலே தான் அவங்களைக் குறுக்கு விசாரணையெல்லாம் செய்தாச்சே; மறுபடியும் கௌரவப்பட்டவங்களை இப்படி... இது நல்லா இல்லிங்க சதீஷ் சார்...
மிஸ்டர் கலியபெருமாள்! உண்மையான கௌரவமுடையவர்களிடம் உங்களுக்கு அநுதாபமோ அநுவலோ கிடையாதென்பதை நான் அறிவேன். உங்கள் அரசியல் சதுரங்கத்தில் மேனகாவும் ஒரு காய் தானே?
இன்ஸ்பெக்டர் சார், நீங்கள் யோசிக்க வேண்டாம். நான் தான் உங்களிடம் எல்லாம் விளக்கமாகக் கூறி இருக்கிறேனே. மிஸஸ் தருமராஜனை அழைத்து வாருங்கள்...
முனுசாமி... நீ எழுந்திருந்து அந்த நாற்காலியை மேனகாவிற்கு ஒழித்துக் கொடு... கான்ஸ்டபிள், அந்த ஸ்பாட் லைட்டுகளை அந்த நாற்காலியை நோக்கி ஃபோகஸ் செய்து வையுங்கள்...
தொடரும்

திருமணமா? 'ரெடி'! உத்தியோகமா? சரி!



மை விழி மகளிர்

சாரு அவசரம் அவசரமாக உள்ளே நுழைந்தாள்.

''அம்மா! அம்மா! இன்ஸ்பெக்டர் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டாராம் அம்மா!'' என்றாள் பரபரப்புடன். அந்த விவாகம் நடந்த விமரிசையை விளக்கினாள்.

''ஸாக்ரட்டீஸிடம் சிலர் 'கல்யாணத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார்கள். ஸாக்ரட்டீஸ் என்ன பதில் சொன்னார் தெரியுமா?'' என்று புதிர் போடுவது போல் சாரு, ஹேமா, வேணு எல்லாரையும் பார்த்துக் கேட்டார் சங்கரன்.

'''கல்யாணமா? ஐயோ, கூடவே கூடாது!' என்று சொல்லியிருப்பார்!'' என்றாள் சாரு!

''அதுதான் இல்லே. 'பிரம்மச்சாரியாக இருந்தாலும் கஷ்டமாக இருக்கு. இல்லறத்தானாக இருந்தாலும் கஷ்டமாக இருக்கு. ஆகவே இதில் தேர்ந்தெடுப்பதற்கு என்ன இருக்கிறது!' என்று கூறிவிட்டார்.''

''வயசு வந்த பெண்களிடம் 'கல்யாணம் என்றால் கஷ்டம்' என்று உபதேசம் செய்து கொண்டிருக்கேளாக்கும். நன்றாக இருக்கிறது உங்கள் காரியம்! ஏற்கனவே சாரு இந்த வருஷம் படிப்பு முடிஞ்சதும் வேலைக்குப் போகப் போகிறேன், கல்யாணம் கார்த்திகை என்று சொல்லாதே என்று மிரட்டிக் கொண்டிருக்கிறாள். நீங்க வேறு இப்படிச் சொல்லுங்கள்!'' என்றாள் தாயார் அகிலாண்டம்.

''அப்படியா? உனக்கு ஏற்ற உத்தியோகம் போலீஸ் உத்தியோகம்தான். போலீஸில் சேர்ந்துடுமே!'' என்றான் கிண்டலாக வேணு.

ஹேமா, ''தில்லியில் ஒரு கல்யாணமான பெண் குடும்பம் நடத்தக் தன் புருஷன் சம்பாதித்த பணம் போதவில்லை என்று போலீஸ் இலாக்காவில் வேலை செய்ய மனுப் போட்டாளாம். எடுத்த எடுப்பிலேயே அவளுக்கு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வேலை கிடைச்சுடுத்தாம்'' என்றாள்.

''இந்தக் காலத்துப் பெண்களுக்கு இந்த வேலைதான் செய்யலாம், இந்த வேலை செய்யக் கூடாது என்ற வியவஸ்தையே கிடையாது. புருஷா பண்ணுகிற அத்தனை வேலைக்கும் அவர்கள் போட்டிக்கு வந்துடறா!'' என்றாள் அத்தை.

''அதனால் புருஷாளுக்குக் கிடைக்க வேண்டிய வேலை கிடைக்காமல் போறது அத்தை!'' என்று வேணு குறைப்பட்டுக் கொண்டான்.

''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லே அத்தை. புருஷாளை விடச் சில வேலைகளைப் பொம்மனாட்டிகள் திறமையாகப் பண்ணுகிறதனாலேதான் பெண்களைத் தேர்ந்தெடுக்கிறா!'' என்றாள் ஹேமா.

''காலம் போகிற போக்கையும் விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிற வேகத்தையும் பார்த்தா, ஆண் பெண் இரண்டு பேரும் சம்பாதித்தால்தான் குடும்பத்தைச் சம்ரக்ஷணை பண்ண முடியும். முன் மாதிரி ஒருவன் சம்பாதிக்கப் பத்துப் பேர் சாப்பிடறது என்பது நடக்காத காரியம். இந்த வேலை புருஷர்கள் செய்யற வேலை, இந்த வேலை பெண்கள் செய்யற வேலை என்ற பாகுபாடே இனி இருக்காது'' என்றார் சங்கரன்.

''மொத்தத்தில் அது இதுன்னு பேசி இந்த வருஷம் சாருவுக்குக் கல்யாணம்



பண்ணாமல் தட்டிக் கழிக்கப் பார்க்கிறீர்கள். நான் சும்மா இருக்கப் போகிறதில்லை'' என்றான் அகிலாண்டம்.

''எப்பப் பார்த்தாலும் 'கல்யாணம் கல்யாணம்!' என்று என்ன ஜபம் வேண்டிக் கிடக்கிறது'' என்று முணுமுணுத்தாள் சாரு.

''பாரு சாரு! உன் கழுத்திலே தாலி கட்டறேன் என்று எந்தப் பையனும் ஒற்றைக் காலில் நின்னு தபஸ் பண்ணலை. அதே போல் நீ காலேஜ் முடிச்சுட்டு வா உத்தியோகம் தரேன் என்று யாரும் காத்துக் கொண்டிருக்கவில்லை. அதனால் அம்மா கல்யாணம் என்றாலும் சரி என்று சொல்லு. அப்பா உத்தியோகம் என்றால் அதுக்கும்சரி என்று சொல்லு. எது எது எப்ப நடக்குமோ அது அது அப்ப அப்ப நடக்கும். நீ ஏதாகிலும் சொல்லி ஏன் பொல்லாப்பு வாங்கிக்கிறே!'' என்றாள் ஹேமா.

''ஹேமா பாட்டிக்கு ஜே!'' என்றான் வேணு.

''என்னடா ஹேமாவைப் பாட்டியாக் கிட்டே?'' என்றார் சங்கரன்.

''பின்னே இவ்வளவு வேதாந்தம் பேசினால் அவள் பாட்டியில்லாமல் வேறு என்னவாம்?''

எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர்.

''வேலை கிடைப்பது மாப்பிள்ளை கிடைப்பதை விடக் கஷ்டமான விஷயமாச்சே'' என்றார் சங்கரன்.

''வேலை கிடைக்காதவர்கள் வீட்டோடு உட்கார்ந்திருக்கும் பழக்கம் நம்மிடையே தான் இருக்கிறது. காலத்தை வீணாக்காமல் ஏதாவது சமூகத் தொண்டிலாவது ஈடுபடலாமில்லையா?'' என்றாள் சாரு.

''கிறிஸ்துவ சமுதாயத்தில் சமூக சேவையில் விருப்பம் கொண்ட பெண்கள் கன்னி மாடத்தில் சேர்ந்து விடுகிறார்கள். கல்கத்தாவில் அன்னை தெரஸாவின் கன்னி மாடத்தில் எத்தனை கன்னியர் ஏழை எளிய நோயாளிகளுக்கு எவ்வளவு அரிய தொண்டு செய்கிறார்கள்? குஷ்ட ரோகிகளுக்குக் கூட அவர்கள் சேவை புரிகிறார்கள். ஏகநாதருக்கே பணிவிடை செய்வது போல் கருதி அவர்கள் தொண்டாற்றுகிறார்கள்!'' என்று மிகவும் புகழ்ந்து பாராட்டினார் சங்கரன்.

''சுவாமி விவேகானந்தரும் இந்தக் கருத்தில்தான் ராமகிருஷ்ண மடம் நிறுவினார். 'தீனர்களுக்குப் பணி செய்வது தெய்வப் பணி' என்றார்.''

இவ்வாறு வேணு கூறியதும், ''எங்கு நல்ல கருத்துத் தோன்றினாலும் அதைத் தன் வயப்படுத்திக் கொள்வதுதான் இந்து சமயம், இந்து மரபு'' என்றார் சங்கரன்.

வட்ட மேஜை

டிக்கெட் இல்லாப் பயணம் (புது முறை!)

உயர்நிலைப் பள்ளிகளில் நூலகச் சேவையை மாணவர்களுக்காக விரிவுபடுத்த முடியாத நிலையில் நூலகர் பதவியை இரத்து செய்திருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

நூலக வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வது மிக மிக முக்கியமானது. திடமான உடல் வளர்ச்சிக்குப் புரதச் சத்து எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது நூலகச் சேவை இளம் சிறார்களுக்குக் கிடைக்கச் செய்வது. எவ்விதத்திலும் அலட்சியம் செய்யக் கூடாதது ஆகும். கல்விக்குத் தற்பொழுது 130 கோடி ரூபாய் செலவழிக்கும் போது நூலகச் சேவையின் விரிவுக்கு நூலகர் நியமனத்துடன் சுமார் ரூ. 20 இலட்சங்கள் செலவழிக்கத் துன்பப்படுவதில் பொருளே இல்லை.


நூலகச் சேவையை விரிவுபடுத்துவதால் மாணவர்களுக்கு இளமையிலேயே நல்ல பண்புகள், திறமைகள், நல்ல கொள்கைப் பிடிப்புகள், விஷயங்களைக் கிரகிக்கும் ஆற்றல் இவை கிடைக்கின்றன.

அரசு உடனே நூலகச் சேவையைப் பள்ளிகளில் விரிவுபடுத்த, நூலகர் பதவியை ஏற்படுத்த, ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை — 7 சு. நடராஜன்
17–4–74 பெண்டிங்க் உயர்நிலைப் பள்ளி

லால்குடியிலிருந்து 13–3–74 அன்று மாலை திருச்சி செல்வதற்காக, லால்குடி பேருந்து நிலையத்தில் காத்துக்கொண்டிருந்தேன். திருச்சி செல்வதற்காக என்னைப் போலக் கிட்டத்தட்ட இருநூறு பேர் காத்துக் கிடந்தார்கள். மாலை 4–30 மணிக்கு வரவேண்டிய திருமழபாடி — திருச்சி (பாண்டியன் போக்குவரத்துக் கழகம்) பேருந்து அரை மணி தாமதமாகச் சுமார் 5 மணி அளவில் லால்குடி நிலையத்துக்கு வந்தது. அந்தப் பேருந்தில் இருந்த நாலு பயணிகளும் லால்குடியில் இறக்கி விடப்பட்டனர். அந்தப் பேருந்தின் நடத்துனரை அணுகியபோது அவரிடம் டிக்கட் புத்தகம் இல்லை என்றும், இருந்த டிக்கட்டுக்கு மட்டும் நான்கு பயணிகளைத் திருமழபாடியிலிருந்து ஏற்றி வந்ததாகவும், டிக்கட் இல்லாமல் பிரயாணிகளை ஏற்றிச் செல்வது முறையல்ல என்றும் கூறி விட்டுச் சென்றார். அந்தப் பேருந்து எந்தப் பயணியையும் ஏற்றிக் கொள்ளாமல் திருச்சிக்குக் காலியாகச் சென்றது. பயணிகள் மிகுந்திருக்கும் மாலை நேரத்தில் ஒரு பேருந்து டிக்கட் புத்தகம் இல்லாத காரணத்தால் காலியாகச் செல்வதென்றால் அதைக் காண மிகவும் வேதனையாக இருக்கிறது. தேசிய மயம் என்று யாரையும் நிம்மதியாக வாழ விடாமல் இந்த அரசு செய்து வருகிறது என்பதற்கு இதை விட அத்தாட்சி வேறு என்ன வேண்டும்? இதே தனியார் துறையில் இருந்தால் இப்படி நடக்குமா?

திருவல்லிக்கேணி
22–3–74 விஜயா நாராயணன்



மிகமென்மையான பிளேடு-களையும், விண்வெளி பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன்.
கத்திமுனைபோல கூரான பிளேடுகளையும் விதவிதமான விநோத உலோகங்களடங்கிய பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன்.
வெட்டுக்காயங்களும், கீறல்களும், எரிச்சலும்தான் மிச்சம்.
கடைசியாக சில்வர் ப்ரின்ஸ் உபயோகித்துப் பார்த்தேன். முகக்ஷவரம் மழமழப்பாகவும், சுத்தமாகவும் இருந்தது... நிறைவேற்றமுடியாத உறுதிமொழிகளல்ல.
சில்வர் ப்ரின்ஸ்
சுத்தமான, மழமழப்பான க்ஷவரத்தைத் தரும்...
உறுதிமொழியை நிறைவேற்றிடும் பிளேடு.
SILVER PRINCE
STAINLESS
ஸில்வர் ப்ரின்ஸ்–சுகமான க்ஷவரம்...சொகுசான க்ஷவரம்
ங்கள் சில்வர் ப்ரின்ஸ் கொண்டு மழமழப்பாகவும், சுத்தமாகவும் க்ஷவரம் செய்து கொள்ளலாம். ஏனெனில் இறக்குமதியான மிகச் சிறந்த ஸ்டெயின்லெஸ் டீலில். இந்தியாவில் அதி முன்னேற்றமான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப் படுகிறது சில்வர் ப்ரின்ஸ். நீங்களும் சுகமான க்ஷவரத்தைப் பெறுகிறீர்கள். எனவேதான் சில்வர் ப்ரின்ஸ் முகக்ஷவரத்தை சுகக்ஷவரம் என்கிறோம்.
SILVER
PRINCE
STAINLESS
Grant.S.TM

நாகரீகத்தின் வரலாறு



ஆதி மனிதன், குகைகளில் வசித்து வந்தான்; அங்கு, தான் வாழ்ந்ததை சுமக்குப் புலப்படுத்த, ஓவியங்களை தன் போக்கில் கிறுக்கிவைத்தான். பின்னர், கட்டிடம் கட்டக் கற்றுக்கொண்ட அவன், சாலச் சிறந்த கட்டிடப் பொருளைத் தேடிக் கண்டறியும் ஆராய்ச்சியில் இறங்கினான்: நூற்றாண்டு காலமாய், களிமண், வைக்கோல், கல், மூங்கில் போன்றவற்றைப் பயன்படுத்தினான்; இன்னமும் மேலான பொருள்களையே தேடி ஆராய்ந்து, இறுதியில் அதைக் கண்டறியவும் செய்தான். கிரந்தரமாக நீடித்திருக்கும், உறுதி வாய்ந்த ராக்:போர்ட் ப்ராண்ட் டால்மியா சிமெண்டைப் பயன்படுத்தி, இன்று அவன் கட்டிடம் எழுப்புகிறான்.

ராக்:போர்ட்

ப்ராண்ட்

டால்மியா சிமெண்ட்

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்.,
பதிவு அலுவலகம் மற்றும் தொழிற்சாலை:
டால்மியாபுரம், தமிழ்நாடு.
தலைமையகம்: 4, சிந்தியா ஹவுஸ், புதுதில்லி-1

GOVAN

நாகசக்தி

**வைகுண்ட ஏகாதசியும்
சிவராத்திரியும் உள்ள வரையில்
தெய்விகப் படங்கள்
சக்கைப் போடு
போட்டுக் கொண்டுதான்
இருக்கும்!**

புண்ணிய தினத்தில் சினிமாப்படம் பார்க்கலாமா என்று சிலர் கேட்கலாம். ஆனால் சுவாமி படமாயிருந்தால் தோஷம் இல்லையென்ற கருத்து படம் பார்ப்பவர்களிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவி வருகிறதே!

''நாக சக்தி'' ஹிந்தியிலிருந்து தமிழில் 'டப்' செய்யப்பட்ட படம். சாதாரணமாக 'டப்பிங்' படங்கள் பல, தமாஷ் படங்களாகவே போனதை நான் பார்த்திருக்கிறேன். நடிக, நடிகையர்களின் உதட்டசைவுக்கும், படத்தில் பேசப்படும் வசனங்களுக்கும் தொடர்பு இல்லாமல், அசம்பாவிதமாகப் போய்விடுவதுதான் அந்த எதிர்பாராத 'தமாஷ்'களுக்குக் காரணம். ''நாக சக்தி'' யில் அவ்வித தமாஷ்கள் இல்லை. திருவேங்கடம், மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார். தமிழ்ப் பாடல்கள்கூடப் பொருத்தமாகவே 'டப்' செய்யப்பட்டிருக்கின்றன.

தந்திரக் காட்சிகளில் தலைசிறந்த கலைஞரான டைரக்டர், பாபுபாய் மிஸ்திரியின் திறமையைப் பரிபூரணமாகக் காண முடிகிறது. படத்தில் நடிக, நடிகையர்களின் பெயர்களைக் காட்டும்போதே அற்புதம் விளைவித்திருக்கிறார். ஈஸ்ட்மென் கலரில் படம் ஜொலிக்கிறது. காற்று, மழை, புயல் முதலிய உற்பாதங்களையெல்லாம் தத்ரூபமாகப் படம் பிடித்திருக்கிறார்.

படத்தின் டைரக்டர் பாபுபாய் மிஸ்திரியே ஒளிப்பதிவும் செய்திருக்கிறார், காண்போர் வியக்கும்விதமாக.

கடும் சிவபக்தனான மன்னன் சந்திரதரனுக்கு நாகலோகத்து அரசி மானஸாதேவியினால் பல சோதனைகள் இழைக்கப்படுகின்றன. சித்தத்தைச் சிவன்பால் வைத்த அம்மன்னன் அத்தனை கடுமையான சோதனைகளுக்கும் ஈடு கொடுத்துத் தன் மன உறுதியில் தளராமல் இருக்கிறான். எல்லாப் புராணக் கதைகளிலும் வருவது போல் சோதனைகளைக் கடந்து கதாநாயகன் தன் சாதனையின் பலனைப் பெறும் போது படம் முடிந்துவிடுகிறது!

மானஸா தேவி படத்தின் வில்லி. சசிகலா அந்தப் பாத்திரத்தை ஏற்று அருமையாக நடித்திருக்கிறார். கோரச் சிரிப்பும், கொடூரப் பார்வையும் அவரது வில்லி வேடத்துக்கு முழு 'மார்க்' போடுகின்றன.

கைலயங்கிரியில் சிவதாண்டவம், வைகுண்டத்தில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி முதலிய விசித்திரக் காட்சிகள் — மானஸாதேவியின் கோப, தாப, மிரட்டல்களுக்கு இடையில் மாறி மாறி வந்து விறுவிறுப்பூட்டுகின்றன.

பருளாவாக வந்து தம் நடிப்பினால் ரசிகர்களைக் கவர்பவர் ஜயஸ்ரீ கட்கர். கல்மனத்தையும் கரையச் செய்யும் நடிப்பு.

''நாக சக்தி''க்கு முழுமையையும், கம்பீரத்தையும் அளிப்பது பிருத்விராஜ்கபூரின் தோற்றமும், நடிப்பும்தாம்.

தாங்கொணாச் சோகத்தையும், தயக்கம் இல்லாத தீரத்தையும். மாற்ற இயலாத மனோதிடத்தையும் கொண்ட மன்னன் சந்திரதரனாக அவரைக் காணும்போது உள்ளம் பெருமிதம் கொள்கிறது. மிகப் பெரிய அரண்மனையில் மாமன்னன் ஒருவனையே நேரில் காண்பது போல் இருக்கிறது.


ஏமாற்றம் அளிக்காத காட்சிச் சிறப்புக்கள் கொண்ட படம் ''நாக சக்தி''. —காந்தன்





முகமூடித் திருடன்

நாடோடி



1916ம் வருஷம். அமெரிக்காவில் ஒரு பத்திரிகை தன் விற்பனையை அதிகரிப்பதற்காக யார் யார் சந்தா கட்டுகிறார்களோ, அவர்களுக்குக் கண்ணாடியாலான ஒரு பொம்மைத் துப்பாக்கி கொடுப்பது என்று ஏற்பாடு செய்தது. இந்தத் துப்பாக்கியின் அடிப்பாகத்தில் மிட்டாய்கள் இருக்கும்.

சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்த கார்லைல் என்னும் அந்தப் பதினாறு வயது இளைஞன் அந்தத் துப்பாக்கி ஒன்று தன்னிடம் இருந்தால் தேவலையே என்று நினைத்தான். அப்பொழுது என்று அந்தப் பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து ஒருவர் ஒரு பொம்மைத் துப்பாக்கியுடன் வெளியே வந்துகொண்டிருந்தார். தனக்கு அந்தத் துப்பாக்கி வேண்டும் என்றும் அவரால் கொடுக்க முடியுமா என்றும் கார்லைல் அவரைக் கேட்டான். சரி என்று அவர் அந்தக் கண்ணாடித் துப்பாக்கியை அவனிடம் கொடுத்தார்.

அந்தத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அவன் ஓர் ஓடும் ரயிலில் ஏறினான். வெள்ளைக் கைக்குட்டையினால் தன் முகத்தைப் பாதி மூடிக் கொண்டான். பிரயாணிகள் உட்கார்ந்திருந்த ஒரு பெட்டிக்குள் நுழைந்து அங்கிருந்த ஒரு போர்ட்டரை நோக்கி, (மேல் நாடுகளில் பயணிகளுக்கு உதவ ரயிலிலேயே போர்ட்டர்கள் இருப்பார்கள்) ''ஏதாவது பேசினால் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவேன். உன் தொப்பியைக் கையில் எடு'' என்றான்.

போர்ட்டர் தொப்பியைக் கையில் எடுத்தான். உடனே, கார்லைல் அங்குள்ள பிரயாணிகளைப் பார்த்து, ''நான் ஒரு ரயில் திருடன். எல்லோரும் கைகளை மேலே தூக்குங்கள். இந்தப் போர்ட்டர் தன் தொப்பியுடன் உங்கள் அருகில் வந்ததும், நீங்கள் வைத்திருக்கும் பணம், கடிகாரம், மோதிரம் எல்லாவற்றையும் அந்தத் தொப்பிக்குள் போடுங்கள். பிறகு திரும்பவும் கைகளை மேலே தூக்கிக் கொண்டு நில்லுங்கள். இல்லையோ, சுட்டுக் கொன்றுவிடுவேன்'' என்று பயமுறுத்தினான்.

எல்லோரும் கைகளை மேலே தூக்கிக் கொண்டு நின்றார்கள். போர்ட்டர் ஒவ்வொருவரிடமாகப் போக இவனும் போர்ட்டரைப் பின்தொடர்ந்தான். பிரயாணிகள் தங்களிடம் இருந்த பணம், கடிகாரம், மோதிரம் எல்லாவற்றையும் தொப்பியில் போட்டார்கள்.

ரயில் பக்கத்து ஸ்டேஷனை நெருங்கும் சமயம் மெதுவாகச் செல்ல ஆரம்பிக்கவே கார்லைல் தொப்பியில் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு கீழே குதித்து விட்டான்.

அன்றிலிருந்து கார்லைல் ரயில் திருடனாக மாறிவிட்டான். இப்பொழுது அவன் கையில் நிஜத் துப்பாக்கி இருந்தது. அவன் எப்பொழுதும் ஒரே மாதிரிதான் நடந்துகொள்ளுவான். முதலில் போர்ட்டரைப் பயமுறுத்தி, பிறகு அவனைத் தன் தொப்பியில் பணத்தைச் சேகரிக்கச் சொல்லுவான். ஆனால் பெண்கள் பயந்து கொண்டு தங்கள் பணத்தையோ, நகையையோ போட வந்தால், ''வேண்டாம் அம்மா. நான் பெண்களைக் கொள்ளையடிப்பதில்லை'' என்று சொல்லி அவர்களை விட்டுவிடுவான்.

ஒரு சமயம் அவனும் போர்ட்டரும் பக்கத்துப் பெட்டிக்குள் நுழைந்தபோது அங்கு ஒரே ஒரு பெண்தான் உட்கார்ந்திருந்தாள். அவள் இவனையும் இவன் துப்பாக்கியையும் கண்டு நடுங்க ஆரம்பித்தபோது, இவன், ''மன்னித்துவிடுங்கள். நான் பெண்களைக் கொள்ளை யடிப்பதில்லை'' என்று சொல்லி விட்டுத் திரும்பி விட்டான்.

ஒரு சமயம் வழக்கம்போல் இவன் துப்பாக்கியை நீட்டியவாறு போர்ட்டர் பின் சென்று கொண்டிருந்தபோது, ''இன்னொரு பிரயாணி ஒரு கையை மாத்திரம் தூக்கிக் கொண்டிருந்தார். இதைக் கண்டதும் கார்லைல் கோபித்துக் கொண்டு, ''இன்னொரு கையையும் மேலே தூக்கு'' என்று அதட்டினான். ஆனால் அந்தப் பிரயாணியின் தூக்கப்படாத சட்டையின் கை அந்தப் பக்கம் தொள தொளவென்று தொங்குவதைப் பார்த்து விட்டு ''என்னை மன்னித்துவிடுங்கள். உங்களுக்கு ஒரு கை கிடையாது என்பதை நான் கவனிக்கவில்லை'' என்று சொன்னான். பிறகு கைகளைத் தூக்கிக் கொண்டு உட்கார்ந்



இருந்த பெண்களைப் பார்த்து, ''கைகளைக் கீழே போடுங்கள். நான் பெண்களைக் கொள்ளையடிப்பதில்லை'' என்றான்.

இம்மாதிரி பல தடவைகள் அவன் ரயிலில் கொள்ளையடித்தும் போலீஸாரால் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு சமயம், இந்த ரயில் திருடனைப் பிடித்துவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. கார்லேல் என்று நினைத்துக் கொண்டு போலீஸார் வேறு யாரையோ கைது செய்து வைத்திருந்தார்கள்.

அடுத்த நாளே ''போஸ்ட்'' என்னும் பத்திரிகைக்கு ''முகமூடித் திருடன்'' என்று கையெழுத்திட்டு ஒரு கடிதம் வந்தது.

''போலீஸார் பிடித்து வைத்திருப்பது முகமூடித் திருடனான என்னையல்ல, வேறு யாரோ ஓர் அப்பாவியை. உங்கள் சந்தேகத்தைத் தீர்க்க நான் போன கொள்ளையில் திருடிய ஒரு கடிகாரச் சங்கிலியை இத்துடன் அனுப்பியுள்ளேன். அதை அதன் சொந்தக்காரரிடம் சேர்த்து விடுங்கள். கடிகாரத்தைப் பின்னர் அனுப்பி வைக்கிறேன்.

''நான் சொல்வதில் உங்களுக்கு இன்னும் சந்தேகம் இருந்தால் இதையும் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று தான் மறு நாள் இன்ன ரயிலில் கொள்ளை யடிக்கப் போவதாகக் குறிப்பிட்டிருந்தான்.

இது ஒரு பொய்க் கடிதம் என்று நினைத்துப் போலீஸார் வாளாவிருந்தனர். ஆனால், அடுத்த நாளே முகமூடித் திருடன் அதே ரயிலைக் கொள்ளையடித்தபோது அவர்கள் திகைத்து நின்றனர்.

அடுத்த நாளே போலீஸார் முகமூடித் திருடன் 'போஸ்ட்' பத்திரிகைக்கு எழுதிய



மனிதன் தோற்றான் ஆயுதம் வென்றது!

இன்றைய வைத்திய உலகின் சஸ்த்திர சிகிச்சைப் பிரிவில் மகத்தான சாதனை இதய பரிவர்த்தனை.

இது எத்தகைய மனக் கொந்தளிப்புக்களை விளைவிக்கக் கூடும் என்பதைக் கற்பனை செய்திருக்கிறார்கள் இந்த மலையாளப் (''சஸ்திரம் ஜெயிச்சு, மனுஷன் தோத்து'') படத்தில்.

ஓர் இளம் பெண், கல்யாணத்துக்கு முந்தியே இதய நோய் கண்டவள், கல்யாணத்துக்குப் பிறகு ஒரு முறை இதய நோய் வருகிறது.

ஓர் இளம் நடனமாடும் பெண்மணி ஒரு விபத்துக்குள்ளாகி உயிர் துறக்கும் நிலையிலுள்ளாள். அவள் கணவனிடம் வாதாடி, அவள் இதயத்தை நன்கொடையாகப் பெறுகிறார் டாக்டர். முதலில் கூறப்பட்ட இதய நோயுற்ற பெண்ணுக்கு அது பொருத்தப்பெற்று அவள் சௌக்கியமாக உயிர்த்தெழுகிறாள்.

இதற்குப் பிறகுதான் கதையில் புயல் வீசுகிறது.

உயிர் எப்பொழுது பிரிகிறது? உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பின் செயலும் அடங்கி, கடைசியாக இதயத் துடிப்பும் நின்ற பிறகே அக்கூட்டிலிருந்து ஆத்மா பிரிகிறது. இப்படிப் பிரிய வேண்டிய அந்த நடனப் பெண்ணின் ஆத்மாவை, அதற்கு அனுமதியாமல் அவள் இதயத்தை வேறோர் உடலில் பொருத்தி இயங்க வைத்தால் அந்த ஆத்மா அமைதி இழந்து அல்லல் படாதா? அப்படித்தான் நடன மாதின் ஆத்மா இந்தப் பெண்ணின் இதயத்தில் புகுந்து சொல்ல முடியாத அவஸ்தைப் படுகிறது. அதற்கு விடுதலை தரவேண்டும் என்று உள்ளூர் மக்கள் சொல்லி வைக்கிறார்கள். இதிலிருந்து அந்தப் பெண் (ஜெயபாரதி) அந்த நடன மாது (நிர்மலா) தன்னைக் கனவிலும் நனவிலும் துரத்தி வருவதாகப் பிரமை கொள்ளுகிறாள்.

நடன மாதின் கணவனிடம் சென்று, உயிர்க் காதலியின் இதயத்தை வழங்கியதன் மூலம் அவள் ஆத்மா அமைதியின்றி அலையும்படி செய்து விட்டதாக உள்ளூர் மக்கள் சொல்லுகிறார்கள்.

இதற்குப் பரிகாரம் தன் மனைவியின் இதயத்தை யார் பெற்றிருக்கிறானோ அவனைக் கொலை செய்வதே என்ற முடிவுக்கு வருகிறான் அவன்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் இப்படிக்கூட ஒரு மூட நம்பிக்கை மக்களிடம் இருக்குமா என்ற கேள்விக்கு உண்டு என்று தாங்களே பதில் வழங்கிக் கொண்டு கதையைப் பின்னியிருக்கிறார்கள்.

பிரேம் நஸீர், பரதன், ஜெயபாரதி, நிர்மலா திக்குரிசி, பாலன் முதலிய தேர்ந்த நடிகர்கள் நடித்திருக்கிறார்கள். பாடல்களும் நகைச் சுவைக் காட்சிகளும் ரசிக்கும்படி உள்ளன.

-எஸ்.வி.எஸ்.

கடிதத்தை அப்படியே 'பிளாக்' செய்து எல்லாத் தினசரிகளிலும் பிரசுரித்தார்கள். அதைப் பார்த்த ஒரு விவசாயி, தம்மிடம் ஒரு சமயம் வேலை செய்த கார்லைல் என்னும் ஆளின் கையெழுத்துப் போல இருக்கிறது என்று போலீஸாரிடம் தகவல் கொடுத்தார்.

சில நாட்கள் சென்றன. 'போஸ்ட்' பத்திரிகைக்குத் தபாலில் ஒரு கடிகாரம் வந்தது. அதை அதன் சொந்தக்காரரிடம் திருப்பித் தரும்படி அந்த முகமூடி மனிதன் கடிதம் எழுதியிருந்தான். அதோடு இன்னும் இரண்டு நாட்களில் தான் அதே யூனியன் பசிபிக் கம்பெனி ரயிலைக் கொள்ளை யடிக்கப் போவதாகவும் எழுதி யிருந்தான்.

இரண்டு நாட்கள் கழித்து யூனியன் பசிபிக் கம்பெனி ரயில் ஒன்றில், ஒரு ரயில்வே போலீஸ் அதிகாரி தம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கனவானிடம் பேசிக் கொண்டிருந்தார். அந்த முகமூடி ரயில் திருடனைப் பிடிப்பதற்காகத்தான் தாம் வந்திருப்பதாகச் சொன்னார்.

ரயில் அடுத்த ஸ்டேஷனில் நின்றது. அந்த ரயில்வே போலீஸ் அதிகாரி கீழே இறங்கிச் சுற்று முற்றும் பார்த்தார். பிறகு ரயில் புறப்பட ஆரம்பித்தபோது யாரோ பயத்தினால் அலறும் சத்தம் கேட்கவே ரயிலில்

டி. ஐ. ஐ. ஸி.

வெள்ளி விழா சலுகை!

முதல் மாநில அபிவிருத்தி நிதி நிறுவனம்

சிறு தொழில் வளர்ச்சிக்காகத் தனது

வெள்ளி விழாக் காலத்தில் அளிக்கும் நிதியுதவி திட்டம் 90%

டிஐஐஸி — இப்பொழுது சிறு தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாகத் தாராளமாக கடன் வசதி வழங்கும் திட்டத்தின்படி சுலபமான தவணைமுறையில் திருப்பிச் செலுத்திடும் வகையில் குறைந்த வட்டிக்கு 90% நிதியுதவி அளிக்கிறது.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க:

தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்

"அருள்மணை" 26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை - 600014

கிளைகள் :

1231, தெற்கு மெயின் ரோடு, தஞ்சாவூர்
247, நாயக்கர் புதுத் தெரு, மதுரை
6/37, ரேஸ்கோர்ஸ்ரோடு, கோயம்புத்தூர்
ஜெயஸ்ரீ & கோ., பில்டிங்ஸ் (முதல்மாடி)
ஃபேர்லேண்ட்ஸ், சேலம் - 636004

டி ஐ ஐ ஸி

இதயபூர்வமான நிதியுதவி,

டிஐஐஸி - வெள்ளி விழா ஆண்டு (1949 - 1974)

Mr. S. N. PAI, Managing Director

ஏறினார். அங்கு தம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கனவான் முகமூடி அணிந்த திருடனாக மாறியிருக்கக் கண்டார்.

"நான்தான் நீங்கள் பிடிப்பதற்காக வந்துள்ள முகமூடி மனிதன் கார்லைல். உங்கள் துப்பாக்கியை உயர்த்தாமல் எடுத்து என்னிடம் கொடுக்கப் போகிறீர்களா இல்லை, நான் உங்களைச் சுட்டுக் கொல்ல வேண்டுமா?"

போலீஸ் அதிகாரி தம் துப்பாக்கியைக் கொடுத்தார். வழக்கம் போல் போர்ட்டர் தன் தொப்பியுடன் ஒவ்வொருவரிடமாகச் சென்றான். தொப்பியில் பணமும், கடிகாரங்களும், மோதிரங்களும் குவிந்தன. பெண்களை மட்டும் அவன் தொடவில்லை.

அந்தச் சமயம் ரயில் ஒரு கணவாய்க்குள் நுழைந்து கொண்டிருந்தது. அப்போது, திடீரென்று கார்லைல் ரயிலிலிருந்து கீழே குதித்து விட்டான். அப்படிக் குதித்ததில் கார்லைலின் ஒரு கால் சுளுக்கிக் கொண்டு விட்டது.

நொண்டிக்கொண்டே கார்லைல் பல நாட்கள் ஒளிந்து கொண்டிருந்தான். ஆனால் போலீஸார் ஒரு நாள் அவனைச் சூழ்ந்து கொள்ளவே, கார்லைல் வெளியே வந்தான்.

"நான்தான் கார்லைல். நீங்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போகலாம். இத்தனை நாட்கள் நான் உங்களுக்கு டிமிக்கி கொடுத்தேனே, அதுவே போதும்" என்று சொன்னான்.

விசாரணை நடந்தது. கார்லைல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டான். சிறையில் வெகு சாதுவாக நடந்து கொண்டான். அவன் நடத்தையைப் பார்த்த சிறை அதிகாரிகளுக்கு அவன் மீது இரக்கம் உண்டாயிற்று. அவன் திருந்தி விட்டான் என்றும், அவனுடைய சிறைத் தண்டனையைக் குறைக்க வேண்டும் என்றும் அவர்கள் கவர்னருக்கு மனுச் செய்தார்கள். தண்டனை குறைக்கப்பட்டது. அதாவது அவன் தொடர்ந்து சிறையில் நல்லபடியாக நடந்தால் பத்து வருடங்களில் சிறையை விட்டு வெளியேறலாம். ஆனால் பத்து வருட காலம் யார் சிறையில் கிடப்பது?

கார்லைல் அப்போது சிறையில் ஷர்ட்டுகள் தைத்து வெளியே அனுப்பும் இலாகாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். பெரிய பெரிய பெட்டிகளில் ஷர்ட்டுகளை வைத்து அனுப்புவதுதான் அவனுடைய வேலை.

ஒரு நாள் ஷர்ட்டுகள் அனுப்பப்படும் பெட்டியின் நீள அகலங்களைக் கணக்குப் பார்த்தான். அதில்தான் ஒளிந்துகொள்ள முடியும் என்று தெரிந்ததும் சந்தோஷப் பட்டான்.

சில நாட்களுக்குப் பிறகு தன் சக கைதிகளின் உதவியுடன் ஒரு பெட்டியில் ஒளிந்து கொண்டு சிறையிலிருந்து தப்பினான்.

தப்பினவன் மீண்டும் ரயிலில் கொள்ளையடிப்பது என்று தீர்மானித்து ஓர் ஓடும் ரயிலில் ஏறினான். அத்தனை பேரும் யுத்தத்திலிருந்து திரும்பும் ராணுவ வீரர்கள்! ஒவ்வொருவர் பக்கத்திலும் ஒரு துப்பாக்கி இருந்தது!

கார்லைல் சமாளித்துக் கொண்டு "நான் ஒரு ரயில் திருடன். நான் ராணுவ வீரர்களையோ, பெண்களையோ கொள்ளையடிப்பதில்லை" என்று சொல்லி விட்டு அடுத்த பெட்டிக்குள் சென்று அங்குள்ள பிரயாணிகளைக் கொள்ளையடித்து விட்டுக் குதித்தான்.

அந்தச் சமயம் சில ராணுவ வீரர்கள் அவனைப் பார்த்துச் சுடவே, அவனுக்குக் கைகளிலும், கால்களிலும் நல்ல அடி. இருந்தும் அதோடு தப்பித்துக் கொண்டு அவன் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டான்.

ஐந்நூறு போலீஸ்காரர்கள் அவனை எல்லா இடங்களிலும் தேடினார்கள். அவன் அகப்படவில்லை. சில நாட்கள் கழித்து ரயில்வே அதிகாரிக்கு கார்லைலிடமிருந்து ஒரு தந்தி கிடைத்தது. "உங்கள் ரயிலில் எனக்கு நல்ல கொள்ளை கிடைத்தது. நன்றி — கார்லைல்." இதுதான் தந்தி.

இன்னும் சில நாட்களுக்குப் பிறகு ஒரு பத்திரிகைக்கு அவனிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. "என்ன, கார்லைலைப் பிடிக்க முடிந்ததா!" என்பதுதான் அவன் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதம்!

சீக்கிரமே போலீஸாருக்கு அவனிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. "கவலைப் படாதீர்கள். நான் சீக்கிரமே உங்களிடம் வந்து சேர்ந்து விடுவேன்" என்பதுதான் அக்கடிதம். அதனுடன் கூட ஒரு பழைய புகைப்படம் இருந்தது. போலீஸார் அவனை முன் ஒரு தடவை கைது செய்தபோது எடுக்கப்பட்ட படம் அது.

போலீஸார் அவனை இன்னும் தீவிரமாகத் தேடத் தொடங்கினார்கள். ஆனால் அந்தப் பிரதேச வாசிகளோ இத்தனை சாமர்த்தியமாகச் செயல்படும் கார்லைல் மீது விநோதமான அன்பு கொண்டு அவனை ஒளித்து வைத்துக் கொண்டேயிருந்தார்கள். சமயத்தில் அவனை வைக்கோல் வண்டியில் ஒளித்து வைத்து ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு அனுப்பினர்.

கடைசியில் போலீஸார் அவன் இருந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து விட்டார்கள். கார்லைல் தூக்கிய கைகளுடன் வெளியே வந்தான். ஆனால் ஒரு போலீஸ் அதிகாரி சடாரென்று அவனைப் பார்த்துச் சுட்டு விட்டார்.

நல்லவேளை, கார்லைல் சீக்கிரமே குணமாகிச் சிறை சென்றான். பழைய வார்டனைப் பார்த்து, "கவலைப்படாதீர்கள். நான் திரும்பவும் வந்து விட்டேன். ஆனால் இந்தத் தடவை நான் உண்மையிலேயே திருந்தி விட்டேன்" என்றான்.


சிறையின் பாதிரி இவனுக்கு நண்பராகவே இவன் நிறைய மத நூல்களைப் படிக்க ஆரம்பித்தான். உண்மையிலேயே நல்லவனாக மாறிவிட்டான். அவனது நல்ல குணத்தைக் கண்ட பாதிரி அவனை விடுதலை செய்யும்படி அதிகாரிகளுக்கு மனுச் செய்து கொண்டார். கடைசியில் அலுத்துப் போய், "கார்லைலுக்குப் பதில் என்னை வேண்டுமானால் சிறையில் அடையுங்கள். ஆனால் கார்லைலை விடுதலை செய்து விடுங்கள்" என்று எழுதினார்.

கடைசியில் அவன் விடுதலை ஆனான். விடுதலை ஆன பிறகு அவன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு குற்றம் செய்வது எவ்வளவு தவறு என்பது பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தான்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

யூகோ பாங்கில்

இப்பொழுது உங்கள் ஃபிக்ஸட் டிபாஸிட் 9% க்கு மேலாக பயனுடைய வட்டி பெறுகிறது



ரெக்கரிங் டிபாஸிட்டுடன்
ஃபிக்ஸட் டிபாஸிட்டை
இணைப்பது மூலம்!

மற்ற விவரங்களுக்கு
உங்கள் அருகிலுள்ள
யூகோபாங்க் கிளையுடன்
தொடர்பு கொள்ளுங்கள்.

தாங்களே
தங்களுக்கு
உதவ மக்களுக்கு
லாபகரமாக
உதவுகிறது

யூனைடெட் கமர்ஷியல் பாங்க்

UNITED COMMERCIAL BANK

UCOC.19 TAM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)